# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 கார்த்திகை 01 புதன்கிழமை (17.11.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 356


# வடக்கு அடாவடித்தனங்களின் பின்னணியில் புலனாய்வுப் பிரிவு

## தாக்குதலுக்குள்ளான சுனில் ஹந்துன் நெத்தி குற்றச்சாட்டு



கொழும்பு, நவம்பர் 17

வடக்கு - கிழக்கில் தற்போது அரச பயங்கரவாதம் கட்டவிழ்த்து விடப்பட்டு இராணுவ ஆட்சி நடக்கிறது. கோத்தபாய ராஜபக்ஷ அங்கு அடாவடித்தனங்களுக்கு இராணுவப் புலனாய்வுப் பிரிவைப் பயன்படுத்துகின்றார்.

யாழ். நகரில் தாக்குதலுக்குள்ளான ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன் நெத்தி நேற்றுக் காலை நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் இவ்வாறு குற்றஞ்சாட்டினார்.

ஜே.வி.பியின் செய்தியாளர் மாநாடு நேற்றுக் காலை பத்தரமுல்ல, பெலவத்தயிலுள்ள அதன் தலைமையகத்தில் நடைபெற்றது.

சுனில் ஹந்துன்நெத்தி எம்.பி. தொடர்ந்து கூறியவை வருமாறு:-

வடக்கு-கிழக்கில் இராணுவ ஆதிக்கத்தை முன்னெடுப்பதற்காகவே யுத்தம் முடிவுற்று 18 மாதங்கள் கடந்த பின்னரும் 2011ஆம் ஆண்டுக்கான பாதுகாப்புக்கான நிதி அதிகரிக்கப்பட்டுள்ளது.

யாழ். நகரில் எம் மீது நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பாக பொலிஸார்( 04 ஆம் பக்கம் பார்க்க)

## உள்ளூராட்சித் தேர்தல் சட்டமூலம் அரசமைப்புக்கு முரணானது அல்ல

### உயர்நீதிமன்றத் தீர்ப்பு சபாநாயகரால் அறிவிப்பு

கொழும்பு, நவ. 17

உள்ளூராட்சி மன்றங்கள் (சிறப்பு ஏற்பாடுகள்) மற்றும் உள்ளூராட்சிமன்ற தேர்தல்கள் திருத்தச் சட்டமூலங்கள் இலங்கை அரசமைப்புக்கு முரணானவை அல்ல என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கி உள்ளது.

இதனை சபாநாயகர் சமல் ராஜபக்ஷ நேற்று நாடாளுமன்றத்தில் உத்தியோகபூர்வமாக அறிவித்தார்.

நாடாளுமன்றத்தில் முன் வைக்கப்பட்ட உள்ளூராட்சி மன்றங்கள், சிறப்பு ஏற்பாடுகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள், (02 ஆம் பக்கம் பார்க்க)




# நடேசன், புலித்தேவன், ரமேஷ் சரணடைய முயற்சிக்கவில்லை

# யுத்தத்தின்போதே அவர்கள் மூவரும் கொல்லப்பட்டனர்



## மேஜர் ஜெனரல் சவேந்திரா தொடர்ந்து சாட்சியம்

கொழும்பு, நவ.17

தமிழீழ விடுதலைப் புலிகளின் சமாதான செயலகப் பணிப்பாளர் புலித்தேவன், அரசியல் துறைப் பொறுப்பாளர் நடேசன் மற்றும் புலிகளின் தளபதிகளில் ஒருவரான கேணல் ரமேஷ் ஆகியோர் யுத்தத்தின் போதே கொல்லப்பட்டனர் என்று ஐக்கிய நாடுகளுக்கான இலங்கையின் பிரதி வதிவிடப் பிரதிநிதி மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா நேற்று மேல்நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

வெள்ளைக்கொடி விவகாரம் தொடர்பான வழக்கு விசாரணை மேல்நீதிமன்ற நீதிபதிகளான தீபாலி விஜேசுந்தர, எச்.என்.பி.பி. வராவெல, சர்பிக் ரஷீக் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இதன்போது பிரதி சொலிசிட்டர் ஜெனரல் வசந்த நவரட்ண பண்டாரவினால் கேட்கப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

58ஆவது படைப்பிரிவின் கட்டளைத் தளபதியாக செயற்பட்டவரும், வெள்ளைக்கொடி வழக்கில் மூன்றாவது சாட்சியாளருமான மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா நேற்று இரண்டாவது நாளாகவும் குறுக்கு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார். அதன்போது கேட்கப்பட்ட கேள்விகளும் - பதில்களும் வருமாறு:-

கேள்வி:- சரணடைந்தவர்கள் தொடர்பாக நேற்றுமுன்தினம் நீங்கள் சாட்சியமளித்தீர்கள். சரணடைந்தவர்களை எங்கு தங்கவைத்தீர்கள்?

பதில்:- அவர்கள் அனைவரையும் ஒரு திட்டத்தின்படி தங்கவைத்தோம். முதலில் அவர்களை உடல் பரிசோதனைக்கு உட்படுத்தினோம். அதன் பின்னர் அவர்களுக்கு உணவு, தண்ணீர் வழங்கினோம். கிளிநொச்சி மற்றும் வவுனியா ஆகிய பகுதிகளில் தங்கவைத்தோம். கட்டளைத் தளபதி என்ற வகையில் அவர்களைப் பார்த்துக்கொள்ள நான் அதிகாரிகளையும் நியமித்தேன்.

கே:- இறுதி யுத்தம் எந்தப் பிரதேசத்தில்(28ஆம் பக்கம் பார்க்க)

### யாழ். நாக விகாரையில் புத்தரின் புதிய சிலை திறப்பு

யாழ்ப்பாணம், நவ. 17

யாழ். ஸ்ரீ நாக விகாரையின் வருடாந்த மகோற்சவம் நாளை வியாழக்கிழமையும் மறுநாளும் இடம்பெறவுள்ளது.

நாளை மாலை 5.30 மணிக்கு விகாரையில் புதிதாக அமைக்கப்பட்ட புத்த பெருமானின் சிலை திறந்து(27 ஆம் பக்கம் பார்க்க)

## அரச ஊழியருக்கு முதல் கட்டமாக ரூ. 4,500 சம்பள உயர்வு வழங்குக

### எதிர்க்கட்சித் தலைவர் ரணில் கோரிக்கை

கொழும்பு, நவ.17

வாழ்க்கைச் செலவு அதிகரிப்புக்கு ஏற்ப அரச ஊழியர்களுக்கு இந்த வரவு - செலவுத் திட்டத்தில் முதற்கட்டமாக 4,500 ரூபா சம்பள உயர்வு வழங்கப்படவேண்டும். அடுத்த வருட இறுதிக்குள் எமது கோரிக்கையான 10,000 ரூபா சம்பள உயர்வில் எஞ்சியதைக் கட்டம் கட்டமாக வழங்க நடவடிக்கை (02 ஆம் பக்கம் பார்க்க)

## 'பிரித்' ஓதுவதால் வெள்ளத்தை எப்படி தடுத்துவிட முடியும்?

### இப்படிக் கேள்வி எழுப்புகிறது ஐ.தே.கட்சி

கொழும்பு, நவ.17

நாடாளுமன்றத்தில் 'பிரித்' ஓதுவதால் வெள்ளத்தைத் தடுத்துவிட முடியுமா? அங்கு நிறைவேற்றப்படும் சட்டமூலங்கள் மக்களுக்கு நன்மையளிக்கும் பட்சத்தில் நாடாளுமன்றம் வெள்ளத்தில் மூழ்குவதைத் தடுக்க முடியும் - இவ்வாறு தெரிவித்தார் ஐ.தே.கட்சிப் பொதுச் செயலாளர் (27 ஆம் பக்கம் பார்க்க)


உலகத்தரம் வாய்ந்த டையில்களை நாட வேண்டிய ஒரே இடம்

நவீன் செரமிக்



Naveen Ceramic PVT LTD

212, Palaly Road, Jaffna.

Tel : 212220033 / 212220044


## எதிர்காலத்தில் இந்துக் கோயில்களிலும் தொல்லியல் ஆய்வு நடத்தத் திட்டம்

### பணிப்பாளர் நாயகம் செனரத் தகவல்

யாழ்ப்பாணம், நவ. 17

இதுவரை கந்தரோடை பௌத்த விகாரை மற்றும் புராதன இந்துக் கோயில்கள் தொல்லியல் ஆய்வுக்காக இனங்காணப்பட்டுள்ளன. அவை பற்றிய தகவல்களைத் திரட்டி வருகின்றோம். தற்போது கோட்டையில் மேற்கொள்ளப்படுகின்ற ஆய்வு எதிர்காலத்தில் இந்துக் கோயில்[illegible] பொருள்உள்ள இடங்களிலும் இடம்பெறும்.

இவ்வாறு தெரிவித்தார் இயற்கைத், தொல்லியல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி செனரத் திஸநாயக்க தெரிவித்தார்.

வடபகுதியில் உள்ள தொல்லியல் [illegible]யாளப் படுத்தவும், அவற்றை இனங்காண்பதற்கும் தமிழ் மக்கள் உதவ வேண்டும் எனவும் பணிப்பாளர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் தொல்லியல் திணைக்களத்தின் நடவடிக்கைகள் குறித்து கேட்ட போதே (27 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# வன்னியின் கோர அழிவுகளுக்கு பின்னணியில் செயற்பட்டோர் இன்று அம்மக்களுக்கு உதவ முண்டியடிக்கின்றனர்

## முரசு மோட்டையில் மாணவர்கள் மத்தியில் சரவணபவன் எம்.பி எடுத்துரைப்பு

முரசுமோட்டை, நவ.17

வன்னியின் கோரமான அழிவுகளுக்குப் பின்னணியில் இருந்து செயற்பட்டவர்கள் இன்று அபிவிருத்தி என்ற போர்வையில் உதவ முண்டியடிக்கின்றனர். வீடுகள், குடியிருப்புக்கள், உடைமைகள் எல்லாவற்றையும் அழித்தொழித்து நிர்மூலமாக்குவதற்கு தோள் கொடுத்தவர்கள் தற்போது வீடுகளைக் கட்டித்தர ஓடோடி வந்துள்ளார்கள். இந்தச் சூழ்ச்சிகளை எம் மக்கள் உணர்ந்து செயற்பட வேண்டும்.



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகளுக்கு அவர் நேற்று முன்தினம் விஜயம் மேற்கொண்டபோது, முரசுமோட்டை முருகானந்தா வித்தியாலயத்தில் மாணவர்கள் மத்தியில் உரையாற்றுகையில் இப்படிக் கூறினார்.

அங்கு அவர் மேலும் பேசுகையில் கூறியவை வருமாறு-

கிழக்கு மாகாணத்தில் சிங்களக் குடியேற்றம் காரணமாக தமிழ் வாக்காளர்களின் எண்ணிக்கை எவ்வாறு குறைவடைந்ததோ, அதே நிலையை வடக்கிலும் தோற்றுவிக்க முயற்சி எடுக்கப்படுகிறது.

வடக்கு, கிழக்கில் தமிழ் மக்களின் ஆதிக்கம் இருப்பதை விரும்பாத அண்டை நாட்டின் செயற்பாடுகளின் பின்னணியிலேயே சிங்களக் குடியேற்றம் ஊக்குவிக்கப் படுவதாகக் கருதப் படுகின்றது. இந்நிலையையிட்டு மக்கள் அவதானமாக இருக்க வேண்டும், விழிப்புடன் இருக்க வேண்டும்.

வடக்கின் அழிவுக்கு காரணமானவர்களே இன்று போட்டி போட்டுக் கொண்டு அபிவிருத்திக்கு உதவ முன்வந்துள்ளனர். அழிவுக்கு காரணமானவர்களே ஆக்கத்துக்கும் உதவ வேண்டும் என்பது நியதி.

அவர்கள் வழங்க முன்வந்துள்ள உதவிகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும். அதே நேரம் எமது உரிமைகளை யாருக்காகவும் விட்டுக் கொடுக்கக் கூடாது. உரிமைகளுக்காக போராடும் ஒரே கட்சி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தான்.

புலம்பெயர்ந்த மக்கள் வன்னி மக்களுக்கு உதவத் தயாராக இருக்கிறார்கள். அவர்களை ஒருங்கிணைத்து நாங்கள் உங்களுக்கு முடியுமான உதவிகளைப் பெற்றுத் தருவோம். எம்மால் செய்யக் கூடியவை எல்லாவற்றையும் செய்யத் தயாராக இருக்கிறோம்.

மக்கள் மிகவும் அவதானமாகச் செயற்பட்டு தமது அரசியல் பயணத்தில் முன் செல்ல வேண்டும். என்றார் அவர்.

(ஒ-ஐ-5)

# காணாமற் போனவர்கள் பற்றி வடக்கில் 500 முறைப்பாடுகள்

## நல்லிணக்க ஆணைக்குழுவிடம்

கெழும்பு, நவ.17

வடக்கில் இதுவரை காணாமல் போனவர்கள் பற்றி 500 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகக் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் சிரேஷ்ட அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் விசாரணை நடத்திய காலப் பகுதியிலேயே மேற்கூறிய முறைப்பாடுகள் கிடைத்துள்ளன எனவும் அவர் மேலும் கூறினார்.

யுத்த காலத்தில் காணாமல் போனவர்களுக்கு மேலதிகமாக தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டவர்கள், அரசிடம் சரணடைந்தவர்கள் ஆகியோர் பற்றிய விவரங் கள் இதுவரை தங்களுக்குக் கிடைக்கவில்லையென காணாமல் போனவர்களின் பெற்றோர்கள் மற்றும் உறவினர்கள் ஆணைக் குழுவிடம் முறையிட்டுள்ளனர்.

ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்ட 500 முறைப்பாடுகளில் பெரும்பாலானவற்றில் அரசிடம் தஞ்சமடைந்த முன்னாள் புலி உறுப்பினர்களை மீட்டுத்தருமாறு கோரப்பட்டுள்ளது என பொலிஸ் உயரதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம், கைதடி, மானிப்பாய், வல்வெட்டித்துறை, கோப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை ஆகிய பிரதேசங்களில் இருந்தே பெருமளவு முறைப் பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக அவர் மேலும் கூறியுள்ளார். (த-5)

# நிதி மோசடியை நிரூபித்தால் எம்.பி. பதவியிலிருந்து ராஜினாமா

## அடித்துக் கூறுகிறார் விநாயகமூர்த்தி

யாழ்ப்பாணம், நவ. 17

நான் நிதி மோசடியில் ஈடுபட்டமை உறுதிப்படுத்தப்படுமானால் எனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை உடன் இராஜினாமாச் செய்வேன்.

அரசியல் போட்டி காரணமாக விசமத்தனமான பிரசாரங்கள் வெளியிடப்படுகின்றன. இவ்வாறு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் அ.விநாயகமூர்த்தி தெரிவித்தார்.

கொக்குவில் கருவேலடியில் உள்ள அவரது இல்லத்தில் நேற்றுப் பிற்பகல் 4 மணியளவில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு :-

விடுதலைப்புலிகளின் உறுப்பினரான எழிலன் விடுதலை தொடர்பாக அவரது மனைவி எனக்கு ஒரு கடிதம் அனுப்பியிருந்தார். அதனையடுத்து அவரை விடுதலை செய்யுமாறு பயங்கரவாதத் தடுப்புப் பிரிவின் அத்தியட்சகருக்குக் கடிதமொன்றை அனுப்பியிருந்தேன்.

அதன்பின்னர் மேஜர் மதியழகன் என்பவர் என்னுடன் தொடர்புகொண்டு எழிலன் உயிருடன்தான் இருக்கிறார். நீங்கள் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவின் அத்தியட்சகருக்கு அனுப்பிய கடிதம் என்னிடம் தான் உள்ளது. எழிலன் விடுதலை பற்றி அவரது மனைவியுடன் கதைக்க வேண்டும் - என்றார். அதன் பின்னர் அவரே எழிலனின் மனைவியின் தொலைபேசி இலக்கத்தையும் சொன்னார்.

பின்னர் மேஜர் மதியழகன் எழிலனின் மனைவியுடன்தொலைபேசியில் தொடர்புகொண்டு எழிலனை விடுதலைசெய்யக் கப்பம் கோரியதாக அறிந்தேன். இதுபோன்ற சம்பவம்தான் விடுதலைப்புலிகள் இயக்கத்தின் உறுப்பினர்களான ந.நிதர்ஷன், சுதாமாஸ்ரர் ஆகியோரின் உறவினர்களுக்கும் ஏற்பட்டது.

இந்த விடயங்களை இராணுவத் தளபதிக்குக் கடிதம் மூலம் தெரியப்படுத்தினேன். இராணுவப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்தவர்கள் எனக்கூறிக் கொண்டு முன்னாள் புலி உறுப்பினர்களை விடுவிப்பதாகக் கூறிப் பணம் கறக்கும் கும்பல் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற வயையில் அந்தக் கடிதத்தை அனுப்பினேன். விநாயகமூர்த்தியும், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும் நிதிமோசடியில் ஈடுபட்டதாகச் சிலர் தமது அரசியல் இலாபங்களுக்காக விசமப் பிரசாரங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

என்னுடைய 25 வருடகால அரசியல் வரலாற்றில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அரசியல் வரலாற்றிலும் சரி நிதி மோசடி குறித்து யாரும் எந்தக் குற்றமும் சாட்டியதில்லை. அந்த அளவுக்கு அரசியலில் நேர்மையுடன் செயற்பட்டுக் கொண்டிருக்கிறோம் - என் றார். (மற்றொரு செய்தி 13ஆம் பக்கத்தில்) (த-9)

# 'பனடோல்' புரக்கேறி குழந்தை மரணம்

'பனடோல்' புரக்கேறியதால் மூன்று வயதுப்பெண்குழந்தை பரிதாபமாக மரணமானது.

மூளாய், பிள்ளையார் கோவிலடியில் நேற்று முற்பகல் 10.30 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் செல்வரத்தினம் விதுஷா என்ற குழந்தையே உயிரிழந்தது. (ஒ-78)

# அரச ஊழியருக்கு முதல் கட்டமாக....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எடுக்கவேண்டும் - என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

ஐ.தே.கட்சித் தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்றுப் பகல் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இந்தக் கோரிக்கையை முன்வைத்தார்.

அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

வாழ்க்கைச் செலவு இன்று வானளவுக்கு உயர்ந்துள்ளது. ஜனாதிபதியின் இரண்டாவது ஆட்சிக்காலப் பதவியேற்பு வைபவத்துடன் ஒரு கிலோ சீனியின் விலை 115 ரூபாவாகவும், ரின் மீன் ஒன்றின் விலை 240 ரூபாவாகவும் அதிகரித்துள்ளது.

ஜனாதிபதியின் பதவியேற்பு வைபவத்திற்கு பெருந்தொகைப் பணம் செலவிடப்படுகின்றது.

மரக்கன்றுகளை நடுவதற்கு மாத்திரம் பத்துக்கோடி ரூபா செலவிடப்பட்டுள்ளது. பதவியேற்புக்கு 500 கோடி ரூபா செலவிடப்படுகின்றது. இந்தத் தொகையில் அரச ஊழியர்களுக்கு 10,000 ரூபா சம்பள உயர்வை வழங்கமுடியும்.

ஒய்வூதியம் பெறுவோரின் கொடுப்பனவுகளும் அதிகரிக்கப்படவேண்டும் - இவ்வாறு ரணில் தெரிவித்தார்.(ஒ-சி)

# உள்ளூராட்சித் தேர்தல்...


(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேர்தல்கள் திருத்தச் சட்டங்கள் தொடர்பாக பரிசீலனை செய்த உயர் நீதிமன்றம் அதன் தீர்ப்பை சபாநாயகருக்கு அனுப்பி வைத்துள்ளது.

இலங்கை அரசமைப்பின் 121 (1) யாப்புக்கு அமைய மேற்படி இரு திருத்தச் சட்டங்களுமோ அல்லது எந்த ஒரு பிரிவோ, விதிகளோ முரணானவை அல்ல என்று உயர் நீதி மன்றம் தனது தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளது என சபாநாயகர் நாடாளுமன்றத்தில் ... உத்தியோகபூர்வமாக அறிவித்தார்.

# கல்வி பொருளாதாரத்தில் முன்னேற தற்போது உள்ள சூழல் பொருத்தமானது

## இந்திய ஆய்வாளர் மாறன் கூறுகிறார்




யாழ்ப்பாணம், நவ. 17

கல்வியில் மேன்மை அடையவும் பொருளாதாரத்தில் அபிவிருத்தி அடையவும் தற்போது உள்ள சூழல் பொருத்தமானது என சென்னை சாய்ராம் இன்ஸிரியூட் முகாமைத்துவப் பணிப்பாளர் டாக்டர் மாறன் தெரிவித்தார். யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற ஆய்வு மாநாட்டில் கலந்துகொண்ட அவரிடம் அதுபற்றிக் கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு :-

இந்த மாநாடு நல்ல சிறப்பாக இடம்பெற்றது. வெளிநாட்டிலிருந்து வந்த என்போன்ற ஆய்வாளர்கள் இதன்மூலம் திருப்தி அடைந்துள்ளனர். பொறியியலிலும் முகாமைத்துவத்திலும் யாழ்ப்பாணம் வளர வேண்டும். முதுகலைக் கற்கை, முனைவோர் கற்கைநெறி என்பன யாழ்ப்பாண்த்தில் அதிகமாக ஏற்படுத்தப் பட வேண்டும். இந்தத் துறைகள் யாழ்ப்பாணத்தில் ஏற்படுத்தப் பட்டால் இன்னும் அதிகம் முன்னேறலாம். இந்த மாநாடு திறமையாக, சிறப்பாக இடம்பெற்றது. புரிந்துணர்வுடன் கூடிய அபிவிருத்தி இன்றைய சூழலுக்கு மிகவும் தேவையானது - என்றார்.

இந்த மாநாடு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் தலைமையில் நடைபெற்றது. இதில் வெளிநாட்டு ஆய்வாளர்கள் 10பேர், இலங்கையின் பல்வேறு பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்கள், பேராசிரியர், விரிவுரையாளர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் கலந்துகொண்டனர். (த-319)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீடுகளுக்குச் சென்று பணம் தருமாறு மிரட்டினார் சிங்களம் பேசிய பெண்

## பொலிஸாருக்கு அறிவித்தும் கைதாகவில்லை

யாழ்ப்பாணம், நவ. 17

யாழ்ப்பாணம், பலாலி வீதியில் இரண்டாம் ஒழுங்கையில் உள்ளசில வீடுகளில் போலி ஆவணங்களைக் காட்டி நிதி சேகரிப்பில் ஈடுபட முயன்ற சிங்களம் பேசிய பெண் ஒருவர் அப்பகுதி மக்களின் எதிர்ப்பையடுத்து அங்கிருந்து வேகமாக ஓடிச்சென்று மறைந்தார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மு.ப. 10 மணியளவில் இடம் பெற்றுள்ளது. இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது-

பலாலி வீதியின் இரண்டாம் ஒழுங்கையில் உள்ள வீடு ஒன்றுக்குள் நுழைந்த இப்பெண் சிங்களத்தில் உரையாடினார். சேலை அணிந்திருந்த அவருக்கு 50 வயதிருக்கும். வீட்டு வாசலில் நின்று வீட்டாரை அவர் அழைத்தார். அப்போது வீட்டிலிருந்த குடும்பப் பெண் வெளியே வந்துள்ளார். அவரிடம் சில ஆவணங்களைக் காட்டி அநாதைச் சிறுவர்களுக்காக தான் நிதி சேகரிப்பதாகவும் அதற்கு உதவி வழங்குமாறும் சிங்களப் பெண்மணி அரைகுறைத் தமிழில் கூறியுள்ளார். குறித்த வீட்டில் இருந்த பெண்ணுக்கு நன்கு சிங்களம் தெரியும் என்பதால் அவர் பெண்மணியுடன் சிங்களத்தில் உரையாடியதுடன் பணம் கொடுக்கவும் மறுப்புத்தெரிவித்தார். இதனையடுத்து அந்த வீட்டில் அந்தப் பெண்மணிமட்டும் தான் இருக்கிறார் என்பதை அறிந்து கொண்ட சிங்களம் பேசிய பெண்மணி திடீரென வீட்டுக்குள் புகுந்து பணத்தை உடனடியாக எடு என சிங்களத்தில் மிரட்டினார். அந்த வேளையில் வீட்டின் அருகில் உள்ள காணி ஒன்றில் வேலை செய்து கொண்டிருந்த ஆண் ஒருவர் மண் வெட்டி எடுப்பதற்காக அங்கு வந்தார். இதனைக் கண்ட சிங்களப் பெண் உடனடியாக அங்கிருந்து வெளியேறி அயலில் உள்ள வீடுகளுக்கும் சென்று இதே பாணியில் நடந்து கொண்டார். வீட்டுக்குள் புகுந்து அங்கிருந்தோரைக் கடுமையாக மிரட்டினார் என அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

இதனையடுத்து இந்தப் பெண் தொடர்பாகத் தாம் யாழ். பொலிஸாருக்குத் தொலைபேசி மூலம் தகவல் வழங்கியதாகவும், எனினும் நீண்ட நேரமாகியும் பொலிஸார் அவ்விடத்துக்கு வராமையால் அந்த சிங்களம் பேசிய பெண் அங்கிருந்து விரைவாகச் சென்று மறைந்ததாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர். (த)

# ஸ்ரான்லி வீதிக்கும் 'காப்பெற்'



யாழ்ப்பாணம், நவ.17

யாழ். ஸ்ரான்லி வீதிக்கும் 'காப்பெற்' போட்டுப் புனரமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்தப்பணிகள் கடந்த சில தினங்களாக இடம்பெற்று வருகின்றன.

நவீன இயந்திரங்களின் உதவியுடன் இந்த 'காப்பெற்' போடும் பணி நடைபெற்று வருகின்றது. ஸ்ரான்லி வீதியை இரண்டாகப் பிரித்து முதலில் ஒரு பகுதிக்கு 'காப்பெற்' போடப்பட்டு வருகின்றது.

வீதி அபிவிருத்தி அதிகார சபையின் ஏற்பாட்டில் நடைபெற்று வரும் இந்தப் புனரமைப்புப் பணியில் அதிக எண்ணிக்கையான பணியாளர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இந்தப் பணிகளை வீதி அபிவிருத்தி அதிகார சபையின் யாழ். மாவட்டப் பிரதம பொறியியலாளர் எந்திரி வி. சுதாகர் நேரடி யாக மேற்பார்வைசெய்துவருகிறார். (த)

# முஸ்லிம் மக்களுக்கு ஜனாதிபதி வாழ்த்துச்செய்தி

கொழும்பு, நவ.17

வடமாகாண முஸ்லிம்களை மீள் குடியேற்றுவதற்கான முன்னெடுப்புகள் இடம்பெற்று வரும் சூழ்நிலையில் இவ்வருட ஹஜ் பெருநாள் கொண்டாடப்படுவதையிட்டு நான் மகிழ்ச்சி அடைகின்றேன் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தமது வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளார்.

''இலங்கை முஸ்லிம்கள் எமது நாட்டின் முன்னேற்றத்துக்கும், ஐக்கியத்துக்கும் குறிப்பிடத்தக்க அளவு பங்களிப்புச் செய்துள்ளனர். பல நூற்றாண்டு காலமாக அவர்கள், எமது நாட்டில் வாழும் ஏனைய சமூகங்களோடு ஐக்கியத்துடனும், நட்புறவுடனும் வாழ்ந்து வந்துள்ளனர். அதனைத் தொடர்ந்தும் கடைப்பிடித்து வருகின்றனர்.

முஸ்லிம்கள் இன்றைய நாளில் செய்கின்ற பிரார்த்தனைகளில் எமது எல்லா மக்களுக்கும் கௌரவத்துடனான சமாதானம் நீடித்து நிலைக்கும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை - இப்படி அவர் தனது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார். (சி)

# யாழ்ப்பாண இளைஞர் மூவர் பிரேசிலிலிருந்து நாடுகடத்தல்

*கொழும்பு நவ-17*

*யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மூன்று தமிழ் இளைஞர்கள் பிரேசிலில் இருந்து நாடுகடத்தப்பட்டதாக பிரேசில் பொலிஸார் தெரிவித்தனர்.*

*இந்த மூவரும் பிரேசிலில் இருந்து ஈக்குவடோர் நோக்கிப் பயணிக்கவிருந்த வேளையில் அவர்களது நடவடிக்கைகளில் சந்தேகம் கொண்ட பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளின் பின்னர் மூவரும் உடனடியாக நாடுகடத்தப்பட்டனர் என கட்டுநாயக்க விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்தனர்.*

*கட்டுநாயக்க விமான நிலையத்தில் நேற்று முன்தினம் (15) வந்திறங்கிய இம்மூவரும் விசாரணைக்காக புலனாய்வுப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். (த)*

# பால் கொள்வனவை நேற்றுமுதல் ஆரம்பித்தது நெஸ்லே நிறுவனம்

யாழ்ப்பாணம், நவ.17

யாழ். மாவட்டத்தில் மிதமிஞ்சும் பசும் பாலை நெஸ்லே நிறுவனம் நேற்று செவ்வாய்க்கிழமை முதல் தனது நிலையங்கள் ஊடாக கொள்வனவு செய்ய ஆரம்பித்துள்ளது. இலங்கை மத்திய வங்கியின் ஏற்பாட்டில் யாழ். மாவட்டத்தில் மிதமிஞ்சும் பசும் பால்லை நெஸ்லே நிறுவனம் கொள்வனவு செய்வதற்கு தீர்மானித்திருந்தது.

இதனடிப்படையில் வட்டுக்கோட்டை, சண்டிலிப்பாய், அளவெட்டி, மல்லாகம், சுன்னாகம், உரும்பிராய், கோப்பாய், கரவெட்டி ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ள தனது நிலையங்களினூடாக அது மிதமிஞ்சும் பசும்பாலைக் கொள்வனவு செய்யத் தொடங்கியுள்ளது.

யாழ். மாவட்டத்திலுள்ள பண்ணையாளர்கள் மிதமிஞ்சும் பசும்பாலை மேற்குறிப்பிட்ட நிலையங்களில் கையளிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-15)

# தனியார் துறை ஊழியர் சம்பளத்தை 5ஆயிரம் ரூபாவினால் அதிகரிக்குக

## ஊழியர் தொழிற்சங்கம் அரசுக்கு வலியுறுத்தல்

கொழும்பு, நவ. 17

அத்தியாவசியப் பொருள்களின் விலை மிகவும் அதிகரித்திருப்பதால் வாழ்க்கையை நடத்தச் சிரமப்படும் தனியார் துறை ஊழியர்களின் மாதாந்த சம்பளத்தை 5ஆயிரம் ரூபாவால் அதிகரிக்க நடவடிக்கைகள் எடுக்குமாறு இலங்கை தொழிற்சங்க சம்மேளனம் அரசை வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பில் சம்மேளனத்தின் பிரதான செயலாளர் டீ.டபிள்யூ சுபசிங்க வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளவை வருமாறு-

அத்தியாவசியப் பொருள்களின் விலை உயர்வால் தனியார் துறை ஊழியர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இரண்டு பிள்ளைகள் கொண்ட குடும்பமொன்றுக்கு மாதாந்தம் குறைந்தபட்சம் 41185 ரூபா தேவைப்படுகிறது. இத்தொகை நாளாந்தம் அதிகரித்துச் செல்கிறது. தனியார் துறை ஊழியர்கள் நாட்டின் பொருளாதாரத்தில் 80 சத விகித பங்கை வகிக்கின்றனர். எனவே அவர்களின் நலனில் அரசு தீவிர அக்கறை காட்ட வேண்டும்.

அரச ஊழியர்களுக்கு சம்பள அதிகரிப்பை வழங்கும் போது அதற்குச் சமமாக தனியார் துறை ஊழியர்களின் சம்பளத்தையும் அதிகரிக்க வேண்டியது அரசின் கடமை.

2011 ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்டத்தில் உள்நாட்டு, வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு மாத்திரம் சலுகைகள் வழங்கப்படுவது போதாது. நாட்டின் முதுகெலும்பாயுள்ள தொழிலாளர்களின் நலனிலும் அரசாங்கம் அதே அக்கறையைக் காட்ட வேண்டும் - என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

# உயர் தொழில்நுட்பவியல் மாணவர் கவனத்துக்கு

யாழ்ப்பாணம், நவ. 17

யாழ்ப்பாணம் உயர் தொழில்நுட்பவியல் நிறுவனத்துக்கு 2011 ஆம் ஆண்டு கல்வியாண்டில் பயில விண்ணப்பித்த முழுநேர மற்றும் பகுதிநேர தேசிய தகவல் தொழில்நுட்பவியல் டிப்ளோமா கற்கை நெறிக்கான மாணவர்களைத் தெரிவு செய்வதற்கான பரீட்சை நாளை வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நிறுவனத்தின் பிரதான மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

விண்ணப்பத்தில் சகல மாணவர்களையும் அடையாள அட்டைகளுடன் குறித்த நேரத்தில் சமுகமளிக்குமாறு நிறுவனத்தின் பதிவாளர் ந.உமாகாந் கேட்டுள்ளார். (ஒ-ஐ)

# நட்ட மரக்கன்றுகள் பிடுங்கி எறியப்பட்டன

கொழும்பு, நவ.17

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் இரண்டாவது ஆட்சிக்கால பதவியேற்பு நிகழ்வை முன்னிட்டு மாத்தளைப் பகுதியில் நடப்பட்ட மரக்கன்றுகள் இனந்தெரியாத நபர்களால் பிடுங்கி எறியப்பட்டுள்ளன.

நாடளாவிய ரீதியில் 11 லட்சம் மரக்கன்றுகளை நடும் நிகழ்வின் ஒரு பகுதியாக நேற்று முன்தினம் மாத்தளை, தம்புலுகம வித்தியாலயத்திலும் நடைபெற்றது. எனினும், மரக்கன்றுகள் நடப்பட்டு ஒரு நாள்கூட செல்வதற்கு முன்னதாகவே மாத்தளை - தம் புலுகம வித்தியாலயத்திலும், பிரதேச சபை சுற்றுவட்டாரத் திலும் நடப்பட்டிருந்த மரக்கன் றுகள் நேற்றுக் காலை பிடுங்கப்பட்டிருந்தன. (சி)

# மாநகர சபையின் கூட்டங்களுக்கு பத்திரிகையாளர்களை அழைக்க வேண்டும்

## பிரேரணை முன்வைக்கிறார் சபையின் உறுப்பினர்

யாழ்ப்பாணம் நவ-17

யாழ்.மாநகர சபையின் கூட்டங்களுக்கு பத்திரிகையாளர்கள் அழைக்கப்பட வேண்டும் என்று கோரும் பிரேரணை யாழ். மாநகர சபையின் மாதாந்தக் கூட்டத்துக்கு வருகிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மாநகர சபை உறுப்பினர் கே.என்.விந்தன் கனகரத்தினம் மேற்கண்ட பிரேரணையை முன்னறிவித்தல் கொடுத்துள்ளார்.

அந்தப் பிரேரணையில் தெரிவிக்கப் பட்டுள்ளவை வருமாறு-

யாழ். மாநகர சபையின் மாதாந்தக் கூட்டங்கள்இதுவரைக்கும் மொத்தமாக பதின்மூன்று நடைபெற்று முடிந்துள்ளன. சபையின் பதவிக் காலமும் ஒரு வருடத்தை கடந்த நிலையில், சபையில் எடுக்கப்படும் தீர்மானங்கள், சபையால் மேற்கொள்ளப்படும் வேலைத்திட்டங்கள், உறுப்பினர்களால் பேசப்படும் விடயங்கள்யாவும் பொது மக்களுக்கு சரியாகப் போய்ச் சேருவ தில்லை. இதற்கான காரணம்மாதாந்த கட்டணங்களுக்கு நாம் பத்திரிகையாளரை அழைக்காமல் விடுவதால்தான்.

மாநகர சபைக் கூட்டங்கள் தொடர்பான துணை விதியின் பக்கம் இரண்டு, ஐந்தாம் பந்தியில் பத்திரிகையாளர்கள் உட்பட வெளியார்கள் தமக்கென ஒதுக்கப்பட்ட இடங்களில் கூட்டத்தில் சமுகமளிக்கலாம். ஆனால் பகிரங்கத் தன்மை கருதி அவர்களை விலக்கிவைப்பது புத்திசாலித்தனமானதென கூட்டத்தில் சமுகமாகியிருக்கும் சபை உறுப்பினர்களுள் பெரும்பான்மையானோர் அபிப்பிராயப்பட்டு தீர்மானம் மூலம் வெளிப்படுத்தினால் தவிசாளர் வெளியேறுமாறு கேட்கும் போது கூட்டத்தை விட்டு வெளியேற வேண்டும். மேற்சொல்லப்பட்ட சட்டத்திற்கு அமைவாக இனிவரும் மாதாந்தக் கூட்டங்களுக்கு நாம் பத்திரிகையாளர்களை அழைக்க வேண்டும். அவர்களுக்கான வசதிகளையும் ஒழுங்குகளையும் சபை செய்து கொடுக்க வேண்டும்.

இந்த நாட்டில் அமைச்சரவைக் கூட்டங்கள் நடைபெறும் போது பத்திரிகையாளர்கள் அழைக்கப் படுகின்றனர். நாடாளுமன்றத்தில் பத்திரிகையாளர்களுக்கும், பார்வையாளர்களக்குமென தனி இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. நாட்டிலுள்ள மாகாணசபைக் கூட்டங்கள், ஏனைய மாநகர, நகர சபைகளின் மாதாந்த கூட்டங்களுக்கும் பத்திரிகையாளர்களை அழைக்கின்றனர். ஆனால் யாழ்ப்பாண மாநகர சபையில் மட்டும் இந்த நடைமுறை பின்பற்றப் படுவதில்லை. எனவே இனி வரும் மாதாந்தக் கூட்டங்களுக்கு இங்குள்ள அனைத்துப் பத்திரிகையாளர்களையும் நாம் தவறாது அழைக்க வேண்டுமென இச்சபை தீர்மானிக்கின்றது. என்றுள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு அடாவடித்தனங்களின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எமது சாட்சியத்தைப் பதிவு செய்வதற்கு முன்னரே அரசு யாழ். குடாநாட்டில் ஜே.வி.பியினர் பொது மக்களால் தாக்கப்பட்டதாக அறிவித்தது. இதிலிருந்து யார் எம் மீது தாக்குதல் நடத்தினார்கள் என்பதை தெளிவாகப் புரிந்து கொள்ளலாம். நாடாளுமன்ற உறுப்பினரொருவரை பொது மக்கள் தாக்கியிருந்தால் ஏன் அவர்களைக் கைது செய்யவில்லை?

வடக்கு - கிழக்கில் தற்போது இரண்டாவது பிரபாகரனின் ஆட்சி நடக்கிறது. கோட்டாபய அங்கு பிரபாகரனாகச் செயற்படுகிறார்.

புலனாய்வுப் பிரிவினர் சிந்திப்பதையும், நினைப்பதையுமே மக்கள் செய்ய வேண்டுமென எதிர்பார்க்கின்றனர். மக்களை அடக்கி, ஒடுக்கி எம்.பிக்களைத் தாக்கியும் ஜனாதிபதியின் இரண்டாவது ஆட்சிக் காலம் ஆரம்பமாகின்றது.

**பொலிஸாரின் கையாலாகாத் தனம்**

தாக்குதலுக்குள்ளாகி முறைப்பாடு செய்ய பொலிஸ் நிலையம் சென்ற போதும் சிகிச்சைபெற யாழ். வைத்தியசாலைக்குச் சென்ற போதும் பொலிஸார் எம்மை யாழ். குடாநாட்டை விட்டு வெளியேற்றுவதிலேயே குறியாக இருந்தனர். உங்களுக்கு எம்மால் பாதுகாப்பு வழங்கமுடியாது. குடாநாட்டை விட்டுச் சென்று விடுங்கள் என வெளிப்படையாகவே சில பொலிஸ் அதிகாரிகள் என்னிடம் நேரடியாகவே கேட்டுக் கொண்டனர்.

யாழ். நகரிலும், வைத்தியசாலையிலும் பொதுமக்கள் எம்முடன் நல்லுணர்வுடன் நடந்துகொண்டனர். பகல் நேரத்தில் கடமையாற்றிய வைத்தியசாலை ஊழியர்கள், தாதியர் எமக்காக இரவு வரை கடமையில் ஈடுபட்டனர்.

- இப்படி சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்தார்.

தாக்குதலில் ஈடுபட்டவர்கள் எனக் கருதப்படுவர்களின் புகைப்படங்களையும் ஊடகவியலாளர்களிடம் அவர் காண்பித்தார்.

யாழ்.நகரில் தமக்கு ஏற்பட்ட அனுபவங்களை அவர் விவரித்துக் கூறியதாவது:-

நாங்கள் 14ஆம் திகதி மாலை 5.45 மணியளவில் யாழ். நகரிலுள்ள 'உதயன்' பத்திரிகை அலுவலகம் சென்றோம். பின்னர் அங்கிந்து ஏனைய வேலைகளைக் கவனிப்பதற்காக நகருக்குச் சென்றோம். அப்போது ஐந்து, ஆறு மோட்டார் சைக்கிள்களில் சிலர் எம்மைப் பின் தொடர்ந்தனர். நாம் இவர்களைத் தவிர்க்க நினைத்தபோது அருகில் முன்னாள் எம்.பி. பத்மினி சிதம்பரநாதனின் வீடு இருப்பதாக தெரிவிக்கப்பட்டதை அடுத்து அங்கு சென்றோம். முன்னாள் எம்.பி. பத்மினியும் அவரது கணவர் சிதம்பரநாதனும் எம்மை வரவேற்றனர்.

**என்னைக் குறிவைத்துத் தாக்கினார்கள்**

அவர்களுடன் அவர்களது விராந்தையில் அமர்ந்து உரையாடிக் கொண்டிருந்தோம். அப்போது சுமார் 15 பேர் இரும்புக் கம்பிகள், கொன் கிறீட் துண்டுகள் ஆகியவற்றுடன் வந்து எம் மீது தாக்குதல் நடத்தினர். நான் நாடாளுமன்ற உறுப்பினர் என அறிமுகப்படுத்திக் கொண்ட பின்னரும் என்னை குறிவைத்து தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இந்தத் தாக்குதல் எம்மை கொலை செய்ய நடத்தப்பட்ட தாக்குதலாகும். எம்மைத் தாக்கியவர்கள் சரளமாக சிங்களத்தில் உரையாடினர். தலையில் காயமுற்ற நிலையில் தொடர் தாக்குதலிலிருந்து தப்புவதற்காக நான் வீட்டினுள் ஓடினேன். எம்மைத் தாக்கும் சப்தம் கேட்டதையடுத்து வீட்டருகே மக்கள் கூடினர்.

இச்சம்பவம் இடம்பெறும்போது மாலை 6.45 அல்லது 7.00 மணி இருக்கும். முன்னாள் எம்.பியொருவரின் வீட்டுக்குள் புகுந்து குண்டர்கள் தாக்குதல் நடத்துவதென்றால் சாதாரண மக்களின் நிலை எப்படி இருக்கும்?

தாக்குதலுக்குள்ளாகிய நிலையிலும் நாம் முறைப்பாடு செய்வதற்காக நேரடியாக பொலிஸ் நிலையம் சென்றோம். அங்கு பொலிஸார் எம்மை யாழ்.குடாநாட்டிலிருந்து வெளியேற்றுவதி லேயே குறியாக இருந்தனர். எங்களது வாக்குமூலத்தைப் பெற முன் னரே அரசு யாழ். நகரில் ஜே.வி.பியினர் மீது பொதுமக்கள் தாக்குதல் நடத்தியதாக செய்தி வெளியிட்டது வேடிக்கையாகும்.

**எனக்கு 3 தையல்கள் போடப்பட்டன**

அதன் பின்னர் நாம் யாழ். வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டோம். அங்கு எனது தலையில் மூன்று தையல்கள் போடப்பட்டன. எமது யாழ். அமைப்பாளர் லலித் குமாரவின் தலையில் 9 தையல்கள் போடப்பட்டன. தையல் போடப்பட்டதால் எம்மை வார்டில் தங்கி சிகிச்சைப் பெறும்படி வைத்தியர்கள் அறிவுறுத்திய போதிலும் பொலிஸார் அங்கும் எம்மை தங்கவிடாது வெளியேற்று வதிலேயே கவனம் செலுத்தினர்.

'உதயன்' தங்கும் விடுதியில் 15ஆம் திகதி செய்தியாளர் மாநாடொன்றை நடத்த ஏற்பாடு செய்திருந்தோம். ஆனால், ஜே.வி.பி. செய்தியாளர் மாநாடு 'உதயன்' விடுதியில் நடைபெற்றால் அக்கட்டடம் தீயிட்டுக் கொளுத்தப்படுமென 'உதயன்' பணிப்பாளருக்குத் தொலைபேசி மூலம் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதால் செய்தியாளர் மாநாடு நடத்தப்படவில்லை - இப்படித் தெரிவித்த சுனில் ஹந்துன்நெத்தி எம்.பி. தொலைபேசி மூலம் அச்சுறுத்திய நபரின் தொலைபேசி இலக்கத்தையும் தெரிவித்தார்.

**தமிழ் மக்களின் கரிசனை**

அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:- எம் மீது தமிழ் மக்கள் அன்பு காட்டினர். எமது பாதுகாப்புக் குறித்து கரிசனை காட்டினர்.

யாழ். குடாநாட்டில் காணாமற் போன தமது மகன், கணவரைத் தேடி தாய்மார் முகாம் முகாமாக அலைந்து திரிகின்றனர். இவர்களின் காணாமற் போனதாக கூறப்படும் அல்லது இறுதி யுத்தத்தில் சரணடைந்த உறவினர்கள் எங்கிருக்கின்றார்கள் எனத் தெரிந்து கொள் ளும் வகையில் தடுத்து வைக்கப்பட்டவர்களின் பெயர்ப் பட்டியலை வெளியிடுங்கள் அல்லது இணையதளத்தில் வெளியிடுங்கள் என்பதே எமது கோரிக்கை. எமது இந்தக் கோரிக்கையை அரசிடம் வலியுறுத்துவதற்காகவே 'நாம் இலங்கையர்' என்ற அமைப்புடன் இணைந்து கையெழுத்து வேட்டையை ஆரம்பித்தோம்.

- இவ்வாறு அவர் தெரிவித்தார். (ஒ- சி)

## மரண அறிவித்தல்கள்



### பரமசாமி நவராஜ்

காரைநகரைப் பிறப்பிடமாகவும், மில்லேன் பிறவுண் றோட், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகக் கொண்ட பரமசாமி நவராஜ் நேற்று (16.11.2010) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் பரமசாமி- யோகராணி தம்பதியரின் அன்புமகனும், பவளராஜ்(ராசன்), யோகராஜ் (கண்ணன்), காலஞ்சென்ற பாக்கிராஜ் மற்றும் பகிரதி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (16.11.2010) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பி.ப. 4 மணிக்கு வில்லூன்றி இந்துமாயனத்தில் பூதவுடல் தகனஞ் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மில் லேன், பிறவுண்றோட்,யாழ்ப்பாணம்.
077 8996464

தகவல்: குடும்பத்தினர்.

### சபாரத்தினம் தவராசா

உடுப்பிட்டி, வீரகத்திப்பிள்ளையார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சபாரத்தினம் தவராசா நேற்று (16.11.2010) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் தொண்டைமானாறு, வீரகத்திப்பிள்ளை வித்தியாசாலை உப அதிபரும் சிவதேவியின் கணவரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.11.2010) புதன் கிழமை பி.ப.4 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக எள்ளங்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இமையாணன் மேற்கு.*
*உடுப்பிட்டி.*

தகவல் :
குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி

### சபாரட்ணம் தவராசா




(உபஅதிபர்,யா/தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை ம.வி.)

எமது பாடசாலையில் 25 வருடங்களுக்கு மேலாகக் கடமையாற்றி வருகின்ற சபாரட்ணம் தவராசா(உபஅதிபர்) அவர்களது திடீர் மரணச் செய்தி கேட்டு அதிர்ச்சியும் துயரமும் அடைகின்றோம். மீளாத் துயரில் மூழ்கியுள்ளோம். அன்பும், பண்பும், கனிவு முடைய உத்தம மனிதர் இன்று எம்மை விட்டு நீங்கி விட்டார். உத்தம மனிதரை இழந்து தவிக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது பாடசாலைச் சமூகத்தின் சார்பில் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம். அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக் கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், பணியாளர்கள், மாணவர்கள்,
யா/தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை ம.வி.

## மரண அறிவித்தல்





### ஜஸ்ரின் றேகன் றெனோட்ஸ்

(பணியாளர்- கரித்தாஸ் கியூடெக் நிறுவனம்)
(பழையமாணவர் மானிப்பாய் இந்துக்கல்லூரி)

புலவர் வீதி, நவாலி வடக்கை பிறப்பிடமாகக் கொண்ட ஜஸ்ரின் றேகன் றெனோட் 14.11.2010 ஞாயிற்றுக்கிழமையன்று அகால மரணமடைந்தார்.

அன்னார் ஜஸ்ரின் - அன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் ரிச்சேட், றிச்சன், ஜனனி, சாளினி ஆகியோரின் அன்புச் சகோதரரும், இராயப்பு- மேரிறோசலின், சின்னப்பு- செல்வராணி ஆகியோரின் அன்புமருமகனும், தியாகராஜா- ஞானம்மாவின் அன்புப் பெறாமகனும் வத்சலா, ஸ்ரீதரன், முரளிதரன், குமணதரன், பகீரதன் ஆகியோரின் சகோதரனும், றமேஸ், முகேஷ், தினேஸ், திலக், தீபன், சுரேக்கா, நிமலினி, ரியூறின், சுதன் ஆகியோரின் மைத்துனரும் கோஷகன், பௌசிதன், பிரின்திக்கா, பரத், அஜன் ஆகியோரின் பாசமிகு சித்தப்பாவும் ரிசானி, ஷாரா,ஷிரோமி ஆகியோரின் அன்புமாமாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் சடங்குகள் நாளை (18.11.2010) வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் நவாலி வடக்கு திருஇருதயநாதர் தேவாலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் நவாலி ஆரியம்பிட்டி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், மற்றும் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

புலவர் வீதி,
நவாலி வடக்கு.

தகவல்:
குடும்பத்தினர்.

## விண்ணக வாழ்வில் 25ஆம் வருட நினைவில்



### அமரர் இயக்கோ மடுத்தீன் (கொன்சன்ரைன்)

| அன்னை மடியில் | ஆண்டவன் அழைப்பில் |
|---|---|
| 06 * 06 * 1900 | 17 * 11 * 1985 |

### அமரர் மடுத்தீன் அக்கினேசம்மா (செல்லி)

| அன்னை மடியில் | ஆண்டவன் அழைப்பில் |
|---|---|
| 17 * 06 * 1910 | 29 * 08 * 1988 |

வழியும் உண்மையும் வாழ்வும் நானே,
என் வழியாய் அன்றி எவரும்
தந்தையிடம் வருவதில்லை யோவான் (14 : 06)

*இவரின் பிரிவால் துயருறும் :-*
அமரர் ஜோன் பெப்ரிஸ்
(யோன்பிள்ளை),
ஞா.கினிஸ்ரினம்மா, ம.லாசறஸ்
(ஆசிரியர்), அருட்சகோதரி யூட்
மடுத்தீன் ஸ் ஒலிவம், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள், உற்றார்,
உறவினர், நண்பர்கள்.

16 A, கடற்கரை வீதி,
குருநகர்,
யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 3516

(106121)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## யாழ்.மாவட்டக் கூட்டுறவின் கதி

யாழ்ப்பாண மாவட்டத்தில் கடந்த வாரம் நடைபெற்ற கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு நடத்திய விசாரணைகளின் போது மாவட்டத்தின் கூட்டுறவுத்துறையின் இன்றைய நிலை குறித்தும் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

ஒரு காலத்தில் கூட்டுறவு இயக்கம் யாழ்ப்பாணத்தில் கொடிகட்டிப் பறந்தது. அதனை நாங்கள் மட்டும் சொல்லவில்லை. காலத்தின் பதிவும் அதுவே. கூட்டுறவு என்றால் அதற்கு யாழ்ப்பாணம் என்ற நிலைமையும் இருந்தது. இங்கு கூட்டுறவு மக்கள் இயக்கமாக மாறி அவர்களின் பங்களிப்புடன் மேன்மேலும் வளர்ந்தோங்கியது. ஆனால் இப்போது கழுதை தேய்ந்து கட்டெறும்பான நிலையாகி விட்டது.

காலப்போக்கில், கூட்டறவு நிறுவனங்களுக்குள் அவற்றின் நிர்வாகங்களுக்குள் புகுந்தவர்கள் அத்துறை மதிப்பிறக்கம் காணக் காரணர்கள் ஆகினர். அதன் விளவு; குடாநாட்டின் கூட்டுறவுத்துறை நட்டத்தில் இயங்கி, இப்போது நலிந்து மெலிந்து கிடக்கிறது.

கூட்டுறவுச் சங்கங்களில் மிகப் பலவும் நட்டத்தில் இயங்குவதால் அவற்றில் கடமை ஆற்றும் பணியாளர்களுக்கு உரிய சம்பவளம் வழங்கமுடியாத நிலைமைகள் கூட சர்வ சாதாரணமாகிவிட்டது.

சுமாரான விலையில் தரமான பொருள்களையும் தட்டுப்பாடான பொருள்களையும் வாங்கக்கூடிய நிலைமை கூட்டுறவுச் சங்கக் கடைகளில் முன்னர் நிலவியது. இப்போது அது மாறிவிட்டது. தனியார் துறை உயர்ந்து நிற்கிறது.

அரசாங்கம் வழங்கும் நிவாரணப் பொருள்களை வழங்கும் நிலையங்களாக மட்டும் கூட்டுறவுக் கடைகள் மாறிவிட்டன. தனியார் துறையுடன் போட்டி போட்டு இயங்கக் கூடிய வல்லமையுடன் கூட்டுறவுத் துறையால் தலையுயர்த்த முடியவில்லை. பெரும்பாலும் பணிப்பாளர் சபைகளில் இடம்பிடிப்போரின் வசதிகளுக்கும் வாய்ப்புக்களுக்கும் ஏற்ப நிர்வாகம் நடத்தப்படுவதாலேயே, கூட்டுறவுத் துறைக்கு இந்தக் கதி நேர்ந்தது என்ற குற்றச்சாட்டுகள் மாவட்ட மட்டத்தில் பரவலாக உண்டு.

* முன்னைய ஆண்டின் இலாப நட்டக் கணக்கைக் கவனத்தில் கொள்ளாமல் வரவு - செலவுத் திட்டங்களை அங்கீகரித்து அதன் பிரகாரம் வியாபார நடவடிக்கைகளை மேற்கொண்டு மேலும் நட்டமடைதல்.
* பொதுச் சபைக் கூட்டங்களில் கணக்கறிக்கை சம்பந்தமான உரிய விளங்கங்கள் கணக்காய்வாளர்களால் வழங்கப்படாதிருத்தல்
* ப.நோ.கூ. சங்கப் பணிப்பாளர் சபைகள் அடிக்கடி கலைக்கப்படுதல்.
* அதேவேளை, நட்டமுறும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்களின் பணிப்பாளர் சபைகளை அரசியல் தலையீடு உட்புகுந்து கலைக்காது தடுத்தல்.
* நிதிமோசடிகள் குறித்துத் தக்க நடவடிக்கை எடுக்கபடாமை.

மேற்கூறப்பட்டிருப்பவை உட்பட மற்றும் பல குறைபாடுகள் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் பலவற்றிலும் உள்ளதாகப் பொதுமக்கள் தரப்பில் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படுகின்றன.

இத்தகைய ஒரு பின்புலத்தில் குடாநாட்டின் கூட்டுறவுத் துறையை உடனடியாக நிமிர்த்தி எடுத்து, அதனை மக்கள் தேவைகளை நிறைவேற்றும் நிறுவனமாக மாற்றுவது என்பது கல்லில் நார் உரிக்கும் காரியமாகும் என்ற சந்தேகமே உயரமாக எழுந்து நிற்கிறது.

கூட்டுறவுத்துறைக்குரிய இலக்கணமும் இலட்சணமும் நூறு வீதம் மக்கள் நலன் நாடிய, தளம்பல் இல்லாத, அப்பழுக்கில்லாத பொதுச் சேவையே இன்றையதேவை.

மக்கள் சேவையை அர்பணிப்புடன் நல்கிய கூட்டுறவாளர் வீ.வீரசிங்கத்தின் காலத்தின் யாழ். மாவட்ட கூட்டுறவுச் சேவையை இப்போது நினைத்துப் பார்க்க முடியாது, எதிர்பார்க்க முடியாது.

மக்களுக்கு உண்மையான, நேர்மையான சேவையாற்ற வேண்டும் என்ற இலக்குடன் பணியாற்றுபவர்களை குடாநாட்டில் கஞ்சியில் பயறு போன்றே கணக்கிட வேண்டிய நிலை.

சுயநலம், பதவி மோகம், மோசடி, ஊழல், அரசியல் செல்வாக்கு என்ற போக்கையே நோக்காககக் கொள்ளும் நிலை மாறும்வரை, குடாநாட்டில் கூட்டுறவுத் துறை பொதிசுமந்த கழுதையின் நிலைக்குத் தள்ளப்படும்.

ஆகையால் யாழ்ப்பாணத்தின் கூட்டுறவுத் துறையை மேம்படுத்துவதற்கு நல்லிணக்க ஆணைக்குழுவால் எதுவுமே செய்ய முடியாது என்பதே உண்மையும் யதார்த்தமும் ஆகும்.

யாழ்.கூட்டுறவுத் துறையின் சீர்கேடுகளை ஆராய்வதற்கெனத் தனி ஆணைக்குழு நியமித்தால் கூட, பலன் கிடைக்குமா என்பதனை ஒன்றுக்கு இரண்டு தடவை சிந்திக்க வேண்டிய நிலையில் நம்மவர்கள்.

# நாட்டின் சனத்தொகைக் கணக்கெடுப்பு அடுத்த ஆண்டு ஜூலை 14 இல் ஆரம்பம்

கொழும்பு,நவ.17

இலங்கையில் அடுத்த அண்டு ஜூலை 14ஆம் திகதி முதல் வீடுகள் மற்றும் சனத்தொகைக் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்படவுள்ளது.

நாடு முழுவதிலும் உள்ள 14,013 கிராம அதிகாரி பிரிவுகளிலும் இந்தக் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்படவுள்ளது.

இலங்கையில் 1871ஆம் ஆண்டு தொடக்கம் பத்து ஆண்டுகளுக்கு ஒருமுறை சனத்தொகைக் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ஆனால் 1991ஆம் ஆண்டில் பாதுகாப்பு நிலைமைகள் காரணமாக சனத்தொகைக் கணக்கெடுப்பு நடத்தப்படவில்லை.

2001ஆம் ஆண்டு சனத் தொகைக் கணக்கெடுப்பு 18 மாவட்டங்களில் மட்டுமே இடம்பெற்றிருந்தது.

முப்பது வருடங்களுக்குப் பின்னர் இலங்கையில் அனைத்து மாவட்டங்களிலும் அடுத்த ஆண்டு சனத் தொகைக் கணக்கெடுப்பு நடத்தப்படவுள்ளது. (ம)

# உள்ளூராட்சித் தேர்தல் சட்டமூல விவாதம்; தனியாக ஒரு நாளில் நடத்தி முடிக்க திட்டம்

## அமைச்சர் தினேஸ் குணவர்த்தன தெரிவிப்பு

கொழும்பு,நவ.17

உள்ளூராட்சித் தேர்தல் திருத்தச் சட்டமூலம் தொடர்பான விவாதத்தை வரவுசெலவுத் திட்டக் கூட்டத்தொடரில் தனியாக ஒரு நாளில் நடத்த அரசாங்கம் திட்டமிட்டிருப்பதாக அமைச்சர் தினேஸ் குணவர்த்தன தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் உயர்நீதிமன்றம் உள்ளூராட்சித் தேர்தல் திருத்தச் சட்டமூலத்துக்கு எதிரான வழக்கின் தீர்ப்பை இன்று சபாநாயகருக்கு அறிவிக்கும் என்று எதிர்பார்க்கிறோம்.

அதன் பின்னர் விவாதத்தை எப்போது நடத்துவது என்று கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் தீர்மானிக்கப்படும். வரவுசெலவுத் திட்டக் கூட்டத் தொடரில் தனியாக ஒரு நாளில் இந்த சட்டமூலம் விவாதிக்கப்படும்.

ஏனென்றால், இதை நிறைவேற்றுவது அவசரமானது. என்று அவர் மேலும் தெரிவித்தார். இதேவேளை, இந்தச் சட்டமூலத்துக்கு ஆதரவு வழங்க ஐ.தே.க முடிவு செய்துள்ளது. ஆனால், ஜே.வி.பியும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றன. (ம)

# ஜனாதிபதியின் பதவிப் பிரமாண நிகழ்வுகளில் ஐக்கிய தேசியக் கட்சி பங்குபற்றப் போவதில்லை

## செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானம்

கொழும்பு,நவ.17

ஜனாதிபதியின் பதவிப் பிரமாண நிகழ்வுகளில் கலந்துகொள்ளப் போவதில்லை என ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானித்துள்ளது.

பதவிப் பிரமாண நிகழ்வுகளின் போது ஐக்கிய தேசியக் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் எவரும் கலந்துகொள்ளமாட்டார்கள் என செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கட்சியின் தலைமை அலுவலகமான சிறிகொத்தாவில் கட்சித் தலைவர் ரணில்விக்ரமசிங்க தலைமையில் செயற்குழுக் கூட்டம் நடைபெற்றது.

தலைமைப்பொறுப்பு உள்ளிட்ட பதவிகள் கட்சியின் செயற்குழு மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களினால் தெரிவுசெய்யப்படும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

பதவிகளுக்கான தெரிவின் போது மாகாணசபை மற்றும் உள்ளூராட்சி உறுப்பினர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படவேண்டும் என்ற சஜித் பிரேமதாசவின் யோசனைத்திட்டம் ஏற்றுக்கொள்ளப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

எவ்வாறெனினும், முக்கிய பதவி வெற்றிடங்களுக்கான தெரிவின் போது முரண்பாடு ஏற்பட்டால் வாக்கெடுப்பு நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

டிசெம்பர் மாதம் 12ஆம் திகதி கட்சியின் பொதுக் கூட்டம் நடைபெறவுள்ளதாகவும் இதில் கட்சித் தலைமை உள்ளிட்ட பதவிகள் குறித்து நிர்ணயிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ம)

## பழைய மாணவர் சங்க பொதுக் கூட்டம்

கிளிநொச்சி தருமபுரம் மகா வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம் எதிர் வரும் ஞாயிற்றுக்கிழமை பி.பகல் 3 மணிக்கு பாடசாலை முதல்வர் ச.பூலோகராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் கணக்கறிக்கைகள், 1000 பாடசாலை அபிவிருத்தி, பாடசாலை மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டம், 2011ஆம் ஆண்டு பரிசளிப்பு விழா, கடந்துபோன பொன் விழா மலர் வெளியீடு, கல்வி நிதியம் ஸ்தாபித்தல் போன்ற நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

பாடசாலையில் கல்விகற்று வெளி யேறிய பழைய மாணவர்கள் அனைவரையும் சமுகமளித்து பாடசாலையின் வளர்ச்சிக்கு ஒத்துழைப்பு நல்குமாறு பாடசாலையின் அதிபர் கேட்டுள்ளார். (ம-301)

## நாளை

| | | |
|---|---|---|
| கார்த்திகை 2 | | 18.11.2010 வியாழக்கிழமை |
| திதி: | : | துவாதசி மு.இ.08.56 வரை |
| நட்சத்திரம் | : | ரேவதி பி.இ.05.03 வரை |
| சுபநேரம் | : | 07.38-09.08 வரை |
| ராகுகாலம் | : | 01.38-03.08 வரை |

# நாடு கடந்த தமிழீழ அரசின் தேர்தலை இந்தியாவில் நடத்த அனுமதி இல்லை

## கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகம் தகவல்

கொழும்பு,நவ.17

இந்திய மண்ணில் நாடுகடந்த தமிழீழ அரசின் தேர்தலை நடத்த அனுமதி வழங்கப்படமாட்டாது என்று கொழும்பிலுள்ள இந்தியத் தூதரக வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

நாடுகடந்த தமிழீழ அரசின் பிரதிநிதிகளை தெரிவு செய்வதற்கு இந்தியாவிலும் தேர்தல் நடத்தப்படவுள்ளதாக நாடு கடந்த தமிழீழ அரசின் பிரதமர் உருத்திரகுமாரன் அறிவித்திருந்தார்.

இதுபற்றி கொழும்பிலுள்ள இந்தியத் தூதரக வட்டாரங்கள் தகவல் வெளியிடுகையில்-

இந்தியா மண்ணில் நாடு கடந்த தமிழீழ அரசின் தேர்தலை நடத்த முற்பட்டால் அதற்கு எதிராக இந்திய அரசு சட்ட ரீதியான நடவடிக்கையை மேற்கொள்ளும் என்று தெரிவித்துள்ளன.

# இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு தொடர்பான கலந்துரையாடல்

வலி, வடக்கு.நவ.17

தேசிய இளைஞர்கள் சேவை மன்றத்தின் இளைஞர்களுக்கான நாடாளுமன்ற உறுப்பினர்களை தெரிவு செய்வது சம்பந்தமான கலந்துரையாடல் நாளை வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு கிளிநெச்சியில் இடம்பெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றப் பணிப்பாளர் மற்றும் உயர் அலுவலர்கள் சமுகமளிப்பதுடன் யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த இளைஞர் சேவைகள் மன்ற அலுவலர்களும் கலந்துகொள்ளவுள்ளனர்.

குறிப்பாக இளைஞர் நாடாளுமன்ற வேட்பாளர்களும் இக்கலந்துரையாடலுக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

அடுத்த மாதம் நடுப்பகுதியில் நடைபெறவுள்ள இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர்களை தெரிவுசெய்வதற்கான நடைமுறைகள், செயற்பாடுகள் தொடர்பாகவும் வேட்பாளர்களுடைய செயற்பாடுகள் குறித்தும் இதில் கலந்துரையாடப்படவுள்ளது. (ம-201-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலப்பை தாக்கி பெண் காயம்

தென்மராட்சி,நவ.17

உழவு வேலையில் ஈடுபட்டுவிட்டு வீதியில் சென்ற உழவு இயந்திரத்தின் கலப்பை, மோட்டார் சைக்கிளில் பயணித்த பெண்ணின் காலைத் தாக்கியுள்ளது.

இந்தச் சம்பவம் கடந்த திங்கட்கிழமை சரசாலை, பருத்தித்துறை வீதியில் இடம்பெற்றது.

சாவகச்சேரி, கச்சாய் வீதியைச் சேர்ந்த சபேஸ்வரன் கவிதா (வயது 31) என்பவர் இந்தச் சம்பவத்தில் காலில் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (204-207)


## கண்ணீர் அஞ்சலி

யாழ்.போதனா வைத்தியசாலையில் கடமையாற்றும் தாதிய உத்தியோகத்தரான கார்த்திகேசு முரளீதரன் அவர்களின் அன்புத் தந்தை

**இராசையா கார்த்திகேசு**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் கண்ணீர் அஞ்சலிகளையும் காணிக்கையாக்குகின்றோம்.

தாதிய உத்தியோகத்தர்
நலன்புரிக் கூட்டுறவுச் சங்கம்.
(106100)

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**கிருஷ்ணர் திருநாவுக்கரசு**

மண்ணில்
21 * 08 * 1932

விண்ணில்
08 * 12 * 2008

பாசம் என்ற பதத்தை புரிந்து
பண்பு என்பதன் இலக்கணம் காத்து நின்று
எங்கள் உயர்வில் சிரித்து நின்று
சிறப்போடு எமை வாழ வைத்த எம் தெய்வமே!
ஆண்டாண்டு சென்றாலும் ஆறாது நம் துயரம்
மாறாது நம் கவலை.

சிவன்கோயில் வீதி,
சித்தன்கேணி. (106092)

உங்கள் நினைவுடன் வாழும்:
குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம்
10 * 09 * 1953



மறைவு
18 * 10 * 2010

**அமரர் இராமநாதன் சண்முகநாதன் (SLPS -1)**
(அதிபர், சண்டிலிப்பாய் அ.த.க.பாடசாலை)

18.10.2010 அன்று இறைவனடி சேர்ந்த எங்கள் குடும்ப ஒளிவிளக்கின் இறைபதம் எய்திய செய்தி கேட்டு உடன் வந்து உதவியவர்களுக்கும், இறுதிச்சடங்கு வரை எம்மோடு நின்று சகல வழிகளிலும் உதவியவர்களுக்கும், மலர் வளையம், மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தியோருக்கும், துண்டுப்பிரசுரம் வெளியிட்டோருக்கும், பத்திரிகை மூலம் அஞ்சலி செலுத்தியோருக்கும் நேரிலும் தொலைபேசி மூலமும் அனுதாபமும் ஆறுதல்வார்த்தைகளும் கூறியோருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதோடு இன்று (17.11.2010) புதன்கிழமை மு.ப. 10 மணியளவில் எமது இல்லத்தில் இடம்பெறும் வீட்டுக் கிருத்திய நிகழ்விலும் அதனைத்தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்ம ஈடேற்றத்திற்கு பிரார்த்திக்குமாறு அன்புடன் அழைக்கின் றோம்.

அழைப்புக் கிடைக்கத் தவறியவர்கள் இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

"பயன் தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்
நன்மை கடலிலும் பெரிது" - திருக்குறள்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

சண்டிலிப்பாய் மேற்கு, சண்டிலிப்பாய். (106099) குடும்பத்தினர்.


# கோழியிறைச்சிக் கடையில் துப்பாக்கிச்சூடு

கொழும்பு, நவ.17

கோழியிறைச்சி வாங்க வந்த சமயம் கடையில் ஏற்பட்ட சர்ச்சையின் காரணமாக துப்பாக்கியால் சுட்டுவிட்டுத் தலைமறைவான நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று காலி பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட நபர் அங்கவீனமான முன்னாள் இராணுவ சிப்பாயென தெரியவருகிறது.

சந்தேக நபர் மற்றொருவருடன் மிலிது நகரிலுள்ள இறைச்சிக் கடைக்கு வந்துள்ளார்.

அங்கு ஏற்பட்ட வாய்த்தாக்கம் முற்றியபோது சிப்பாய் தான் வைத்திருந்த துப்பாக்கியால் சாரமாரியாகச் சுட்டுவிட்டு இருவரும் மோட்டார் சைக்கிளில் ஏறிச் சென்றுள்ளனர்.

கடை உரிமையாளர் அந்த மோட்டார் சைக்கிளின் இலக்கத்தைக் குறித்து வைத்து பொலிஸில் செய்த முறைப்பாட்டையடுத்து சந்தேகநபர் கைது செய்யப்பட்டதுடன், குறிப்பிட்ட மோட்டார் சைக்கிளும் கைப்பற்றப்பட்டது. பாவிக்கப்பட்ட துப்பாக்கியை மீட்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சந்தேக நபர் அடையாள அணி வகுப்புக்கு உட்படுத்தப்படவுள்ளார். (ம-5)

# பேராசிரியர் நியமனம்

கொழும்புத்துறை, நவ.17

யாழ்.பல்கலைக்கழகத்தில் கிறிஸ்தவ, இஸ்லாமியத்துறைக்குப் புதிய பேராசிரியர் கல்வி அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

கிறிஸ்தவ, இஸ்லாமியத்துறைத் தலைவராக இதுவரை காலமும் கடமையாற்றிய அருட்திரு ஞானமுத்து பிலேந்திரன் அடிகளாரே பேராசிரியராக நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த 11ஆம் திகதி முதல் இந் நியமனத்தைப் பெற்றுள்ள இவர் கிறிஸ்தவ, இஸ்லாமியத்துறை வரலாற்றில் விசேட புலமைமிக்க ஆய்வாளர் ஆவார்.

இதே வேளை யாழ். மறை மாவட்டக் குருக்களில் பல்கலைக் கழகப் பேராசிரியராக நியமனம்பெற்ற முதல் கத்தோலிக்க குரு இவரே என்பது குறிப்பிடத்தக்கது. (201-135)

# வருடாந்த சாரணர் பாசறை

தென்மராட்சி, நவ.17

இலங்கை சாரணர் சங்க கிளிநொச்சி சாரணர் மாவட்ட கிளைச்சங்க பாடசாலைகளின் வருடாந்த சாரணர் பாசறையும் குருளைச் சாரணர்களின் வெளிக்கள நாளும் கடந்த சனி, ஞாயிறு தினங்களில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெற்றன.

மாவட்ட சாரணர் ஆணையாளர் செ.சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் சாரணர் மாவட்டத்தைச் சேர்ந்த பாடசாலைகளின் சாரணர்கள் கலந்து கொண்டனர்.

ஆரம்பநாள் நிகழ்வில் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு. பிரேம காந்தன் சாரணர் கொடியினை ஏற்றி வைத்தார். மறுநாள் நிகழ்வுகளில் வடமா காண சாரணர் ஆணையாளர் த.நா.போஜன், வலயக் கல்விப் பணிப்பாளர் கு. பிரேமகாந்தன், பிரதிக் கல்விப் பணிப்பாளர் கோ.வரதராசமூர்த்தி, கோட்டக் கல்வி அலுவலர் கு.சிவானந்தம், இந்துக் கல்லூரி அதிபர் அ. [illegible] ஆகியோர் கலந்து கொண்டனர். (ம-207)


## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை
திருமதி நிரஞ்சலா துரைமணி அவர்களின் அன்புத் தாய்

**திருமதி சிவசுப்பிரமணியம் சிவபாக்கியம்**

அவர்கள் 14.11.2010இல் காலமானதையிட்டுத் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரி கழகம்,
யா/சென்.மேரிஸ் வித்தியாலயம், யாழ்ப்பாணம். (O.L.R)
(106071)

## கண்ணீர் அஞ்சலி

யாழ். போதனா வைத்தியசாலையில் கடமையாற்றும் தாதிய உத்தியோகத்தரான திருமதி குமாரதேவி யோகேஸ்வரன் அவர்களின் அன்புத் தாய்

**பொன்னுத்துரை சின்னப்பிள்ளை**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் கண்ணீர் அஞ்சலிகளையும் காணிக்கையாக்குகின்றோம்.

தாதிய உத்தியோகத்தர்
நலன்புரிக் கூட்டுறவுச் சங்கம்.
(106100)

## ஐந்தாம் ஆண்டு நினைவலைகள்

மண்ணில்
10 . 07 . 1924



விண்ணில்
11 . 12 . 2005

**அமரர் சுப்பையா செல்லத்துரை**

திதி: கார்த்திகை பூர்வபக்க ஏகாதசி

நீள்நிலத்துலகிலே நீந்திவந்த நிலவொளியே
ஆழ்கடலின் அடியிலே மோனத்தவமிருந்த முத்தே
புண்ணியம் பலவும் செய்து எமை புகழுடனே வாழவைத்தீர்
கண்ணியமாக எமைக் கலங்காமல் காத்து நின்றீர்
ஆண்டுகள் ஐந்து சென்றாலும் ஐயா நாம் உம்மை மறவோம்.

சங்குவேலி தெற்கு,
மானிப்பாய். (106093)

நீங்காத நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

**யோண் பீற்றர் (கற்கண்டு) யசிந்தா (ஜெயா)**



நாவாந்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட யோண்பீற்றர் யசிந்தா (15.11.2010) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற யோண் பீற்றரின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற [illegible] கிறகோரி - காணிக்கை தம்பதியரின் பாசமிகு மூத்த மகளும் காலஞ்சென்றவர்களான சந்தியோகு அந்தோனிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் தயான் அருட் சகோதரர் டன்சன் (வரதன்) பென்ஹர், றோஜினி, ரஜீவ் (கபில்), ஜெயானிந்தன், ஷாமினி (கஜனி) ஆகியோரின் பாசமிகு தாயும் ரைற்றஸ், சுபாஷினி ஆகியோரின் அன்பு மாமியும் யோயஸ் (தம்பா), மெர்லின் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் மெசியா, லூசியா, றோசாறி, கில்லிகாட் (பேபி விலிஸ்ரஸ்) டியூக், ஜேக்கப் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் காலஞ்சென்ற ராசமணி மற்றும் அருமை, செல்லமணி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதி ஆராதனை (20.11.2010) சனிக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நாவாந்துறை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சென்.மேரிஸ் வீதி,
நாவாந்துறை வடக்கு, யாழ்ப்பாணம்.
தொ.பே. 071 3578087,
077 0666196
(106086)

தகவல்:
பிள்ளைகள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர் பாதுகாப்பு வலயத்தில் வாழ்விடங்கள், வர்த்தகநிலையங்கள்

## இதனால் மக்களுக்கு வருமான இழப்பு எனக் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், நவ.17

பொதுமக்களின் வாழ்விடங்கள் மற்றும் வர்த்தக நிலையங்கள் இராணுவத்தினரின் அதியுயர் பாதுகாப்பு வலயங்களாக உள்ளதனால் யாழ்ப்பாண மக்களுக்கு வருமான இழப்பு ஏற்பட்டுள்ளது எனக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

ஆஸ்திரேலிய தூதர் மற்றும் ஆசிய மன்றப் பிரதிநிதிகள், யாழ். மாநகர சபைத் தனியார் நிறுவனப் பிரதிநிதிகள் ஆகியோருக்கு இடையே கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் காலை யாழ்.மாநகர சபை கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

வெளிநாட்டுப் பிரதிநிதிகள் முன்னிலையில் அங்கிருந்தவர்களால் மேற்கண்ட குற்றஞ்சாட்டுத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



அவுஸ்திரேலிய உதவி நிறுவன ஆலோசகர்களான டாக்டர் சிறிஸ், எமிரி, சிரேஷ்ட நிகழ்ச்சித் திட்ட முகாமையாளர் சுந்தரி ஜெயசூரிய, ஆசிய மன்றத்தின் சிரேஷ்ட தொழில் நுட்ப ஆலோசகர் அ.சுபாகரன் ஆகியோர் இதில் கலந்துகொண்டனர்.

யாழ். மாநகர சபை ஆணையாளர் மு.ச. சரவணபவ தலைமையில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலின் போது முன்வைக்கப்பட்ட விடயங்கள் வருமாறு:-

* யாழ் மாநகர சபையின் எல்லைகள் விஸ்தரிக்கப்பட வேண்டும்.
* யாழ். மாவட்டத்தின் நிலத்தடி நீர் மாசடைந்துள்ளது. எனவே சுத்தமான குடிதண்ணீரை மக்கள் பெறுவதற்கு திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும்.
* யாழ். மாநகர சபை ஆதன வரியை மக்களிடமிருந்து பெறும் போது அதனை அதிகரித்து உடனடியாக அறவிடமுடியாது. அவை படிப்படியாகவே அதிகரிக்க முடியும். அதேவேளை மாநகர சபை மக்களுக்கு மேலும் வசதிகளை வழங்க வேண்டும்.

இந்தக் கோரிக்கைகளுக்கு பதிலளித்துப் பேசிய அவுஸ்திரேலிய நாட்டுப் பிரதிநிதி டாக்டர் சிறிஸ், இந்தக் கலந்துரையாடலின் போது முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் சிலவற்றுக்கு உதவுவது குறித்து நாம் பரிசீலனை செய்வோம். தொடர்ந்தும் எமது உதவிகள் கிடைக்கும் - என்றார்.

அவுஸ்திரேலிய உதவி நிறுவனத்தின் நிதி உதவியுடன் ஆசிய மன்றத்தின் மூலம் யாழ். மாவட்டத்தில் யாழ். மாநகர சபை ஊடாகச் சில திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.(ம-14)

## மாற்று வலுவுள்ளோர் வாரம் அறிவிப்பு

சுன்னாகம், நவ.17

சர்வதேச மாற்றுவலுவுடையோர் தினத்தை ஒட்டி எதிர்வரும் 27ஆம் திகதி சனிக்கிழமை தொடக்கம் டிசெம்பர் மூன்றாம் திகதி வெள்ளிக் கிழமை வரை மாற்றுவலுவுள்ளோர் வாரமாக பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது.

இவ்வாண்டு 'சுயாதீனம் மற்றும் உட்படுத்தலூடாக வலுவிழந்தோரை வலுவூட்டுவோம்' என்ற தொனிப்பொருளில் மாற்றுவலுவுள்ளோர் வாரம் கொண்டாடப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. தேசிய மட்ட நிகழ்ச்சிகள் கல்வி அமைச்சரின் தலைமை யில் கொழும்பு ஹவ்லொக் ரவுண் லும்பினி மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. (ம- 204-38)




# அச்சுவேலி மத்திய கல்லூரிக்கான மைதானக் காணியை பயன்படுத்த வழிசெய்யக்கோரி மாணவர் உண்ணாவிரதம்

அச்சுவேலி, நவ.17

அச்சுவேலி மத்திய கல்லூரி மைதானத்திற்கு கொள்வனவு செய்யப்பட்ட காணியை 8 வருடங்களின் பின்பு பெற்றுள் கொள்வதற்கு மாணவர்கள் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். காணியைப் பயன்படுத்துவதற்கு வாய்ப்பு தரவேண்டும் எனக்கோரி பாடசாலை மாணவர்கள் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை வகுப்புக்களை முழுமையாகப் புறக்கணித்தனர். அத்துடன் கனிஷ்ட பிரிவு மாணவர்கள் உண்ணாவிரதப் போராட்டத்திலும் ஈடுபட்டனர்.

எட்டு வருடங்களுக்கு முன்பு கனடா பழைய மாணவர் சங்கத்தின் நிதி உதவியுடன் 8 பரப்புக் காணி பாடசாலை மைதானத்துக்கென கொள்வனவு செய்யப்பட்டது.

பாடசாலைக்கு அருகில் உள்ள இந்தக் காணிக்குச் செல்வதற்கு நடைபாதை வழங்குவதற்கு தனியார் ஒருவர் ஒப்புதல் தராமையினால் காணியைப் பயன்படுத்த முடியாத நிலை காணப்படுகின்றது.



பாடசாலைக்கும், மைதானத்துக்காக வாங்கப்பட்ட காணிக்கும் இடைப்பட்ட துண்டுக் காணி தனியார் ஒருவருக்குச் சொந்தமானது. அதனை விற்பதற்கு அவர் தயாராக இல்லை. அவர் விற்காத வரையில் மைதானத்துக்கு பாதை ஏற்படுத்த முடியாதுள்ளது என்பதே மாணவர்களின் குற்றச்சாட்டு.

இதுவரை எடுத்த முயற்சிகள் பலன் அளிக்காமையால் காணிப்பிரச்சினைக்கு உடனடியாகத் தீர்வு காணக்கப்பட்டு விளையாட்டு மைதானப் பயன்பாட்டிற்கு அதனை வழங்க வேண்டும் எனக்கோரி மாணவர்கள் வகுப்புக்களை பகிஷ்கரித்து உண்ணா விரதம் மேற்கொண்டனர்.

காணிப்பிரச்சினை தொடர்பாக மாணவர் மேற்கொள்ளும் முன்னெடுப்புக்கு பெற்றோரும், பழைய மாணவர் சங்க நிர்வாகிகளும் பூரண ஆதரவு வழங்கி வருகின்றனர்.

காணிப்பிரச்சினைக்கு முழுமையான தீர்வு கிடைக்கும் வரை தமது போராட்டம் தொடரும் என கல்வி மாணவர் மன்றம் அறிவித்துள்ளது. மாணவர்களின் போராட்டம் தொடர்பாக யாழ். கல்வி வலய கல்விப்பணிப்பாளருக்கும் வலி.கிழக்கு பிரதேச செயலாளர் மருதலிங்கம் பிரதீபனுக்கும் மாணவர் தரப்பினால் அறிவிக்கப்பட்டதை அடுத்து அவர்களும் உரிய தீர்வு தொடர்பாக கலந்துரையாடுவ தற்கு முன்வந்திருக்கின்றனர்.(ம- 11)

# யாழ். வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவும் இரவு 8 மணி வரை இனி இயங்கும்

## புதிய நடைமுறை 15ஆம் திகதி ஆரம்பம்

யாழ்ப்பாணம், நவ.17

யாழ்.போதனா வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவில் (ஓ.பீ.டி) நேற்றுமுன்தினம் 15ஆம் திகதி தொடக்கம் காலை 7 மணிமுதல் இரவு 8 மணிவரை சிகிச்சை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதற்கான சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாகவும் வைத்தியசாலையின் பணிப்பாளர் திருமதி பவானி அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஜனாதிபதி பணிப்பின்படி அடுத்து நாட்டில் உள்ள அனைத்துப் போதனா வைத்தியசாலைகளிலும் காலை 7 மணி முதல் இரவு 8 மணிவரை வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவு இயங்கவேண்டும் என்று சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

இதன் பிரகாரம் யாழ்.போதனா வைத்தியசாலையிலும் அத்தகைய நடைமுறையைப் பின்பற்ற சகல நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன என்று பணிப்பாளர் மேலும் தெரிவித்தார். (ஒ-9)

# பசுப்பால் கொள்வனவு நிலையம் கொழும்புத்துறையில் வேண்டும்

யாழ்ப்பாணம், நவ.17

கொழும்புத்துறை பிரதேசத்தில் பசுப்பால் கொள்வனவு மற்றும் விற்பனை நிலையம் ஒன்றைத் திறந்துவைக்கவேண்டும் என்று பிரதேச மக்கள் உரிய தரப்பினரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தற்போது மக்கள் செறிந்து வாழும் இப் பிரதேசத்தில் விரத காலங்களிலும் மற்றும் முக்கிய தேவைக்கும் பசுப்பாலை பெறுவதற்கு நீண்ட தூரம் செல்லவேண்டியுள்ளது.

மேலும் இப்பிரதேசத்தில் மக்களின் வசதி கருதி பசும்பால் கொள்வனவு மற்றும் விற்பனை நிலையம் ஒன்றை ஆரம்பித்து வைப்பதற்கு கூட்டுறவு அபிவிருத்திச் சங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ம-201-26)

# வலி.தெற்கில் முன்பள்ளி ஆசிரியர்கள் கௌரவிப்பு

இணுவில், நவ. 17

வலி.தெற்கு பிரதேச சபைக்குட்பட்ட முன்பள்ளிகளின் ஆசிரியர்கள் பிரதேச சபையினராலும் பெற்றோர்களாலும் கௌரவிக்கப்பட்டனர்.

சுன்னாகம் பொதுநூல் நிலையத்தில் கடந்த ஞாயிறன்று இந்த நிகழ்வு இடம்பெற்றது. பிரதம முகாமைத்துவ உதவியாளர் எஸ்.சுகுணராஜ் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் அப்பிரதேசத்தைச் சேர்ந்த 106 முன்பள்ளி ஆசிரியர்கள் மலர் மாலை சூட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி ஆசிரியையும் உளவியலாளருமான திருமதி பகீரதி கணேசதுரை முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டனர் பிரதேச சபையின் செயலாளர் திருமதி மு.சுலோசனா சிறப்பு விருந்தினராகவும் பங்கேற்றர்.

நிகழ்வின் இறுதியில் ஆசிரியர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (ஒ-45)

# வட்டுக்கோட்டை நீர் விநியோகத்திட்டம் கலட்டிச் சந்திவரை விஸ்தரிக்க ஏற்பாடு

வட்டுக்கோட்டை நீர் விநியோகத்திட்டம் கலட்டிச் சந்தி வரை விஸ்தரிக்கப்படவுள்ளது. தேசிய நீர்வழங்கல் வடிகால் அமைப்பு சபையின் திட்டப்பணிப்பாளர் எந்திரி.தி. பாரதிதாசன் இதற்கான அனுமதியை வழங்கியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 20 வருடங்களுக்கு மேலாக வட்டுக்கோட்டை தேசிய நீர்வழங்கல் வடிகால் அமைப்பு சபையின் ஊடாக வட்டுக் கோட்டை, சங்கரத்தை மற்றும் இதர பகுதிகளுக்கு குடி தண்ணீர் வழங்கப்பட்டு வருகின்றது.

வட்டுக்கோட்டையில் கலட்டிச்சந்திவரையுள்ள மக்கள் நெடுங்காலமாக குடிதண்ணீர் வசதிக்காக நீண்டதூரம் பயணிக்க வேண்டியிருந்தது. இதனைக் கருத்திற்கொண்டு இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வட்டுக்கோட்டையில் இருந்து கலட்டிச் சந்தி வரை பைப்லைன் மூலம் குடிதண்ணீர் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தேசிய நீர் வழங்கல் வடிகால் அமைப்பு சபையின் திட்டப்பணிப்பாளர் எந்திரி தி.பாரதிதாசன், நவாலி ஹேமலதா ஞாபகார்த்த நிறுவனத்தில் இடம்பெற்ற நவாலி தெற்குப் பகுதிக்கான குடிதண்ணீர் விஸ்தரிப்பு கூட்டத்தில் தெரிவித்துள்ளார். (ம-204- 302)

# கைதடி ஆரம்ப சுகாதார நிலையத்தை மருத்துவ மனையாகத் தரம் உயர்த்துக

## பொது அமைப்புகள் கோரிக்கை

நாவற்குழி, நவ.17

கைதடி ஆரம்ப சுகாதார நிலையத்தைச் சுற்றயல் கூறு மருத்துவ மனையாகத் தரம் உயர்த்துமாறு கைதடிப் பிரதேச பொது அமைப்புகள் நீண்டகாலமாகக் கோரிக்கை விடுத்துவருகின்றன. யாழ். நகரத்திற்கும் சாவகச்சேரிக்கும் இடைப்பட்ட 16 கிலோமீற்றர் தூரத்துக்கிடையில் சுற்றயல்கூறு மருத்துவமனை எதுவுமில்லை.

இதனால், கைதடி, நாவற்குழி, நுணாவில், மட்டுவில் பிரதேச மக்கள் வைத்திய சேவைகளைப் பெறுவதில் நீண்டகாலமாகச் சிரமங்களைஎதிர்நோக்கி வருகின்றனர்.

இதனைக் கருத்திற் கொண்டு இந்த ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்துமாறு கோரப்பட்டுள்ளது.

இதேவேளை வடமாகாண சபையின் உள்ளூராட்சி, சமூக சேவைகள், கிராம அபிவிருத்தி அமைச்சின் அலுவலகங்களும் ஜனவரி மாதம் முதல் கைதடியில் இயங்கவுள்ளன.

இந்நிலையில் தற்போது இவ் வைத்தியசாலை தரம் உயர்த்தப்படுமாயின் மாகாண அலுவலகத்தின் உத்தியோகத்தர்களும் நன்மைகளைப் பெறமுடியுமெனக் கூறப்படுகின்றது. (ம- 121)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 11 லட்சம் மரக்கன்றுகள் நடும் திட்டத்தை அலரிமாளிகையில் ஆரம்பித்தார் ஜனாதிபதி

கொழும்பு,நவ.17

நாம் இப்போது சுதந்திரமான நாட்டில் வாழ்கின்றோம். இன்று நாம் எமது எதிர்காலப் பரம்பரையினருக்காக பாரிய சேவையொன்றை செய்த இனமாகியுள்ளோம் - என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்றுமுன்தினம் மு.ப. 10.07 மணிக்கு பதினொரு லட்சம் மரக்கன்றுகள் நடும் திட்டத்தை ஆரம்பித்து வைத்தார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் இரண்டாவது பதவிக்காலம் ஆரம்பமாவதையொட்டி நடைபெறும் இத்திட்டம் நேற்றுக் காலை அலரிமாளிகையில் ஆரம்பமானது.

ஜனாதிபதி மஹிந்த இங்கு தொடர்ந்து கூறியவை வருமாறு:-

பதினொரு லட்சம் மக்கள் இன்று எமது நாட்டில் பதினொரு லட்சம் மரக்கன்றுகளை நட்டுள்ளனர். அத்துடன், வெளிநாடுகளிலுள்ள எமது தூதரங்களிலும் மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன.

நாட்டைக் கட்டியெழுப்பிக் கொண்டு முன்நோக்கிச் செல்லும் போது எமக்கு சுதந்திரமான காற்றை சுவாசிக்கக் கூடிய சூழல் இருக்கும்.

இன்று உலக சரித்திரத்தில் பாரிய சவாலாக மாறியிருப்பது உலகம் உஷ்ண மயமாவதாகும். இது மனிதனாலேயே உருவாக்கப்பட்டது. அபிவிருத்தியடைந்த நாடுகள் காபனை வளிமண்டலத்தில் கலப்பதற்கு வழி செய்துள்ளன.

அபிவிருத்தியடைந்த நாடுகளை விட நாம் சூழலைப் பாதுகாப்பதில் முன்னணியிலிருக்கின்றோம்.

- இவ்வாறு ஜனாதிபதி தெரிவித்தார்.

இதேவேளை -

நேற்றுமுன்தினம் நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் ஜனாதிபதியின் இரண்டாவது பதவிக்காலம் ஆரம்பமாவதையொட்டிய மரநடுகைத் திட்டம் ஆரம்பமானது.

அரச திணைக்களங்கள், பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், படைமுகாம்கள், பொலிஸ் நிலையங்கள், பொது இடங்கள் என்பவற்றில் இந்த மரநடுகைத் திட்டத்தை அரச உயரதிகாரிகள், படைத்தளபதிகள், அதிபர்கள் ஆகியோர் ஆரம்பித்து வைத்தனர். (சி)

# யாழ்.மாவட்டத்திலும் மரம் நடுகை ஆரம்பம்

யாழ்ப்பாணம், நவ.17

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் இரண்டாவது பதவிக்காலம் ஆரம்பமாவதையொட்டி நாடு முழுவதும் நடைமுறைப்படுத்தப்படும் 11 லட்சம் மரம் நடுகைத் திட்டம் நேற்று முன்தினம் ஆரம்பமானது. இதனையொட்டிய நிகழ்வுகள் யாழ். மாவட்டத்திலும் இடம்பெற்றன.

யாழ்.மாவட்டத்திலுள்ள அரச திணைக்களங்கள், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், பாடசாலைகள், பொலிஸ் நிலையங்கள், படைமுகாம்கள், யாழ்.மாநகரசபை ஆகிய இடங்களில் மரம் நடுகை வைபவங்கள் இடம்பெற்றன.

யாழ்.மாநகரசபையின் முதல்வர் தலைமையிலும் யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் தலைமையிலும், யாழ்.பொலிஸ் நிலையத்தில் பிரதிப் பொலிஸ்மா அதிபர் தலைமையிலும் நிகழ்வுகள் இடம்பெற்றன.

பருத்தித்துறை, கரவெட்டிப் பிரதேச செயலகங்களில் பிரதேச செயலர்கள்இவதீஸ்வரன், சிசத்தியசீலன் ஆகியோர் தலைமையிலும், வடமராட்சி கிழக்கு உதவி அரச அதிபர் அலுவலகத்தில் உதவி அரச அதிபர் நதிருலிங்கநாதன் தலைமையிலும் நேற்று முன்தினம் மு.ப. 10.07 மணிக்கு மரக்கன்றுகள் நாட்டப்பட்டன.

இதேபோல பருத்தித்துறை, வல்வெட்டித்துறை நகரசபைகள், கரவெட்டி பிரதேச சபை மற்றும் அரச அலுவலகங்களிலும் மரக்கன்றுகள் நடுகை மேற்கொள்ளப்பட்டன.

பருத்தித்துறை இ.போ.ச. டிப்போவிலும் மரக்கன்றுகள் நாட்டப்பட்டன.

தென்மராட்சிப் பிரதேசத்திலும் நேற்றுமுன்தினம் மரக்கன்றுகள் நாட்டும் திட்டம் பெரும் எடுப்பில் மேற்கொள்ளப்பட்டன.

அரச திணைக்கள அலுவலகங்கள், பாடசாலைகள், வைத்தியசாலைகள், பொதுச்சந்தைகள், மயானங்கள், வீதியோரங்கள், கூட்டுறவுச் சங்கங்கள் ஆலயங்கள் படை முகாம்கள், பொலிஸ் நிலையங்கள் போன்றவற்றில் மு.ப. 10.07 மணி தொடக்கம் 10.18 மணிவரை மரக்கன்றுகள் நாட்டப்பட்டன.

அந்தந்த நிறுவனத் தலைவர்க்ள் தலைமையிலான நிகழ்வுகள் நடைபெற்றன.

(த-7-26-236-207)

# அரசின் அலட்சியப் போக்குக் குறித்து கவலைப்படுகிறார் மல்வத்தை பீடாதிபதி

கொழும்பு நவ.17

அரசு நாட்டின் மக்களுக்குப் பெரும் அநீதி இழைத்து வருவதாகவும், அரச நிர்வாகிகள் மற்றும் எம்போன்றவர்களின் உபதேசங்களைக் காது கொடுத்துக் கேட்காதநிலையில் நாம்தொடர்ந்து வாய்திறப்பது பயனற்றதே என்று மல்வத்தை பீடாதிபதி திப்பட்டுவாவே ஸ்ரீ சுமங்கள தேரர் கவலை தெரிவிக்கிறார்.

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றி யத்தின் பதில் அமைப்பாளரான சஞ்ஜீவ பண்டார தலைமையிலான மாணவர் பிரதிநிதிகள் மல்வத்தை பீடாதிபதியான மகாநாயக்க தேரரை அண்மையில் சந்தித்திருந்தனர்.

அந்தச் சந்தர்ப்பத்தில் பல்கலைக்கழக மாணவர்கள் கைது செய்யப்படுவது சம்பந்தமாகவும் சில மாணவர்களுக்கு வகுப்புகள் தடைசெய்யப்பட்டுள்ளது தொடர்பாகவும் மல்வத்தைப் பீடாதிபதியிடம் விபரித்திருந்தனர்.

இந்தச் சந்திப்பின் போதே தேரர் மேற்கண்ட கருத்தைத் தெரிவித்தார் என்று சிங்களப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது. (ஒ-22)

# மற்றொரு பணிப்பெண்ணின் உடலிலும் 14 கம்பித்துண்டுகள்; 9 அகற்றப்பட்டன

கொழும்பு, நவ.17

குவைத் நாட்டில் தொழில் புரிந்து நாடு திரும்பிய மற்றுமொரு பணிப்பெண்ணின் உடலில் 14 கம்பித்துண்டுகள் காணப்பட்டதாகவும் அவற்றுள் ஒன்பது துண்டுகள் சத்திர சிகிச்சை மூலம் அகற்றப்பட்டுள்ளதாகவும் குருநாகல் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கொக்கரல்ல பொலிஸ் வலயத்துக்குட்பட்ட இப்பாகமுக, கும்பல் அங்க பிரதேசவாசியான 38 வயதுடைய வீ.ஆர்.லட்சுமி எனப்படும் இரு பிள்ளைகளின் தாயே கடந்த வெள்ளிக்கிழமை இவ்வாறு சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டார்.

அறுவைச் சிகிச்சை மூலம் இப்பெண்ணின் இடது பாதத்திலிருந்து ஒரு கம்பித்துண்டும் வலது கையில் இருந்து எட்டு கம்பித்துண்டுகளும் அகற்றப்பட்டதாக குருநாகல் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் டாக்டர் எஸ்.ராஜமந்திரி தெரிவித்தார்.

இடது கையிலுள்ள மேலும் நான்கு கம்பித்துண்டுகளும் வலது கையிலுள்ள ஒரு கம்பித்துண்டும் அடுத்த சத்திரசிகிச்சையின் மூலம் அகற்றப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

குவைத்தில் தான் பணிபுரிந்த வீட்டின் எஜமானி தனது சம்பளத்தைக் கேட்கும் போதெல்லாம் தன்னை மூர்க்கமாகத் தாக்கியதுடன் கம்பித் துண்டுகளை உடலில் ஏற்றியதாக இப்பெண் தெரிவித்துள்ளார்.

குவைத்திலிருந்து திரும்பி இரண்டு வாரங்களுக்குப் பின்பே இந்த சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

. இச்சம்பவம் தொடர்பான விரிவான அறிக்கையொன்றை அரசாங்கத்துக்குச் சமர்ப்பிக்கவுள்ளதகுருநாகல் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் வாஸ் குணவர்த்தன தெரிவித்துள்ளார். (ம-5)

# கட்சி முக்கியமல்ல மக்களுக்கான சேவையே தேவை

## பிரபா கணேசன் கூறுகிறார்

கொழும்பு,நவ.17

''நான் எங்கு இருக்கிறேன், எந்தக் கட்சியில் இருக்கிறேன் என்பதைவிட மக்களுக்கு என்ன செய்கிறேன், என்ன செய்யப் போகிறேன் என்பதே முக்கியம்.'' என கொழும்பு மாவட்ட எம்.பி. பிரபா கணேசன் தெரிவித்தார்.

கொட்டாஞ்சேனை சிவானந்தா ஒழுங்கையிலுள்ள ஜீசஸ் சேவ்ஸ் சபையின் ஸ்தாபகர் ஹோல்டர் ராஜமணிக்கு கூடாரங்களை கையளித்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தனது உரையில் தெரிவித்தவை வருமாறு:-

இந்தக் கூடாரங்கள் இச்சபைக்குவரும் அங்கத்தவர்களுக்கு பெரும் உதவியாக இருக்கும். ஜீசஸ் சேவ்ஸ் அங்கத்தவர்கள் எனது அரசியல் வாழ்க்கையில் மறக்க முடியாதவர்களாக உள்ளனர். ஒவ்வொரு தேர்தல் நேரத்திலும் எனக்கு அவர்கள் பேருதவி புரிந்துள்ளார்கள். இந்த பெரிய சபைக்கு சேவை செய்ய நான் கடமைப்பட்டுள்ளேன்.

நான் எந்த இடத்தில் இருந்தாலும் எனது மக்களுக்கான சேவையையும் அபிவிருத்தியையும் முன்னெடுத்துச் செல்வேன். எமது மக்களுக்கு அபிவிருத்தியிலோ, அல்லது வேறெந்த வகையிலோ பாகுபாடு காட்டப்படுமாயின் நான் மௌனம் சாதிக்கப் போவதில்லை.

ஜீசஸ் சேவ்ஸ் சபையின் ஸ்தாபகர் தம் போதனைகள் மூலம் சமூகத்திற்கு நற்சிந்தனைகளையும் நல்லொழுக்கத்தையும் ஏற்படுத்திவருவது பாராட்டக் கூடியதாகும். இந்த சபையுடன் இணைந்து வட கொழும்பிலுள்ள ஆயிரக்கணக்கான ஏழை, எளிய மாணவ மாணவிகளுக்கு எதிர்வரும் ஜனவரி மாத ஆரம்பத்தில் பாடப் புத்தகங்கள் வழங்கத் திட்டமிட்டுள்ளேன்.

தற்போது பலலட்சரூபா செலவில் வடகொழும்புப் பகுதி தோட்டப் புறங்களில் பாதைகள், சனசமூக நிலையங்கள், மலசலகூடங்கள், கழிவுநீர்க் கால்வாய்கள் போன்றவை எனது முயற்சியின் பேரில் அமைக்கப்பட்டு வருகின்றன '' - என்றார்.

# கொழும்பில் வெள்ளம் தேங்குவதை தடுக்க மூன்று நீர்த்தேக்கங்கள்

கொழும்பு,நவ.17


கொழும்பு மற்றும் அதனைச் சூழவுள்ள பகுதிகளில் மழை காலங்களில் வெள்ளம் தேங்கி நிற்காமல் இருக்கும் வகையில் மூன்று பாரிய நீர்த்தேக்கங்களை நிர்மாணிப்பதற்கு காணி சீர்திருத்த அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் தீர்மானித்துள்ளது.

இந்த மூன்று பாரிய நீர்த் தேக்கங்களும் பேவத்த, கொஸ்வத்த, கிரிமண்டல மாவத்த ஆகிய பிரதேசங்களிலே நிர்மாணிக்கப்படவுள்ளன என்று சபையின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அதற்கமைய முதலாவது நீர்த்தேக்க நிர்மாணப் பணிகள் பேவத்தையில் சனியன்று17 ஹெக்டயர் அரச நிலப் பரப்பில் காணி சீர்திருத்த அபிவிருத்தி சபையினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த நிர்மாணப் பணிகள் நிறைவடைந்த பின்னர் பாரிய மழை பெய்யும் போது அதனால் ஏற்படும் வெள்ளம் இந்த நீர்த் தேக்கங்களைச் சென்றடையும். இதனால் மழை காலங்களில் ஏற்படும் அனர்த்தங்கள் தவிர்க்கப்படும் என்றும் சபையின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார் (சி)

## பசுமைப் புரட்சி...



ஆரம்பம்: ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் இரண்டாவது பதவிக்காலம் ஆரம்பமாவதையொட்டிய மரம் நடுகை நிகழ்வை யாழ்.மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜாவும், யாழ்.பொலிஸ் நிலையத்தில் பிரதிப் பொலிஸ் மா அதிபர் காமினி டி சில்வாவும், யாழ்.பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் அதன் தலைவர் கே.தெய்வேந்திரனும் யாழ்.பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கனும் மரங்களை நடும் போது எடுக்கப்பட்ட படங்கள். (த-23-26-236-319)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அளம்பில் றோ.க. வித்தியாலயம் நீக்கம்; ஆட்சேபித்து பொது அமைப்புக்கள் கடிதம்

## ஆளுநருக்கு அனுப்பி வைக்கப்பட்டது

முல்லைத்தீவு,நவ.17

மஹிந்த சிந்தனையின் கீழ் அபிவிருத்தி செய்வதற்கு முல்லைத் தீவு கல்வி வலயத்தில் அளம்பில் றோ.க.வித்தியாலயம் ஏற்கனவே தெரிவு செய்யப்பட்டபோதிலும் சிலரின் தூண்டுதல்களால் தற்போது வேறொரு பாடசாலை தெரிவு செய்யப்பட்டுள்ளதாக அளம்பில் பொது அமைப்புக்கள் வடமாகாண ஆளுநருக்குக் கடிதம் மூலம் புகார் தெரிவித்துள்ளன.

அந்தக் கடிதத்தின் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

மஹிந்த சிந்தனையின்கீழ் தரமுயர்வு வழங்கப்பட்டு அபி விருத்தி செய்யும் பொருட்டு நாடு பூராவும் 1000 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. முல்லைத்தீவு மாவட்டத்தில் 10 பாட சாலைகள் தெரிவு செய்யப்பட்டு அவற்றின் பெயர் விவரங்கள் ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ளன. இதில் அளம்பில் றோ.க. வித்தியாலயத்தின் பெயரும் உள்ளடக்கப்பட்டிருந்தது. தற்போது இந்தப் பட்டியலிலிருந்து அளம்பில் றோ.க.வித்தியாலயத்தின் பெயர் நீக்கப்பட்டு செம்மலை மகாவித்தியாலயம் சேர்க்கப்பட் டுள்ளதாக அறிந்து ஏமாற்றமும், வேதனையும் அடைந்துள்ளோம். இந்தச் செய்தியைக் கேட்ட வுடன் அளம்பில் பாடசாலையின் ஆசிரியர்களும், மாணவர்களும், பெற்றோர்களும் உளம் நொந் தவர்களாகக் காணப்படுகின்றனர்.

இவ்வாறான செயற்பாடுகள் அளம்பில் கிராமத்திற்குப் புதிய தொன்றல்ல. கடந்த காலத்தில் எமது கிராமத்திற்குக் கிடைக்க வேண்டிய மருத்துவமனையை செம்மலைக்கு மாற்றிவிட்டார்கள். எமது கிராமம் தொடர்ந்து ஏமாற்றப்பட்டுக் கொண்டே இருக்கின்றது.

ஏற்கனவே அளம்பில் றோ.க.வித்தியாலயத்தைத் தெரிவு செய் தமைக்கான முக்கிய காரணங்கள் வருமாறு:-

இப்பாடசாலையைச் சுற்றி 12 கிராம சேவையாளர் பிரிவுகள் உள்ளன. கொக்குளாய், முல்லைத்தீவு பிரதான வீதியில் இப்பாடசாலை அமைந்துள்ளது. பாடசாலைக்கு அரசினால் வழங்கப்பட்ட 8 ஏக்கர் காணி உண்டு. அயல் கிராமங்களைவிட எமது கிராமம் சனத்தொகையில் கூடியது. அத்துடன் 650 மாணவர்கள் இப்பாடசாலையில் தற்போது கல்வி கற்று வருகிறார்கள். எனவே எமது பாடசாலையின் தெரிவே சரியான தென்றும் இவர்கள் கூறுகின்றனர்.

ஆகவே, இத்தகைய காரணங்களைக் கருத்தில் கொண்டு முன்னைய முடிவின் பிரகாரம் அளம்பில் றோ.க.வித்தியாலயத் தைத் தெரிவுசெய்து இக்கிராம மக்களுக்கு உதவுமாறு இந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அளம்பில் கிராமத்தைச் சேர்ந்த 11 பொது அமைப்புக்கள் சேர்ந்து ஆளுநருக்கு இந்தக் கடிதத்தை அனுப்பிவைத்துள்ளன. இதன் பிரதிகள் ஜனாதிபதி, அமைச்சர்களான பசில் ராஜபக்ஷ, டக்ளஸ் தேவானந்தா, றிசாட் பதியுதீன், நாடாளுமன்ற உறுப்பினர்களான நாமல் ராஜபக்ஷ, சிறிரங்கா, இராணுவ உயர் அதிகாரிகள், முல்லைத் தீவு அரச அதிபர், மாகாண, வலயக் கல்விப் பணிப்பாளர்கள், யாழ். ஆயர் ஆகியோருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

### அதிபர் விளக்கம்

'குமுழமுனைப் பாடசாலையைத் தரமிறக்க பொது அமைப் புக்கள் எதிர்ப்பு' என்ற தலைப்பில் வெளியான செய்தி தொடர் பில் அளம்பில் றோமன் கத்தோலிக்க வித்தியாலய அதிபர் விளக்கம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-உதயனில் வெளியான செய்தியில் கல்விப் பணிப்பாளருக்கு வழங்கப்பட்ட மகஜரில், "தங் களால் தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைக்குரிய காணி தனியா ருக்குச் சொந்தமானது'' எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது. அவர் கள் அவ்வாறு தெரிவித்தமை தவறானது. இந்தத் தகவல் தொடர்பில் எமது பாடசாலைச் சமூகம் மிகுந்த வேதனை அடை கிறது என்று தெரிவித்துள்ளார். (உ-க)

# அதிபர்களுக்கான செயலமர்வுகள்

கிளிநொச்சி,நவ.17

கிளிநொச்சிக் கல்வி வல யத்தில் கடமையாற்றும் பாட சாலை அதிபர்களுக்கான தலைமை விருத்திச் செயலமர்வுகள் எதிர் வரும் 19, 20 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன.

கிளிநொச்சி இந்துக் கல் லூரியில் காலை 8.30 மணி முதல் மாலை 4.30 மணிவரை இருநாள்களும் இந்தச் செயல மர்வுகள் இடம்பெறும்.

கிளிநொச்சி கல்வி வலயத் தைச் சேர்ந்த பாடசாலை அதி பர்கள் அனைவரையும் இந்தச் செயலமர்வுகளில் பங்குபற் றிப்பயன் பெறுமாறு கிளி நொச்சிக் கல்விப் பணிப்பாளர் த.குருகுலராஜா வேண்டுகோள் விடுத்துள்ளார். (க-405)

# கல்லூரி ஒளி விழா

கிளிநொச்சி,நவ.17

கிளிநொச்சி மத்திய கல்லூரி யில் கத்தோலிக்க மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் ஒளிவிழா நிகழ்வு நடைபெற் றுள்ளது.

நேற்றைய தினம் காலை 9 மணிக்கு ஒன்றியத்தின் தலை வர் ஆசிரியர் சூ.பரம்சோதி தலைமையில் நிகழ்வுகள் ஆரம் பமாகின.

இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக கிளிநொச்சி கல்வி வலயத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் க.இரத் தினகுமார் கலந்துகொண்டார்.

தென்னிந்தியத் திருச்சபை யினர், அமெரிக்க மிஷனைச் சேர்ந்தோர், புனித திரேசாள் தேவாலயத்தின் பங்குத் தந்தை ஆகியோர் விசேட வழிபாடு களை நடத்தினர்.

விழாவின் இறுதியில் கத்தோ லிக்க மாணவர் ஒன்றியத்தி னால் நடத்தப்பட்ட பொது அறிவுப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பரி சளிக்கும் நிகழ்வும், மாண வர்களின் கலை நிகழ்வும் இடம்பெற்றன. (க-405)




# வவுனியா மன்னார் மாவட்டங்களில் நான்கு சமூகப் பராமரிப்பு நிலையங்கள்

நாவற்குழி,நவ.17

வவுனியா மாவட்டத்தில் மூன்றும், மன் னாரில் ஒன்றுமாக நான்கு சமூகப் பராமரிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

வவுனியா மாவட்டத்தில் வவுனியா தெற்கு, வவுனியா வடக்கு, நெடுங்கேணி, செட்டி குளம் ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளி லும், மன்னாரில் மன்னார் நகரச் செயலர் பிரிவிலும் இவை அமைக்கப்பட்டு வருகின்றன.

மாகாண விசேட நிதித்திட்டத்தின்கீழ் வடமாகாண சமூக சேவைகள் பணிப்பாளர் க.சிவகரன் இவற்றை அமைப்பதற்கான நிதியை வழங்கியுள்ளார். அடுத்த மாதத்தினுள் இவை அமைக்கப்பட்டுவிடுமெனத் தெரிவிக் கப்படுகின்றது.

இந்த நிலையங்கள் செயற்பட ஆரம்பித் ததும் வறிய மக்கள் ஒரே இடத்தில் தமக்குரிய சகல சேவைகளைப் பெறக்கூடியதாக இருக்கு மெனக் கூறப்படுகின்றது.

(க-121)

தானம்.....



முறுவல்: கிளிநொச்சி வந்திருந்த நாமல் ராஜபக்ஷ தலைமையிலான குழுவினர் கிளிநொச்சி மத்திய கல்லூரிக்குத் தளபாடங்களை சம்பிரதாபூர்வமாகக் கைய ளிக்கின்றனர். வடமாகாண ஆளுநரும் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிரங்காவும் உடன் உள்ளனர். (க)

# கோட்டக் கல்விப் பணிப்பாளருக்கு சிறப்பான பிரிவுபசார வைபவம்

பூநகரி,நவ.17

பூநகரிக் கோட்டக்கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றி ஓய்வுபெற்ற தி.கணபதிப்பிள்ளை கௌரவிக்கப்பட்டுள்ளார்.

இந்த நிகழ்வு கடந்த 8 ஆம் திகதி முற்பகல் 11.30 மணிக்கு கிளிநொச்சி ஜெயபுரம் மகாவித் தியாலய மண்டபத்தில் நடை பெற்றது. பூநகரிக் கோட்ட அதி பர் சங்கத் தலைவர் சு.கண பதிப்பிள்ளை இதற்குத் தலைமை தாங்கினார். இந்த நிகழ்வில் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் த.குருகுலராஜா முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டார். பூநகரிப் பிரதேசசபைச் செயலாளர் இ.துரைசிங்கம், பூநகரிக் கோட்ட அதிபர்கள், ஆசிரியர்கள், பாட சாலை மாணவர்கள் ஆகியோ ருடன் ஜெயபுரம் கிராம அமைப் புக்களின் பிரதி நிதிகளும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

தி.கணபதிப்பிள்ளை பூநகரி கறுக்காய்த்தீவு மண்ணில் பிறந் தவர். பல பாடசாலைகளில் ஆசிரியராகப் பணி புரிந்து பல புத்தி ஜீவிகளை உருவாக்கிய வர். அதேவேளை வேரவில் மகாவித்தியாலயம், கறுக்காய் தீவு மகாவித்தியால யம், பூநகரி மகாவித்தியாலயம், நல்லூர் மகாவித்தியாலயம் ஆகிய பாட சாலைகளில் அதிபராகவும் கடமைபுரிந்தவர்.

இவர் 2003 ஆம் ஆண்டு தொடக்கம் 7 வருடங்கள் பூந கரிக் கோட்டக் கல்விப் பணிப் பாளராகப் பணிபுரிந்து பல அரிய சேவைகளை ஆற்றிய பின் தனது சொந்த மண்ணி லேயே ஓய்வுபெற்றமை சிறப்பு அம்சமாகக் கருதப்படுகின்றது. (க-406)

# மன்னாரில் மாற்று வலுவுள்ளோர் சுயதொழிலில் ஈடுபடுவதற்கு உதவி

நாவற்குழி,நவ.17

வடமாகாண சமூகசேவை கள் திணைக்களம் மன்னார் மாவட்டத்திலுள்ள மாற்று வலு வுள்ளோர் சிலருக்குச் சுயதொழில் உதவிகளை வழங்கிவருகின்றது.

மாந்தைமேற்குப் பிரதேச செயலர் பிரிவில் 21 பேருக்கும், மன்னார் நகர பிரதேச செயலர் பிரிவில் 15 பேருக்கும், மடுப் பிரதேச செயலர் பிரிவில் 14 பேருக்கும் தலா 50 ஆயிரம் ரூபா சுயதொழில் உதவியாக வழங்கப் பட்டு வருகின்றது. இந்த உதவித் தொகை மூன்று கட்டங்களாக வழங்கப்படுவதாகவும் தெரிய வருகின்றது.

மாற்றுவலுவுள்ளோர் இந்த உதவித் தொகையின்மூலம் வியாபாரம், கருவாடு தயாரித் தல், மாடுவளர்ப்பு, கோழிவளர்ப்புப் போன்ற சிறுகைத்தொழில்களை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த உதவித்தொகை போது மானதாக உள்ளதால் சுயதொழில் கள் மூலம் நல்ல வருமானத்தை ஈட்ட முடிவதாகப் பயனாளி கள் தெரிவித்துள்ளனர். இந்தத் திட்டம் கடந்த வருடம் யாழ்ப் பாண மாவட்டத்தில் அறிமுகப் படுத்தப்பட்டு 300 பேர்வரை யில் பயன்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(க-121)

# கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகளில் பங்குச் சந்தை தொடர்பான செயலமர்வு

கிளிநொச்சி,நவ.17

கிளிநொச்சி மாவட்டப் பாட சாலைகளில் கல்விகற்கும் வணிகப் பிரிவு மாணவர்க ளுக்குப் பங்குச்சந்தை தொடர் பான செயலமர்வொன்று நடை பெற்றுள்ளது.

க.பொ.த உயர்தரத்தில் வணிகப் பிரிவில் கல்வி கற்கும் மாணவர்களுக்கும், தரம் 10,11 இல் வணிகக் கல்வி கணக் கீடுப் பாடத்தைக் கற்கும் மாண வர்களுக்கும், கற்பிக்கும் ஆசிரி யர்களுக்கும் இந்தப் பங்குச் சந்தை தொடர்பான செயல மர்வு கடந்த 28, 29 ஆம் திகதிகளில் கிளிநொச்சி இந்துக் கல்லூரியில் நடைபெற்றது.

முதல் நாள் மாணவர்களுக் கான செயலமர்வும், மறு நாள் ஆசிரியர்களுக்கான செயலமர் வும் நடைபெற்றன.

இலங்கை பிணைகள் பரி மாற்று ஆணைக்குழுவின் மற்றும் கிளிநொச்சி வலயக் கல்வி அலுவலகத்தின் ஏற்பாட்டின்கீழ் நடைபெற்ற இச்செயலமர்வில் பெருமளவு மாணவர்களும் ஆசிரியர்களும் கலந்துகொண்டனர்.

கிளிநொச்சி முருகானந்தா மகாவித்தியாலய அதிபரும் முன்னாள் கிளிநொச்சி கல்வி வலய வர்த்தகபாட சேவைக் கான ஆலோசகருமான தி.வர தன் தலைமையில் இடம்பெற்ற இந்தச் செயலமர்வில் இலங்கை பிணைகள் பரிமாற்று ஆணைக் குழுவின் உத்தியோ கத்தரான சாயிமாதவன் பங்குச் சந்தை தொடர்பான விளக்கங் களை அளித்தார். இந்தச் செயலமர்வு க.பொ.த.உயர் தரத்தில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு உப யோகமாக அமைந்தது. (க-405)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாகாணமட்ட புதிர்ப் போட்டி; நெல்லியடி ம.விக்கு 7 இடங்கள்

யாழ்ப்பாணம், நவ.17

மாகாண மட்டக் கணிதப் புதிர்ப்போட்டியில்-2010 இல் வடமராட்சி வலயத்தின் சார்பில் 13 இடங்கள் பெறப்பட்டுள்ளன.

அதில் யாழ்.நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் 3 முதலிடம், ஒரு இரண்டாமிடம் மற்றும் 3 மூன்றாமிடம் என மொத்தம் 7 இடங்களைப் பெற்றுள்ளது.

இக்கல்லூரி வடமராட்சி வலய மட்ட கணிதப் போட்டிகளில் 10 இடங்களைப் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மாகாண மட்டப் போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்கள் விவரம் வருமாறு:

சி.லக்சிகா (முதலாமிடம், தரம்- 6), த.அபிஷேகா (3ஆம் இடம்-தரம்-7), ம.துஷிதா (3ஆம் இடம், தரம்-8), ம.கலாமணி (முதலாம் இடம், தரம்-9), வி.விதுர்ஷன் (முதலாம் இடம், தரம்-9), செ.சஞ்சிகா (இரண்டாமிடம், தரம் 11), பா.லக்ஷிப்பிரியா (3ஆம் இடம், தரம்-11). (ம-ற)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி புஸ்பரானி மகேந்திரவர்மன் (கோகிலா)



சிறுவிளான் இளவாலையைப் பிறப்பிடமாகவும், பலாலி வீதி கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்டவர்

திதி: பூர்வபட்ச ஏகாதசி

மலர்வு 16.06.1949 உதிர்வு 28.11.2009

ஓராண்டு கழிந்தாலும் ஓராயிரம் உங்கள்
நினைவுகளோடு நாம்.....
உங்களை மெழுகாக்கி
எம்மை ஒளிரவைத்தீர்கள்.:
நீங்கள் எம் குடும்பத்தின்
குல தெய்வம்
தங்களின் ஆத்மசாந்திக்காக
நாம் நித்தமும் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கணவர், பிள்ளைகள், மருமக்கள், சகோதரர்கள், பேரப்பிள்ளைகள்.

பலாலி வீதி,
கோண்டாவில். (106085)


## வீதி புனரமைப்பு

யாழ்ப்பாணம், நவ.17

பல வருடங்களாக புனரமைப்புச் செய்யப்படாமல் இருக்கும் நீர்வேலி தெற்கு, பூதர்மடம் வீதி புனரமைப்புச் செய்யப்படவுள்ளது.

இந்த வீதி புனரமைப்புக்குக் கற்கள் பறிக்கப்பட்டு வருகின்றன.

இந்த வீதியைப் புனரமைப்புச் செய்வதற்கு வலி.கிழக்குப் பிரதேச சபை நடவடிக்கை மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (204-26)

## கருத்தரங்குகள்

கோப்பாய், நவ.17

வலி.கிழக்குப் பிரதேச செயலர் பிரிவில் உலக வங்கி வீட்டுத் திட்டத்தில் தெவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கான கருத்தரங்கு நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு நீர்வேலி தெற்குக் கிராம அபிவிருத்திச் சங்கத்தில் நடைபெறவுள்ளது.

நேற்றுச் செவ்வாய்க்கிழமை நடைபெறவிருந்த கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளதாகவும் பிரதேச செயலர் தெரிவித்துள்ளார்.

கட்டட விண்ணப்பத்திற்கான அனுமதி, வீட்டுத்திட்டத்தை ஆரம்பிப்பது தொடர்பான கருத்துரைகளை உலகவங்கி மற்றும் மாவட்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் வழங்க உள்ளதால் தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளைக் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (204-72)

* * *

தென்மராட்சி, நவ.17

முல்லைத்தீவுக் கல்வி வலய பாடசாலைகளின் முதலுதவி விரிவுரையாளர் பயிற்சி ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் இன்று புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரியில் நடைபெறுமென வடக்கு மாகாண சாரணர் ஆணையாளர் த.நா. போஜன் அறிவித்துள்ளார். (ம-207)


UNIVERSITY OF JAFFNA SRI LANKA

## VACANCIES

University of Jaffna will entertain applications upto **02.12.2010** from suitably qualified persons for the under mentioned posts **on contract basis.**

**FACULTY OF MANAGEMENT STUDIES & COMMERCE**

Asst, Lecturer / Tutor in

Accounting, Marketing, Human Resource Management, Financial Management

**Note:**

**Candidates awaiting the results of the final degree examination of Commerce and Business Administration at the University of Jaffna may also apply.**

| POST | SALARY SCALE |
|---|---|
| Asst. Lecturer | Rs.25,145/- (fixed) per month |
| Tutor | Rs.20,755/- ( fixed) per month |

In addition to the above salary, the allowances approved by University Grants Commission will also be paid.

Application forms and other details may be obtained from the office of the Senior Assistant Registrar / Establishments, University of Jaffna, Sri Lanka, either in person or by post, on a payment of Rs.100/- per application form. Those who wish to obtain application forms by post are requested to send a Money order/ Postal order drawn in favour of the "Bursar, University of Jaffna together with a self-addressed stamped envelop 23x30 cm. in size.

Applicants from the University System/ Government Departments/ Corporations and Statutory Boards should channel their applications through the Head of the respective Institutions. Applications received after the closing date will be rejected without intimation. Only short listed applicants will be called for an interview

**REGISTRAR,**
**University of Jaffna,**
**Jaffna. 16.11.2010**

(5773001)



## பதினோராம், ஆறாம் ஆண்டு நினைவலைகள்



| செல்வன் பாலகிருஷ்ணன் பிரதீபன் | செல்வன் சிவநாதன் ரவிசங்கர் | செல்வன் சுந்தரலிங்கம் சிவோத்தமன் | செல்வன் பூரணமூர்த்தி கந்தர்வன் | செல்வன் மரியரட்ணம் குணரட்னம் |
|---|---|---|---|---|
| தோற்றம் : 17.04.1981 | தோற்றம் : 02.02.1981 | தோற்றம் : 23.05.1981 | தோற்றம் : 11.05.1981 | தோற்றம் : 04.08.1981 |

**17.11.1999 : மறைவு** **17.05.2004**

நினைவழியா நீண்ட நாள்கள் அவை....!!! நீண்ட பெரும் உயிர்வலி அது...!!!
ஆண்டுகள் ஆகினும் எந்நிலை வரினும் எங்கு நாம் வாழ்கினும்
ஏழேழு ஜென்மமாய் மனதினில் வாழும் எங்களின் நட்பு...!!!
நாங்கள் புதைத்ததும் எரித்ததும் எங்களின் நண்பர்களின் உடலை மட்டும்தான்
அவர்களின் உணர்வுகள் கனவுகள் நினைவுகள் உயிர் வாழும்
எங்களின் நட்பைப்போல...!!! நட்பு சாகாது நாங்கள் இருக்கும் வரை......!!!!

**நாளை 18.11.2010 வியாழக்கிழமை காலை 8.30 மணியளவில்** ஹாட்லிக் கல்லூரியில் நடைபெறும் நினைவு தின நிகழ்வில் பெற்றோர், ஆசிரியர், உற்றார், உறவினர், நண்பர்கள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். **"ஹாட்லியின் மைந்தர்கள் நினைவு நிதியம்"** ஏற்பாட்டாளர்கள்.

**மேலதிக விபரங்களுக்கு : யோ.ஜெயகர் - 0094 775 325 165 / சு. கோகுலகுமார் - 0094 773 122 198**

E-mail : hartleyboys@gmail.com


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# காணாமல்போனோர் மற்றும் முகாம்களில் உள்ளோரை மீட்டுத் தருமாறு விஜயகலா எம்.பியிடம் கோரிக்கை

## வட்டக்கச்சி, கண்டாவளை, முரசுமோட்டை மக்கள் விடுத்தனர்

கிளிநொச்சி,நவ.17

காணாமல் போன தமது உறவுகளையும், புனர்வாழ்வு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமது பிள்ளைகளையும் மீட்டுத் தருமாறும் தமது அடிப்படை வசதிகளைப் பெற்றுத்தர நடவடிக்கை எடுக்குமாறும் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள வட்டக்கச்சி, கண்டாவளை, முரசுமோட்டைப் பகுதிகளில் மீளக்குடியேறியுள்ள மக்கள் ஐ.தே.கட்சியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான திருமதி விஜயகலா மகேஸ்வரனிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை வட்டக்கச்சி, கண்டாவளை, முரசுமோட்டை கிராம சேவை யாளர் பிரிவுகளுக்குச் சென்ற விஜயகலா எம்.பி.அப்பகுதி கிராம சேவையாளர்கள் தலை மையில் பொது மக்களைச் சந்தித்து அவர்களின் பிரச்சினைகளைக் கேட்டறிந்தார்.

வட்டக்கச்சி கிராம சேவகர் அலுவலகத்தில் பெருந்திரளான மக்கள் எம்.பியைச் சந்தித்து அவரிடம் மகஜர்களைக் கையளித்தனர். இங்கு கூடியிருந்த மக்களில் பலர் தமது உறவுகள் கொல்லப்பட்டமை தொடர்பாகவும் காணாமற் போனமை பற்றியும் தமது கவலைகளை வெளியிட்டனர். முக்கியமாக காணாமற்போன மற்றும் தடுப்பு முகாம்களில் உள்ள தமது உறவுகளை மீட்டுத்தர உதவுமாறு எம்.பியிடம் கோரிக்கை விடுத்தனர்.

இதேபோன்று கண்டாவளை, முரசுமோட்டைப் பகுதி மக்களும் தமக்கு அடிப்படை வசதிகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்றும் காணாமல் போன மற்றும் தடுப்பு முகாமில் உள்ள தமது உறவுகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் விஜயகலா எம்.பியிடம் கேட்டுக் கொண்டனர்.

இவ்விடயங்கள் குறித்து உரிய நடவடிக்கை எடுப்பதாக விஜயகலா எம்.பி.உறுதியளித்தார். (க)

# இளைஞன் காதைக் கடித்தார் கிராம சேவகர்; அவரைக் கடித்தது இளைஞனின் செல்ல நாய்

கொழும்பு,நவ.17

வாய்த் தர்க்கம் முற்றிய நிலையில் இளைஞன் ஒருவனின் காதைக் கடித்து காயமாக்கிய கிராம சேவையாளர் ஒருவரை குறித்த இளைஞனின் செல்ல நாய் கடித்துக் குதறியது.

இதில் காயமடைந்த இருவரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். சம்பவம் மொரட்டுவ, எகட உயன பிரதேசத்தில் நடந்துள்ளது.

பஸ்வண்டியொன்று பாதையை மறித்து நிறுத்தப்பட்டமை தொடர்பாகவே இந்தச் சர்ச்சை எழுந்தது.

கடந்த 2 ஆம் திகதி குறித்த இளைஞனின் தந்தை புதிதாக வாங்கியிருந்த பஸ்ஸை அவரது வீட்டுக்கு முன்னால் பாதையை மறித்து நிறுத்தியிருந்தார்.

ஐந்து வீடுகளுக்குப் பொதுவான இப்பாதையில் பஸ் வண்டி மறித்து நிறுத்தப்பட்டிருந்ததால் பாதிக்கப்பட்ட ஏனைய குடியிருப்பாளர்கள் கிராம சேவகரிடம் முறையிட்டதையடுத்து அவ்விடத்துக்கு வந்தார் கிராம சேவகர்.

அவருக்கும் அந்த இளைஞனுக்கும் இடையே ஏற்பட்ட சர்ச்சை முற்றியதால் கிராம சேவகர் வாலிபனின் காதைக் கடித்துக் காயப்படுத்தினார்.

இச்சம்பவத்தை அருகில் இருந்து பார்த்த நாய் கிராம சேவகர் மீது பாய்ந்து கடித்துக் குதறியது. (ம-5)

# பராமரிக்க முடியாத குழந்தைகளை கொண்டு வந்து என்னிடம் ஒப்படையுங்கள்

## மாத்தறையில் பிரதமர் கோரிக்கை

கொழும்பு,நவ. 16

பராமரிக்க முடியாத நிலையில் உள்ள எல்லாக் குழந்தைகளையும் தம்மிடம் ஒப் படைக்குமாறும் இன, மத, மொழி பேதங்களின்றி அவர்களைப் பொறுப்பேற்பதற்கு தாம் தயாராக உள்ளார் என்றும் பிரதமர் தி.மு. ஜயரட்ண தெரிவித்துள்ளார்.

புத்தரின் 2600 ஆவது பிறந்ததின விழா மற்றும் ஜனாதிபதியின் இரண்டாவது பதவியேற்பு தொடர்பாக மாத்தறையில் நடந்த வைபவம் ஒன்றிலேயே பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

குழந்தைகள் ஆறுகளிலும், காடுகளிலும் வீசப்படும் சம்பவங்கள் பற்றி பத்திரிகை வாயிலாக அடிக்கடி தெரிந்துகொள்கிறேன்.

குழந்தைகள் இந்நாட்டின் பெறுமதி மிக்க சொத்துக்கள்; நாட்டின் எதிர்கால நாயகர்கள். அவர்களை மொட்டிலேயே அழிப்பது மிலேச்சத்தனமான காரியம்.

எனவே, அத்தகைய குழந்தைகளைப் பொறுப்பேற்றுப் பராமரிப்பதற்கு அரசு தயாராகவுள்ளது. இன,மத, மொழி, நிறபேதங்களின்றி அவர்களை சொந்தக் குழந்தைகளைப் போல ஏற்றுக் கொள்ள நான் தயாராகவுள்ளேன் - இவ்வாறு கூறினார் பிரதமர். (ம-5)

## புதிய உதயம்...




உதவி: லயன்ஸ் கழகத்தின் பிரிவு ஒன்று சங்கானையில் அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் மாவட்ட முதலாவது உப ஆளுநர் லயன் பிரியந்த பெர்னாண்டோ எம்.ஜே.எவ் உரை நிகழ்த்துவதையும் அருகில் இரண்டாவது உப ஆளுநர் லயன் தங்கராசா எம்.ஜே.எவ். நிற்பதையும் - சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தின் வறுமைக் கோட்டுக்குட்பட்ட மாணவி ஒருவருக்கு மாவட்ட ஆளுநர் லயன் ஜெயவத்சலன் எம்.ஜே.எவ். காலணி வழங்குவதையும் படங்களில் காணலாம்.

# சனி மற்றும் ஞாயிறு தினங்களிலும் நீதிமன்றங்களைத் திறக்க முஸ்தீபு

கொழும்பு,நவ. 17

தேங்கிக்கிடக்கும் வழக்குகள் மீதான விசாரணைகளைத் துரிதப்படுத்தி தீர்வுகளைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கில் சனி மற்றும் ஞாயிறு தினங்களிலும் நீதிமன்றங்களைத் திறப்பதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

நீதிமன்றங்களில் சுமார் 8 லட்சம் வழக்குகள் தேங்கிக் கிடக்கின்றன என நீதி அமைச்சர் அதாவுட செனிவிரத்ன குறிப்பிட்டார்.

வழக்குகளை விசாரிப்பதில் தாமதம் நிலவுவதால் மனுதாரர்களும், பிரதிவாதிகளும் பாரிய சிரமங்களுக்கு உள்ளாகின்றனர்.

ஒத்திவைக்கப்படும் வழக்குகள் தொடர்பில் ஆராய்வதற்கும் நீதிமன்றங்களில் விசேட நடைமுறைகளைப் பின்பற்றுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நிலுவையிலுள்ளவழக்குகளுக்குத் துரித தீர்வுகாணும் பொருட்டு சுமார் இரண்டு வருடங்களுக்கு நீதிமன்றங்களில் மேலதிக நடவடிக்கைகளை முன்னெடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது - என நீதி அமைச்சர் மேலும் சுட்டிக் காட்டினார். (ம-5)

# கொள்ளுப்பிட்டி இரவுக்களியாட்ட விடுதியில் ஆளும் - எதிர்க்கட்சி உறுப்பினர்கள் மோதல்

## ஒருவர் படுகாயம்

கொழும்பு, நவ.17

தென்மாகாணசபை ஆளும் கட்சி உறுப்பினர் ஒருவரும், அவரது சகாக்களும் கொள்ளுப்பிட்டி இரவுக்களியாட்ட விடுதி ஒன்றில் எதிரணி உறுப்பினர்களுடன் மோதிக் கொண்ட சம்பவம் கடந்த சனிக்கிழமை இரவு நடைபெற்றுள்ளது.

இதில் இரத்தினபுரி மாவட்டத்தில் பொதுத் தேர்தலில் ஐ.தே.க. சார்பில் போட்டியிட்ட அநுராத விமலரத்ன படுகாய முற்றநிலையில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இவரதுகாயத்துக்கு ஒன்பது தையல்கள் போடப்பட்டுள்ளன என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

தாக்குதலில் ஈடுபட்ட மாகாண சபை உறுப்பினர் அரசியல் வாதியொருவரின் புதல்வர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இவர் தனது சகாக்களுடன் குறிப்பிட்ட விடுதிக்கு வருகை தந்தபோது அநுராத விமலரத்னவும் அங்கிருந்தார். இருசாராருக்கும் ஏற்பட்ட வாய்த்தர்க்கமே கைகலப்பாக மாறியுள்ளது.

வாகனத்தில் ஏறிச்சென்ற விமலரத்னவை ஆளும்கட்சி உறுப்பினர்கள் கண் மூடித்தனமாகத் தாக்கியுள்ளனர். விமலரத்னவின் சகாக்கள் நடத்திய பதில் தாக்குதலில் மாகாணசபை உறுப்பினரின் சகாக்கள் சிலர் சிறு காயங்களுக்குள்ளாகினர்.

அரசியல் விவகாரம் பற்றி ஏற்பட்ட விவாதமே தாக்குதலில் முடிவடைந்தது - என பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் கொள்ளுப்பிட்டி பொலிஸார் விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர். (ம-5)

# 26 வயதிற்கு மேற்பட்ட ஐயாயிரம் பேர் அநாதை ஓய்வூதியத்திற்கு விண்ணப்பம்

கொழும்பு, நவ.17

பெற்றோரை இழந்து அநாதரவான 26 வயதுக்கு மேற்பட்ட ஐயாயிரம் பேர் அநாதைகளுக்கான ஓய்வூதியம் கோரி விண்ணப்பம் செய்துள்ளனர் என ஓய்வூதியத் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் கே.ஏ. திலகரத்ன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

விதவைகள், அநாதைகள் மற்றும் பெற்றோரை இழந்த 26 வயதுக்குக் கீழ் பட்டவர்களுக்கு மட்டுமே அநாதைகளுக்கான ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது. எனினும் தொழில் இன்மை, நோய்வாய்ப் படல் போன்ற காரணங்களால் வாழ வசதியில்லையெனக் கூறி 26 வயதுக்கு மேற்பட்ட ஐயாயிரம் பேர் விண்ணப்பங்களை அனுப்பியுள்ளனர்.

இந்த விண்ணப்பதாரிகளில் சிலர் 60 வயதைத் தாண்டியவர்கள். மாதாந்தம் இத்தகைய நூறு விண்ணப்பங்கள் திணைக்களத்துக்கு கிடைக்கின்றன.

திணைக்களத்தால் நியமிக்கப்பட்ட மருத்துவர்கள் குழுவின் பரிந்துரைக்கமைய அங்கவீனர்களான பிள்ளைகளுக்கு ஆயுள் முழுவதும் அநாதைகள் ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகின்றது. தற்சமயம் இருபதாயிரம் அங்கவீனர்கள், அநாதைகள் ஓய்வூதியத்தைப் பெற்று வருகின்றனர்.

புதிய விண்ணப்பதாரிகளின் கோரிக்கைகள் பரிசீலிக்கப்பட்டு ஆவன செய்யப்படும் - இவ்வாறு பணிப்பாளர் நாயகம் தெரிவித்தார்.

# விட்ரோ சமையல் எரிவாயு நேற்றுமுதல் சந்தையில்

கொழும்பு,நவ. 17

ஷெல் காஸ் லிட்ரோ எனும் பெயரில் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய சமையல் எரிவாயு நேற்றுமுதல் சந்தையில் விற்பனைக்கு விடப்பட்டுள்ளது.

ஷெல் காஸ் (லங்கா) நிறுவனம் அரசாங்கத்தால் சுவீகரிக்கப்பட்ட பின்னர் புதிய நிர்வாகம் நேற்றுமுன்தினம் நள்ளிரவு முதல் லிட்ரோ நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டதாக அந்நிறுவனத்தின் தலைவரும் ஜனாதிபதியின் மேலதிக செயலாளருமான காமினி செனரத் தெரிவித்தார்.

இதன் முதற்கட்டமாக 2 ஆயிரம் சிலிண்டர்கள் லிட்ரோ எனும் பெயரில் சந்தைக்கு விடப்பட்டுள்ளதாக அந்நிறுவனத்தின் காஸ் நிரப்பும் பிரிவின் அதிகாரி பொறுப்பாளர் தெரிவித்தார். (ம-5)

# வரணியில் மீண்டும் கோழிப் பண்ணை

கொடிகாமம், நவ. 17

தென்னிந்தியத் திருச்சபையினர் வரணியில் மீண்டும் தமது கோழிப்பண்ணையை ஆரம்பித்துள்ளனர். சுமார் 35 வருடங்களுக்கு முன்பு பாரிய அளவில் இப்பண்ணை திருச்சபையின் காணியில் இயங்கி வந்தது. பின்பு யுத்த சூழ்நிலை காரணமாகப் பாதிக்கப்பட்டு செயற்படாமல் இருந்தது.

தற்போது திருச்சபையின் குருமனை வளவுக்கு அருகில் இருக்கும் பண்ணைக் கட்டடத்தில் மீண்டும் கோழிப்பண்ணைச் செயற்பாடுகள் இந்த வாரம் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (201-122)

# வெள்ள நிவாரணம் பாவனைக்கு உதவாது

கொழும்பு,நவ. 16

கொழும்பில் அண்மையில் பெய்த அடை மழைக்குள் அகப்பட்டு பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணமாக வழங்கப்பட்ட உணவுப் பொருள்கள் பாவனைக்கு உதவாத நிலையில் இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மருதானை 122 ஆவது தோட்டத்தில் வசிக்கும் மக்கள் தமக்கு நிவாரணமாக வழங்கப்பட்ட உணவுப்பொருள்கள் பாவனைக்கு தவாதவை எனத் தெரிவிக்கின்றனர்.

இடர்முகாமைத்துவ சேவைகள் திணைக் களத்தாலேயே இந்தக் காலாவதியான உணவுப்பொருள்கள் வழங்கப்பட்டன என்றும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

திணைக்களத்திற்குப் பொறுப்பான அமைச்சர் ஏ. எச். எம். பௌஸி இது குறித்து தெரிவிக்கையில்,

குறித்த உணவுப் பொருள்களை வாபஸ் பெறுமாறு உத்தரவிட்டுள்ளதுடன் தரமான பொருள்களை வழங்குமாறு அறிவுறுத்தியுள்ளார் என்றும் தெரிவித்தார். (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைப் போக்குவரத்துச் சபை, காரைநகர் சாலை

## முகாமையாளர் உயர்திரு. K.C. கந்தசாமி அவர்களின்

# மணிவிழா மலர் - 17.11.2010

### குருக்களின் ஆசிச்செய்தி



இலங்கைப் போக்குவரத்துச் சபையின் காரைநகர் சாலை முகாமையாளராகக் கடமையாற்றி ஓய்வு பெற்றுச் செல்லும் திரு. K.C. கந்தசாமி அவர்களின் மணி விழா மலருக்கு ஆசிச்செய்து வழங்குவதில் பேருவகை அடைகின்றேன்.

காரைநகர் மண்ணிலே பிறந்து காரைமண்ணுக்கு சேவையாற்றிய சேவையாளருள் திரு.கந்தசாமியும் ஒருவர். பிறந்த மண்ணின் உயர்விற்காகப் பல வழிகளிலும் அயராது உழைத்த இவர் கடந்த 39 ஆண்டுகளாக போக்குவரத்துச் சபையில் அர்ப்பணிப்பான சேவையாற்றி முகாமையாளராகப் பதவி உயர்வு பெற்றார். இவருடைய காலத்தில் காரைநகர் சாலையில் பல்வேறு மாற்றங்களும் அபிவிருத்தியும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

சிறப்பான சேவையாற்றி இன்றுடன் ஓய்வுபெறும் K.C. கந்தசாமி அவர்கள் சிறந்த தேகாரோக்கியத்துடனும் நீண்ட ஆயுளுடனும் வாழ்ந்து சமய சமூகப் பணி களை முன்னெடுக்க எல்லாம் வல்ல பாலாவோடை முத் துமாரி அம்பாள் அருள்பாலிக்க வேண்டும் என ஆசி கூறி அமைகின்றேன்.

சுபம்.

**பிரம்மஸ்ரீ கு.சண்முகராஜக் குருக்கள்,**
பிரதமகுரு பாலாவோடை, குறிஞ்சாக்குளி,
முத்துமாரி அம்மன் ஆலயம்.

### பிரியாவிடைச் செய்தி



காரைநகர்ச் சாலையில் தற்போது சாலை முகாமையாளராகக் கடமையாற்றும் திரு. செல்லையா கந்தசாமி இலங்கைப் போக்குவரத்துச் சபையில் ஏறத்தாழ 40 ஆண்டுகள் தொடர்ச்சியாகப் பணியாற்றி இன்று 17.11.2010 இளைப்பாறிச் செல்கிறார்.

திரு.கந்தசாமியை ஏறத்தாழ 40 ஆண்டுகளாக நான் அறிவேன். நான் காரைநகர்ச் சாலை முகாமையாளராகக் கடமையாற்றிய வேளை இவரும் என்னுடன் பணியாற்றினார். திறமை, கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, விவேகம், முன் முயற்சி, விடாமுயற்சி ஆகிய குணாதிசயங்களை அணிகலனாகக் கொண்டு தனது கடமைகளை செவ்வனே நிறைவேற்றிய இவர் உழைப்பால் உயர்ந்தவர்.

பல்வேறு பொறுப்புமிக்க பதவிகளைச் சபையில் வகித்த இவர் கடந்த ஓராண்டு காலமாக தனது பிறப்பிடமான காரைநகரில் சாலை முகாமையாளராக சிறப்பாக ஆக்கபூர்வ பணியாற்றி வந்துள்ளார். இயல்பாகவே காரைநகர் மக்கள் மண்பால் அளப்பரிய பற்றுள்ளவர்கள். இந்த வகையில் திரு.கந்தசாமி எவருக்கும் சளைத்தவரல்லர்.

தான் பிறந்த மண்ணிற்கு சேவையாற்ற வேண்டும் என்ற பேரவாவால் உந்தப்பெற்று இரவு பகல் பாராது அயராது உழைத்து இன்று காரைநகர்ச் சாலையை சிறந்தவொரு சாலையாக முன்னேற்றியுள்ள திரு.கந்தசாமி அவர்கள் இளைப்பாறுதல் இலகுவில் நிரப்பமுடியாத ஒரு வெற்றிடத்தை ஏற்படுத்தியுள்ளது என்றால் அது மிகையாகாது.

இலங்கைப் போக்குவரத்துச் சபை தலைமை அலுவலக அலுவலர்கள் உட்பட சகல ஊழியர்களினதும் நன்மதிப்பையும் பாராட்டுக்களையும் பெற்றுள்ள திரு.கந்தசாமி யாராலும் மிகவும் விரும்பப்படுபவர். காரைநகரின் கவர்ச்சிமையமாக விளங்கும் "கசூரினா" கடற்கரையின் அழகை அள்ளிப் பருக வெளியிடங்களில் இருந்துவரும் இ.போ.ச.ஊழியர்களுக்கு இவர் நல்கும் ஒத்துழைப்பும் உதவியும் வரலாறு.

திரு.கந்தசாமியின் இளைப்பாறிய காலம் வசந்தம் பொழியும் காலமாகப் பரிணமிக்க வேண்டுமென்றும் இளைப்பாறினும் தொடர்ந்து இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குத் தனது பங்களிப்பை நல்கவேண்டுமென்றும், நோய்நொடியின்றி நீடூழிகாலம் தமது குடும்பத்தினருடன் இன்புற்றிருக்க வேண்டுமென்றும் எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகிறேன்.

**செ.பிரான்சிஸ் சேவியர்**
சிரேஷ்ட நிர்வாகச் செயலாளர்,
இலங்கை போக்குவரத்துச் சபை.



### ஊழியர்கள் சார்பில் சிவகுருநாதன்



இலங்கைப் போக்குவரத்துச் சபையின் காரைநகர்ச்சாலை முகாமையாளராகக் கடமையாற்றிய உயர்திரு .கே.சி. கந்தசாமி அவர்கள் இன்றுடன் இளைப்பாறிச் செல்கின்றார்.

1971ஆம் ஆண்டு இ.போ.ச.புத்தளம் சாலையில் இணைந்துகொண்ட இவர் நடத்துநர், சிரேஷ்ட சாலைப் பரிசோதகராக 39 வருடங்கள் சேவையாற்றிக் காரைநகர்ச்சாலை முகாமையாளராகப் பதவியுயர்வு பெற்றார்.

காரைநகர் வேதரடைப்பைச் சேர்ந்த இவர் காரைநகர் இந்துக் கல்லூரியின் பழைய மாணவராவார். காரைநகர் சோலையான் விளையாட்டுக் கழகம், வேதரடைப்புக் கிராம அபிவிருத்திச் சங்கம், வேதரடைப்பு சனசமூக நிலையம் என்பவற்றை ஸ்தாபித்ததுடன் அவற்றின் தலைவராகவும் செயற்பட்டு வந்தவர். சிறந்த நாடகக் கலைஞரான இவர் காரைநகர் லலிதா கலாமன்றத்தின் செயலாளராகக் கடமையாற்றியதுடன், வரலாற்று நாடகங்கள், சமூக நாடகங்கள் என்பனவற்றில் பிரதான பாத்திரம் ஏற்று நடித்து அதன் ஊடாக மக்களுக்கு சமூக சீர்திருத்தக் கருத்துக்களை முன்வைத்து வந்துள்ளார்.

1950 இல் பிறந்த இவர் நாடகத்துறை மூலம் மூத்ததம்பி தேவதாசன், அரியாலையூர் செல்வம், சுழிபுரம்எஸ்.சிவலிங்கம் ஆகியோரின் வழிகாட்டலில் கலைத்துறைக்குச் சேவையாற்றியதுடன் வரலாறு, சமூக, நகைச்சுவை நாடகங்கள் மற்றும் பட்டிமன்றம் மூலம் மக்கள் மனதில் இடம்பிடித்துள்ளார். இவரது கலைகள் ஆற்றுப்படுத்திய இடங்களாக யாழ்.திறந்தவெளி, அரங்கு, பண்ணாகம், திருநெல்வேலி ஆகியன அமைந்துள்ளன. இவரது சேவையைப் பாராட்டி செயல்திறன் நாயகன் என்னும் பட்டமும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

இவர் சாலை முகாமையாளராகப் பதவியேற்றதும் காரைநகரில் உள்ளூர் பஸ்சேவையை ஆரம்பித்ததுடன், யாழ்.நகரில் இருந்து தினமும் ஈழத்துச் சிதம்பரத்திற்கான நேரடி பஸ் சேவையையும் தொடக்கி வைத்தார். காரைநகர் துறைமுகத்தில் இருந்து பாலாவோடை, ஊரி பகுதிகள் ஊடாக வியாவில் வரையான உள்ளூர் பஸ்சேவையுடன் பாடசாலை பஸ் சேவையும் சிறப்பாக இடம்பெறுகின்றது.

காரைநகரில் இருந்து யாழ்.நகருக்குச் செல்கின்ற வர்த்தக நிலையங்களில் கடமையாற்றும் ஊழியர்கள், யாழ்.போதனா வைத்தியசாலைக்குச் செல்வோர் மற்றும் பொதுமக்களின் விரைவான பயணத்திற்காக கல்லுண்டாய் ஊடான 784 இலக்க பஸ் சேவையை அதிகரித்ததுடன் காரைநகரில் இருந்து கடைசி பஸ் சேவையின் நீடிப்பும் இவரது காலத்திலேயே ஏற்பட்டது.

இவ்வாறு காரைநகர் மக்களுக்கு ஏற்ற போக்குவரத்து ஒழுங்குகளை சிறப்பாக மேற்கொண்டு சிறப்பாகச் சேவையாற்றி வந்த திரு.கே.சி.கந்தசாமி அவர்கள் இன்றுடன் ஓய்வு பெற்றாலும் அவருடைய வெற்றிடத்தை இலகுவில் நிரப்பிவிட முடியாது. எனவே, அவருடைய சேவைகளும், ஆலோசனைகளும் எமக்குத் தொடர்ந்து கிடைக்கவும் அவர் ஓய்வு காலத்தில் பொதுப் பணிகள் பல புரிந்து நீண்ட ஆயுளுடன் நோய், நொடியின்றி வாழ ஈழத்துச் சிதம்பரகூடத் தம்பிரானை வேண்டுகின்றோம்.

ஊழியர்கள் சார்பில்: **திரு.வே.சிவகுருநாதன்,**
காரைநகர் சாலை,

### நாடாளுமன்ற உறுப்பினர் வாழ்த்து



வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் காரைநகர் சபை முகாமையாளராக கடமையாற்றிய சி. கந்தசாமி அவர்கள் ஓய்வுபெற்றதையிட்டு இன்று 17.11.2010 நடைபெறுகின்ற சேவைநலன் பாராட்டு விழாவிற்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

இன்றைய விழா நாயகன் போக்குவரத்துச் சேவையில் நடத்துனராக கடமையாற்றும் போதே பொதுமக்களுடன் அன்பாகவும் பண்பாகவும் பழகும் பண்பாளன் தனது கடமையுணர்வுடன் துடிப்புமிக்க விளையாட்டு வீரனாகவும் திகழ்ந்து சோலையான் விளையாட்டுக் கழகத்தின் தலைவராகவும் பல்லாண்டு காலம் சேவையாற்றுவது பாராட்டுக்குரியது.

தனது சேவையின் பயனாக சாலை முகாமையாளராகப் பதவி உயர்வுபெற்ற இவர் பின்தங்கிய பிரதேச பயணிகளிற்கு உதவேண்டும் என நாம் கேட்டபோது உடனடியாக உயர் அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு காரைநகர் பாலாவோடை வீதியூடாக உள்ளூர் போக்குவரத்துச் சேவையை நடத்தியதுடன் ஈழத்துச் சிதம்பர ஆலயத்திற்கும் போக்குவரத்து சேவையை நடத்தினார்.

மக்களின் தேவையறிந்து தன்னால் ஆன சேவையாற்றிய சேவையாளனைப் பாராட்டி வாழ்த்துவதோடு இவரின் சேவை காரை ஊர்மக்களிற்குத் தொடரவேண்டும் என வாழ்த்துகின்றேன்.

**திருமதி விஜயகலா மகேஸ்வரன்**
நாடாளுமன்ற உறுப்பினர், யாழ்.மாவட்டம்.

### உதவி அரச அதிபரின் வாழ்த்துச் செய்தி



இலங்கைப் போக்குரத்துச் சபையின் காரைநகர் சாலையில் முகாமையாளராக அண்மையில் பதவியுயர்வு பெற்று பணியாற்றி தற்போது ஓய்வு பெற்றுச் செல்லும் அன்புக்குரிய கே.சி.கந்தசாமி அவர்களின் சேவை நயப்பு விழாவுக்கான வாழ்த்துரையை வழங்குவதில் பெரு மகிழ்வடைகிறேன். காப்பாளராகப் பதவியில் இணைந்து 39 வருட சேவை அனுபவத்தில் பதவிவழி முகாமையாளராகப் பதவி உயர்வுபெற்று கே.சி. கந்தசாமி அவர் கள் பணிபுரிந்த காலத்தில் மிகச்சிறப்பான பணியை ஆற்றியமையை நேரில் கண்டிருக்கிறேன். கடந்தபல வருடங்களாக காரைநகர் சாலையின் உன்னத சேவையில் இவரின் பங்களிப்பும் கணிசமாக இருந்தது என்றால் அது மிகையில்லை. தன் கடமைக்கு மேலதிகமாக காரை மண்ணில் பல்வேறு பொது வேலைகளிலும் விளையாட்டுத்துறையிலும் தன்னை ஈடுபடுத்தி ஒரு சிறந்த வழிகாட்டியாகவும் திகழ்ந்திருக்கிறார். இன்று ஓய்வுபெறும் கே.சி.கந்தசாமி அவர்களின் எதிர்காலம் சிறப்புற வாழ்த்துவதுடன் வருங்காலத்தில் காரை மண்ணில் பல்வேறு சமூகப் பொதுப்பணிகளை முழு மூச்சுடன் முன்னெடுக்க முன்வரவேண்டும் என்று அவரை கேட்டுப் பணிகிறேன்.

**இ.த.ஜெயசீலன்,**
உதவி அரசாங்க அதிபர், காரைநகர்.

### அதிபரின் வாழ்த்துச் செய்தி




தனது சேவையை புத்தளத் தில் ஆரம்பித்து 39 வருட கால சேவையை திருப்திகரமாகவும், மகிழ்ச்சியாகவும், பொதுமக்களுடன் மிகவும் அந்நியோன்னியமாகவும் பழகிய அதேநேரம் தனது சேவைக்காலத்தில் பொது மக்களுடன் நகைச்சுவை பொங்க கதைக்கும் ஆற்றல் மிக்க கே.சி. கந்தசாமி அகவை அறுபதில் ஓய்வு பெறுவது யாராலும் தடுக்க முடியாது. சேவைக்காலத்தில் தனது சேவையை அப்பழுக்கற்ற முறையில் மேற்கொண்டு தொழிலின் உச்சநிலையை எய்தியவர். மூன்று மொழிகளையும் நாக்கின் நுனியில் வைத்திருக்கும் ஆற்றல் மிக்க இவரின் சேவை காரைநகர் மக்களுக்கு கிடைத்த ஓர் கொடை என்றே கூறலாம். ஊழியர்களுடன் ஊழியனாகவும், பொதுமக்களுடன் பொதுமகனாகவும் விளையாட்டிடத்தில் சிறுவனாகவும் பல்வேறு நடிபங்குகளை திறம்படக் கையாண்ட முகாமையாளர். முகாமைத்துவத்துக்குப் புதிய வரைவிலக்கணம் தந்த கே.சி.கந்தசாமி அவர்கள் பொதுப் போக்குவரத்துக்குச் செய்த சேவை நிச்சயம் பாராட்டப்படவேண்டியது. மீளக்குடியமர்ந்த காலப் பகுதியில் மிக வெற்றிகரமாக காரைநகர் சாலையை இயங்கிய இவரின் ஆற்றலை எல்லோரும் இன்று பாராட்டுவார்கள்.பல சவால்களைச் சந்தித்து இலகுவாக வெற்றி கண்ட கே.சி.கந்தசாமி ஓய்வுக் காலத்தில் காரைநகர் மக்களுக்கு தன்னாலான சேவையை மேற்கொள்ள எல்லாம் வல்ல ஈழத்துச் சிதம்பர சுந்தரேஸ்வரப் பெருமானின் அருளாசி கிடைக்கப் பிரார்த்திப்பதோடு, அவர் ஆற்றிய சேவையை பாராட்டுவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

"இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன் கண் விடல்"

**பொ.சிவானந்தராசா,**
அதிபர், கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி,காரைநகர்.

### பிராந்திய முகாமையாளரின் வாழ்த்துச் செய்தி



நன்னுயர் யாழ்ப்பாணத்து தீவகம்
தன்னில்
என்னுயர் வளம் நிறைந்த காரை நகர்
தன்னில்
செல்லையா பெற்ற தவக்கொழுந்து
கந்தசாமி எனும் நாமத்தான்
சீரோடும் சிறப்போடும் வாழ்வதற்கு
சிறப்புற்ற உபய வைரவப் பெருமான்
துணையிருப்பான்.

காப்பாளர் கடமை தன்னில்
கண்ணியமாய்க் கால் பதித்தீர்
கடமை செய்யும் வேளை தன்னில்
கனிவான பேச்சாலும்
கருத்தான நன்னடத்தையாலும்
பாரில் உள்ளோர் போற்றிடவே
பாங்காய்ப்பணி செய்தீர்!
கடமை தன்னில் கருத்தாய்ச்
சேவைசெய்தீர்!
சேவை தன்னின் மேன்மையதால்
சிரேஷ்ட சாலைப்பரிசோதகராய்,
சாலை முகாமையாளராய்
பதவி உயர்வு பெற்றீர்!
சேவை தன்னில் ஓய்வெடுக்கும்
சீரிய வேளை சீக்கிரமே வந்துவிட
ஓராண்டு காலமென்ன நூற்றாண்டு
காலம்
குடும்பத்தினருடன் என்றென்றும்
வாழியவே!!

**திரு.கே.கணேசபிள்ளை,**
பிரதான பிராந்திய முகாமையாளர்,
இலங்கை போக்குவரத்துச் சபை (வடக்கு).

மலரமைப்பு: டர்விகன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு, கிழக்கில் இராணுவ நிர்வாகமே தொடர்கிறது இந்நிலை மாறினாலே மக்களுக்கு நிம்மதியான வாழ்வு

## தாக்குதலுக்கு இலக்காகும் முன் ஹத்துன்நெத்தி உதயனுக்குச் செவ்வி

யாழ்ப்பாணம், நவ.17

யுத்தம் முடிவடைந்து 18 மாதங்கள் கழிந்த நிலையிலும் வடக்கு - கிழக்கில் சிவில் நிர்வாகம் நடைமுறைப்படுத்தப்படவில்லை. மாறாக இராணுவத்தினரின் நிர்வாகமே வடக்கு - கிழக்கில் தொடர்கின்றது.

இந்த நிலை மாற்றமடையும் போதே வடக்கு - கிழக்கு மக்கள் நிம்மதியாக வாழக்கூடிய சூழல் உருவாகும்.

ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினரும் மத்திய குழு உறுப்பினருமான சுனில் ஹத்துன்நெத்தி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை 'உதயன்' அலுவலகத்துக்கு வருகை தந்த அவர் சமகால அரசியல் நிலை குறித்து அளித்த செவ்வியிலேயே இப்படிக்கூறினார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை அவர் தாக்குதலுக்கு இலக்காவதற்கு சற்று முன்னர் அளித்த பேட்டியில் தெரிவித்த முக்கிய விடயங்கள் வருமாறு:-

இந்த நாட்டில் வாழும் சிங்கள, தமிழ், முஸ்லிம் இனத்தவர்கள் எந்தவித இனப் பாகுபாடுமின்றி சமத்துவமாக, சரிசமமாக சகல உரிமைகளுடனும் நிர்வகிக்கப்படவேண்டும் என்பதே மக்கள் விடுதலை முன்னணியின் கொள்கை நிலைப்பாடாகும்.

அன்று முதல் இன்றுவரை நாம் மேற்குறித்த கொள்கை நிலைப்பாட்டையே உறுதியுடன் பின்பற்றி வருகிறோம்.

நாம் எந்தவொரு கால கட்டத்திலும் இனவாதப் போக்கில் செயற்பட்டதில்லை. இந்த நாட்டின் அனைத்து இன மக்களும், அடிப்படை உரிமைகளை, மனித உரிமைகளைப் பெறத் தகுதியானவர்களே. அந்த வகையில் இந்த 'நாட்டில் வாழும் அனைத்து மக்களும் இன மத பேத அடிப்படையில் அல்லாது சமத்துவமும் சகோதரத்துவமும் மிக்க இலங்கையர்கள் என்ற அடிப்படையில் நிர்வகிக்கப்பட வேண்டும் என்பதே மக்கள் விடுதலை முன்னணியின் கொள்கை நிலைப்பாடாகும். ஆனால், இன்று அதிகாரத்திலுள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசியல் நிர்வாகத்தில் ஜனநாயகவாதம் புறந்தள்ளப்பட்டுள்ளது. பதிலாக சர்வாதிகாரப் போக்கிலான நிர்வாகமே முன்னொடுக்கப்பட்டு வருகின்றது. யுத்தம் முடிவுக்கு வருவதற்கு முன்னரான காலப் பகுதியில், அரசின் எத்தகைய இயலாமை மற்றும் பின்னடைவுகளுக்கும் யுத்தமே பிரதான காரணமாக அரசினால் காரணம் கற்பிக்கப்பட்டது.

ஆனால், யுத்தம் முடிவடைந்து 18 மாதங்கள் கடந்துவிட்ட நிலையிலும் இன்றைய அரசு யுத்தம் முடிவடைந்த கையோடு நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளில் எதனையும் உரிய முறையில் நிறைவேற்றியுள்ளதா? இல்லையே? பெருமெடுப்பில் பிரபல்யப்படுத்தப்பட்ட 'வடக்கின் வசந்தம்' வேலைத்திட்டம் வாக்குறுதியளிக்கப்பட்ட படி முன்னெடுக்கப்படுகிறதா? இல்லையே.

உண்மையில் இன்று நாட்டின் வடக்குக் கிழக்கில் ஜனநாயக ரீதியான குடிசார் நிர்வாகம் - சிவில் நிர்வாகம் - நடைபெறவில்லை. மாறாக இராணுவமய நிர்வாகமே முன்னெடுக்கப்பட்டு வருகிறது. அதேபோன்று தெற்கிலும் கூட சர்வாதிகார முறையிலான ஆட்சி முறையே - நிர்வாகமே முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

உண்மையில் அரசு இன்று வடக்கு - கிழக்குப் பகுதிகளில் வாழும் மக்கள் குறித்து அச்சம் கொண்டுள்ளது. இல்லையேல் யுத்தம் முடிவடைந்ததைத் தொடர்ந்து இப்பகுதிகளில் சிவில் நிர்வாகத்தை முற்றுமுழுதாக நடைமுறைப்படுத்தியிருக்கலாமே? இந்த அளவுக்கு இராணுவமயச் செயற்பாடுகளுக்கு முன்னுரிமை கொடுத்துச் செயற்பட வேண்டிய அவசியம் எதுவும் இல்லையே? - என்றார்.

(ஒ-ஐ-20)

### வெற்றியின் பரிசு...




பாராட்டு: பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். கல்வித் திணைக்களப் பொறியியலாளர் கே.சிவபாலன் உரையாற்றுகிறார், பிரதி அதிபர் எம்.இராஜஸ்காந்தன், பழைய மாணவர் சங்க நம்பிக்கை நிதியத் தலைவர் சான்.சண்முகநாதன், அதிபர் என்.தெய்வேந்திரராஜா ஆகியோரும் அருகில் அமர்ந்திருப்பதையும் காணலாம். (204)

# சாவற்கட்டு பிரதேசத்தில் வீட்டுத்திட்டம்; நிராகரிக்கப்பட்ட விண்ணப்பம் இணைப்பு

சண்டிலிப்பாய், நவ.17

சாவற்கட்டு மீனவர் கிராமத்தைச் சேர்ந்த பல குடும்பங்கள் அரசாங்கத்தால் வழங்கப்படும் வீட்டுத்திட்டத்திற்கு விண்ணப்பித்திருந்த போதிலும் அவர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டன.

பரி சீலனை செய்த அதிகாரிகள் மலசல கூடம், குடிதண்ணீர் வசதி, காற்றோட்ட வசதி உட்பட சுகாதார வசதிகளுடன் கூடிய வீடு அமைக்கக் கூடிய காணிகள் இல்லாததால் அக்காணிகளுக்கு உரித் தானவர்களின் விண்ணப்பங்களை நிராகரித்தனர்.

இது குறித்துப் பாதிக்கப்பட்ட மக்கள் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமாரின் கவனத்திற்குக்கொண்டுவந்தனர். இதனை அடுத்துச் சுகாதாரப்பரிசோதகர்களுடன் மேற்படி கிராமத்திற்குச் சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் மேற்கொண்ட மாற்று நடவடிக்கையைத் தொடர்ந்து நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் மீண்டும் இணைக்கப்பட்டுள்ளன.

இதனால் சாவற்கட்டு கிராமத்தைச்சேர்ந்த குடும்பங்கள் நன்மை அடைந்துள்ளன. (ம -ற - 115)

# ஓமந்தை இராணுவச் சாவடியில் காணாமற் போனவரின் உறவினர்கள் பணம் வழங்கியது எனக்குத் தெரியாது

## விநாயகமூர்த்தி எம்.பி சொல்கிறார்

கொழும்பு, நவ.17

ஓமந்தை இராணுவ சோதனைச் சாவடியில் காணாமற் போனதாகக் கூறப்பட்ட ஒருவரின் உறவினருக்கு, இராணுவப் புலனாய்வுப் பிரிவின் உறுப்பினர் என தன்னை அறிமுகம் செய்து கொண்ட மேஜர் மதியழகனின் தொலைபேசி இலக்கத்தை நான் கொடுத்திருந்தேன்.

ஆனால், குறிப்பிட்ட உறவினரிடம் அவர் பணம் பெற்றது பற்றி எனக்குப் பின்னரே தெரியவந்தது. இந்தப் பணக் கொடுக்கலுக்கும் எனக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது - இப்படி நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி நேற்றுமுன்தினம் தெரிவித்தார்.

கொழும்பில் அவரது இல்லத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே இதனை அவர் தெரிவித்தார்.

காணாமற் போனோரை விடுதலை செய்வதற்காக பணம் பெற்றதாகத் தெரிவிக்கப்படும் முறைப்பாடு தொடர்பில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தியை வாக்குமூலம் அளிக்க வவுனியாவுக்கு வருமாறு பொலிஸார் அழைத்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தவிடயம்குறித்து அ.விநாயகமூர்த்தி எம்.பி மேலும் தெரிவித்தவை வருமாறு:-

விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட முன்னாள் அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலனின் மனைவி, இராணுவத்தினரிடம் சரணடைந்த தனது கணவரை மீட்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கோரி எனக்கு இரண்டு மாதங்களுக்கு முன்னர் கடிதம் எழுதியிருந்தார்.

அந்தக் கடிதத்துடன், பத்திரிகை ஒன்றில் வெளிவந்த எழிலன் இராணுவத்தினரிடம் சரணடைந்த படத்தையும், அது தொடர்பான செய்தியையும் இணைத்திருந்தார்.

நான் அதனை உடனே பயங்கரவாதத் தடுப்புப் பிரிவின் அத்தியட்சகருக்கு அனுப்பி வைத்தேன். எழிலன் தொடர்பாகத் தகவல் தருமாறும் கோரியிருந்தேன்.

இதனையடுத்து இரண்டு வாரங்களுக்குப் பின்னர் மேஜர் மதியழகன் என்ற ஒருவர் என்னுடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டார். அவர் தாம் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவின் அத்தியட்சகருக்கு அனுப்பிய கடிதம் தன்னிடம் இருப்பதாகவும், தாம் முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர் எனவும், விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து கருணா அம்மான் வெளியேறி இராணுவத்துடன் இணைந்தபோது தானும் அந்த அமைப்பிலிருந்து வெளியேறி இராணுவப் புலனாய்வுப் பிரிவில் இணைந்ததாகவும் கூறினார்.

அத்துடன் தான் இராணுவப் புலனாய்வுப் பிரிவில் தற்போது மேஜர் தரத்தில் இருப்பதாகவும் எழிலனும் விடுதலைப் புலிகளின் துணை அரசியல்துறைப் பொறுப்பாளர் தங்கனும் தடுத்துவைக்கப்பட்டுள்ளார்கள் எனவும் குறிப்பிட்டார். எனவே, அவர்களை விடுவிக்கவேண்டும் எனில் எழிலனின் மனைவி 15 லட்சம் ரூபாவும், தங்கனின் தாயார் 30 லட்சம் ரூபாவும் தமக்குத் தர வேண்டும் எனவும் கூறினார்.

இது குறித்து அவர்களின் உறவினர்களுக்கு தொலைபேசி மூலம் தாம் தெரியப்படுத்தியுள்ளார் என்றும் மதியழகன் தெரிவித்தார்.

எனினும், இந்த விடயம் குறித்து என்னையும் அவர்களின் உறவினர்களுக்குத் தெரியப்படுத்துமாறும் கூறினார்.

இதனையடுத்து நான் உடனே கிளிநொச்சிக்குச் சென்று கிளிநொச்சி கச்சேரியில் பணியாற்றும் எழிலனின் மனைவிக்கு மதியழகன் என்பவர் கூறியதைத் தெரியப்படுத்தினேன். அத்துடன், தங்கனின் தாயாரிடமும், மதியழகன் கூறியதைத் தெரியப்படுத்தினேன்.

அப்போது எழிலனின் மனைவியும் தங்கனின் தாயாரும் மதியழகனிடம் கொடுக்க தங்களிடம் இவ்வளவு தொகைப் பணம் இல்லை என என்னிடம் கூறினார்கள். இதனை நான் மதியழகனிடம் தெரியப்படுத்தினேன்.

சில நாள்களுக்குப் பின்னர் மதியழகன் தொலைபேசியூடாக என்னிடம் தொடர்புகொண்டார். என்னோடு தங்கன் கதைக்கப் போகின்றாராம் எனக் கூறி ஒருவரிடம் தொலைபேசியைக் கொடுத்தார். அப்போது தங்கன் என அறிமுகம் செய்துகொண்டவர் என்னுடன் கதைத்தார்.

அதனை என்னால் நம்பக் கூடியதாக இருந்தது. என்னுடன் அவர் (தங்கன் என மதியழகனால் அறிமுகம் செய்துகொண்டவர்) கதைக்கும்போது தன்னை இராணுவம் தடுத்து வைத்திருக்கின்றது எனவும், தனது மனைவியும், பிள்ளைகளும் இராணுவத்தினர் வேறொரு இடத்தில் தடுத்து வைத்திருக்கின்றார்கள் எனவும் கூறினார். அத்துடன் மாதம் ஒரு தடவை மனைவியும், பிள்ளைகளும் தன்னை வந்து பார்ப்பதற்கு அனுமதியளித்துள்ளார்கள் எனவும் குறிப்பிட்டார். எனவே, தனது விடுதலைக்குத் தாயாரை உதவ முன்வருமாறு கூறினார். இது தொடர்பாகத் தனது தாயாருக்கும் தெரியப்படுத்துமாறு தங்கன் என்ற பெயருடன் என்னுடன் கதைத்தவர் கூறினார். நான் உடனே தங்கனின் தாயாருக்கு இதனைத் தெரியப்படுத்தினேன். எனினும், தங்கனை விடுவிக்க மதியழகன் கேட்கும் பணத்தின் தொகை தன்னிடம் இல்லை எனத் தாயார் கூறினார்.

இதேவேளை, காணாமற் போனதாகக் கூறப்பட்ட ஒருவரின் உறவினர் என்னுடன் தொடர்பு கொண்டு கதைத்தார். வரணியைச் சேர்ந்த தமது உறவினரான நடராஜா சுதர்சன் என்பவர் 2008ஆம் ஆண்டு ஓமந்தை இராணுவச் சோதனைச் சாவடியில் காணாமல் போய்விட்டார் எனவும் அவரை மீட்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் என்னிடம் கூறினார்.

நான் உடனே மதியழகனிடம் காணாமற் போன நபர் தொடர்பாகக் கேட்டேன். அப்போது காணாமற் போன நடராஜா சுதர்சன் இராணுவத்தின் தடுப்பில் இருப்பதாக மதியழகன் கூறியதுடன் அவரின் உறவினரைத் தம்முடன் தொடர்பு கொள்ளுமாறும் கூறினார். இதனையடுத்து மதியழகனின் தொலைபேசி இலக்கத்தை உறவினரிடம் நான் கொடுத்தேன்.

உறவினரிடம் மதியழகன் பணம் பெற்றது பற்றி எனக்குப் பின்னரே தெரியவந்தது. அதாவது கடந்த 5ஆம் திகதி தொலைபேசி ஊடாக என்னுடன் தொடர்பு கொண்டு குறிப்பிட்ட உறவினர் தான் மதியழகனிடம் தொலைபேசியில் கதைத்தபோது மூன்றரை லட்சம் ரூபா பணம் தந்தால் தனது உறவினரான நடராஜா சுதர்சன் என்பவர் விடுவிக்கப்படுவார் எனவும், எனவே அந்தப் பணத்தைக் கொண்டு வவுனியா வருமாறும் தன்னிடம் கூறினாராம். இதனையடுத்து தான் மூன்றரை லட்சம் ரூபா பணத்தையும் கொண்டு வவுனியாவுக்கு வந்து மதியழகனோடு தொலைபேசியூடாகத் தொடர்பு கொண்டபோது மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் தம்மிடம் பணத்தைப் பெற்றுக்கொண்டதுடன் பணம் தந்தது தொடர்பாக எவருக்கும் சொல்லக்கூடாது என அவர்கள் மிரட்டிவிட்டுச் சென்றார்கள் எனவும், இராணுவத்தில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தனது உறவினர் தொடர்பாக அவர்கள் எதுவும் கூறவில்லை எனவும் என்னிடம் கூறினார். உடனே நான் வவுனியாப் பொலிஸாரிடம் இது தொடர்பாக முறையிடுமாறு குறிப்பிட்ட உறவினருக்கு கூறினேன். அவர் வவுனியா பொலிஸாரிடம் முறையிட்டார். நானும் வவுனியா பொலிஸாருக்கு இது தொடர்பாகத் தெரியப்படுத்தினேன்.

இந்த நிலையில் வாக்குமூலத்துக்காக என்னை வவுனியா பொலிஸார் அழைத்துள்ளனர்.- இப்படி அ.விநாயகமூர்த்தி எம்.பி. தெரிவித்தார். (ஒ-சி)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா




**மேஷம்:**
உங்களின் நலனில் மிகுந்த அக்கறை கொண்ட நண்பர்கள் சிலரைச் சந்திப்பீர்கள். தம்பதியர் இடையே அன்னியோன்யம் அதிகரிக்கும். குறுக்கு வழி சிந்தனைகளைத் தவிர்த்து எதிலும் நேர்மையாக செயற்படுவீர்கள். மனைவி, குழந்தைகளின் சின்ன சின்ன ஆசைகளை நிறைவேற்றுவீர்கள். அலைச்சல்கள் குறைந்து ஓய்வு எடுக்கும் நாள். நாவன்மை கூடும்.



**இடபம்:**
தைரியம், தன்னம்பிக்கை அதிகரிக்கும். தொல்லை கொடுத்த சிலரே தோள் கொடுத்து உதவ முன்வரலாம். அலைச்சல் இல்லாமல் தொலைபேசி வழியில் இருந்த இடத்தில் இருந்தே காரியங்களை முடித்துக் கொள்வீர்கள். புதிய முயற்சிகளில் வெற்றி கிட்டும். உதவி செய்த ஒருவருக்குப் பதில் உதவி செய்வீர்கள். அதிக வேலைகளால் பதற்றம் அடையலாம்.



**மிதுனம்:**
நினைத்த காரியங்கள் முடிய புத்திசாலித்தனமாகவும், பொறுமையாகவும் செயற்பட வேண்டும். குடும்ப பெரியவர்களுடன் மனக்கசப்புகள் வராமல் இருக்க விட்டுக் கொடுத்துச் செல்ல வேண்டும். எதிர்பாராத வகையில் முக்கிய உறவினர் ஒருவரைச் சந்திக்கலாம். தாயின் உடல் நலன் தொடர்பான விடயங்களில் எச்சரிக்கை அவசியம்.



**கடகம்:**
திட்டமிட்ட காரியங்கள் சரியான நேரத்திற்கு நடப்பது கடினமே. கோபம், வேகத்தை குறைக்க வேண்டிய நாள். பெண்கள் வழியில் செலவுகள், சிரமங்களைச் சந்திக்கலாம். குழந்தைகள் கேட்ட பொருள் ஒன்றை வாங்க அலைந்து திரியலாம். சிலருடன் தேவையற்ற வாக்குவாதங்களில் ஈடுபடலாம். பயணங்களில் மாற்றங்களைச் செய்யலாம்.



**சிங்கம்:**
வெளியூர்களில் இருந்து மகிழ்ச்சி தரும் செய்திகளைக் கேட்கலாம். நண்பர்கள் உங்களிடம் உதவிகள் நாடி வரலாம். சுபகாரியங்களுக்காக ஆடை, அலங்காரப் பொருள்கள் வாங்குவீர்கள். விரும்பிய உணவு வகைகளைச் சாப்பிடுவீர்கள். உறவுப் பெண்கள் சிலரால் சந்தோஷமான அனுபவங்களைப் பெறலாம். நல்லவர் ஆலோசனை கிடைக்கும்.



**கன்னி:**
உறவினர்களால் சில அன்புத் தொல்லைகள் இருந்தாலும், அதனால் ஆதாயம் பெறலாம். பல வேலை களைச் செய்யத் திட்டமிட்டு, அதில் சில வேலைகள் மட்டும் முடியலாம். சில பொருள்களைக் குறைந்த விலைக்கு வாங்குவீர்கள். நிலம், பூமி தொடர்பாக சில முக்கிய முடிவுகளை எடுக்க நேரிடலாம். குடும்பத்தினருடன் மனம் விட்டுப் பேசுவீர்கள்.



**துலாம்:**
புதியவர் ஒருவரின் நட்பு கிடைக்கும். சகோதரிகள் வழியில் அனுகூலமான உதவிகள் கிடைக்கலாம். தேவையற்ற செலவுகளால் கையிருப்புக் கரையலாம். தேக ஆரோக்கியத்தில் அக்கறை காட்ட வேண்டிய நாள். பிள்ளைகள் வழியில் அன்புத் தொல்லைகளை எதிர் கொள்ளலாம். சில பொறுப்புகளை ஏற்க மனமில்லாமல் தவிர்ப்பீர்கள்.



**விருச்சிகம்:**
பலனை எதிர்பார்த்து செய்த காரியம் ஒன்றில் எதுவும் கிடைக்காமல் போகலாம். வரவேண்டிய கடன் மிகுதிகள் எளிதில் வந்து சேரும். குடும்பப் பிரச்சினைகள் சிலவற்றால் மனக்குழப்பம் உருவாகும். சிலரின் பேச்சுகளுக்கு ஆள்படலாம். நீண்ட தூர பயணங்கள் செல்ல நேரிடலாம். எதிர்மறையான எண்ணங்களைத் தவிருங்கள்.



**தனுசு:**
எண்ணிய காரியங்கள் எண்ணம் போல நடக்கும். திட்டமிட்ட வெளியூர் பயணங்கள் செல்லலாம். அயலாருக்கு கேட்காமலேயே சில உதவிகளைச் செய்வீர்கள். கடனாகக் கொடுத்த பணம் திரும்பி வரலாம். வியக்க வைக்கும் செய்திகளைக் கேட்கலாம். சிலர் தங்களின் மனக் குறைகளை உங்களிடம் சொல்லலாம். பணவரவு உண்டு.



**மகரம்:**
நிறுத்தி வைத்த சில வேலைகளைச் செய்து முடிப்பீர்கள். தேக ஆரோக்கியம் தெம்பு உற்சாகம் தரும். மறதியால் தண்டச் செலவுகளை எதிர்கொள்ளலாம். மற்றவர்களை நம்பி யாருக்கும் வாக்குக் கொடுக்க வேண்டாம். பெற்றோர்கள் உங்களிடம் அதிக பாசமாக நடந்து கொள்வர். குடும்ப உறுப்பினர்கள் சிலரின் செயற்பாடுகளால் எரிச்சல் அடையலாம்.



**கும்பம்:**
சொந்த பந்தங்கள் விவகாரங்களில் ஏற்பட்ட மன உளைச்சல்கள் தீர்விற்கு வரும். குடும்ப சூழ்நிலை ஆறுதல் தருவதாக அமையும். உங்களை நம்பிச் சிலர் முக்கிய வேலைகளை ஒப்படைக்கலாம். செலவுகளை குறைத்து சேமிப்பை அதிகரிப்பீர்கள். தொழில் ரீதியான விடயங்களில் அதிக அக்கறையோடு செயற்படுவீர்கள்.



**மீனம்:** மற்றவர்களுக்காக நீங்கள் சில செலவுகளைச் செய்யலாம். ஒரு வேலையை முடிக்க ஒன்றுக்கு இரண்டு முறை அலையலாம். கலைத்துறையினர் எதிர் பார்த்த வாய்ப்புகளை நண்பர்கள் மூலம் பெறலாம். வீடு, நிலம் தொடர்பான விடயங்களில் ஏற்பட்ட பிரச்சினைகள் தீர்விற்கு வரும். கடந்த கால தவறு ஒன்றை நினைத்து வருந்துவீர்கள்.

## கௌரவிப்பு....



ஊக்குவிப்பு:வலி.கிழக்கு சைவசமய அருள்நெறி மன்றத்தால் பிரதேசத்தில் சமய, சமூகப் பணிகளை ஆற்றும் கல்வியாளர்கள், இந்து சமயப் பற்றாளர்கள் மற்றும் சமூகப் புரவலர்கள் ஆகியோர் அண்மையில் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர். (படம் :- 72)

# கொழும்புத்துறையில் சிறுவர் கழக கலை விழா

கொழும்புத்துறை,நவ.17

கொழும்புத்துறை சென்.றொசாறியன் சனசமூக நிலைய சிறுவர் கழக கலைவிழா இன்று புதன்கிழமை பி.ப 3 மணிக்கு கொழும்புத்துறை செபமாலை அன்னை ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக பங்குத் தந்தை அருட்திரு அன்ரன் மத்தாயஸ் அடிகளும் சிறப்பு விருந்தினர்களாக 'ஜெசாக்' நிறுவன பிரதிநிதி, யாழ்.மாநகர சபை உதவி மேயர் து.இளங்கோ மாநகரசபை உறுப்பினர் அ.கொர்னேலியன் ஆகியோரும் கலந்துகொள்வர். சிறுவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும். (201-135)

## கோபம் நீங்கினால்...



ஓர் ஊரில் பெரியவர் ஒருவர் வாழ்ந்து வந்தார். நல்ல அனுபவசாலி. பல்வேறு விடயங்கள் பற்றி நன்கு தெரிந்து கொண்டவர். மக்கள் இந்த உலகில் வாழ வேண்டும் என்பதைப் பலருக்குச் சொல்லிக் கொடுக்கத் தகுதி வாய்ந்த திறமைசாலி.

பெரியவரைத் தேடி ஒருநாள் ஒருவன் படபடப்பாக வந்தான். முகத்தில் கோபம் நிறைந்திருந்தது. வந்தவுடன் காலிலிருந்த செருப்பைக் கழற்றிக் கோபமாக வீசிவிட்டு கதவைப் 'படார்' என்று சாற்றினான். அதன் பிறகு மெதுவாக உள்ளே வந்தான். பெரியவருக்கு மரியாதை செலுத்தினான்.

"இதோபார்... உன்னுடைய மரியாதையை ஏற்றுக் கொள்ள முடியாது. செருப்பிடமும் கதவிடமும் மன்னிப்புக் கேட்டுவா" என்று கூறினார் பெரியவர்.

அவனுக்கு ஒன்றும் புரியவில்லை. பெரியவரிடம் காரணம் கேட்டான்.

அதற்கு அந்தப் பெரியவர் சொன்னார்,

"நீ உன் கோபத்தை அவற்றின் மீது காட்டிய போது இப்படி நினைக்கவில்லையே! அந்தச் செருப்புக்கள் ஏதோ பெரிய தவறு செய்து விட்டதாக நினைத்துத் தூக்கி எறிந்தாயே! கதவை விரோதியாக நினைத்து தள்ளினாயே! உன்னுடைய கோபத்தைக் காட்டுவதற்கு மட்டும் அவைகளுக்கு உயிர் இருப்பதாக நினைக்கும் போது மன்னிப்புக் கேட்பதற்கும் அவைகளுக்கு உயிர் இருப்பதாகத்தானே நினைக்க வேண்டும்?" என்றார்.

மறுபேச்சுப் பேசாது செருப்பிடம் சென்று "நண்பர்களே... உங்களை அவமதித்து விட்டேன்... என்னை மன்னித்துக் கொள்ளுங்கள்" என்றான். பின்னர் கதவிடம்போனான் "ஏதோ கோபத்தில் உங்களைத் தள்ளி விட்டேன். மன்னித்து விடுங்கள்"என்றான். இவ்வாறு செருப்பிடமும் கதவிடமும் மன்னிப்புக் கேட்டவுடனேயே அவன் மனம் லேசாகி விட்டது. ஒரு மனிதன் இந்த அளவுக்கு அமைதி யும் சந்தோசமும் பெற முடியும் என்பதை அவன் கற்பனை செய்து கூடப் பார்க்கவில்லை.

உள்ளே போய் அந்தப் பெரியவர் பக்கத்தில் உட்கார்ந்தான்.

"இப்போது எல்லாம் சரியாகிவிட்டது. நான் சொல்வதை நீ கேட்க முடியும். நாம் பேசலாம்" என்றார்.

"... இப்போது நீ கொஞ்சம் அன்பு செலுத்தியதால் உன்னுடைய பாரம் சிறிது குறைந்து விட்டது. நமக்கிடையில் நல்ல தொடர்பு இருக்க முடியும்" எனவும் அந்தப் பெரியவர் கூறினார்.

இதிலிருந்து என்ன தெரிகிறது? கோபம் வந்தால் செருப்புக்குக் கூட உயிர் இருப்பதாக நினைத்து விடுகிறோம். கதவிடம் கூட கைக்கலப்புக்குத் தயாராகி விடுகிறோம். நம்மில் சிலர் தொலைபேசியிடம் கூடத் தமது கோபத்தைக் காட்டுவார்கள். சட்டென்று கோபமாகத் தொலைபேசியை வைப்பார்கள்.

அப்படிப் பார்த்தால் அவற்றிடம் எல்லாம் நாம் மன்னிப்புக் கேட்க வேண்டும். இதைப் புரிந்து கொண்டு கோபத்தைப் பிறரிடம் காட்டாமல் இருப்போம்.

**கோ.சுவாமிநாதன்.**

## ஏஸி அறைபோல் இருப்போம்



மனிதர்களில் பெரும்பாலானோர் இன்று ஏதோ ஓர் உடல் நோயாலோ, மனநோயாலோ பாதிக்கப்பட்டவர்களாகவே இருக்கின்றார்கள். ஏன் இந்த நிலைமை? உண்மைகளின் அடிப்படையில் வாழ்வைச் சிந்திக்காமல் அறிவு வழியில் வாழ்வைச் சமநிலையில் கொண்டு செல்லாமல் குழப்பிக்கொள்வதே இக் கோளாறுகளுக்கெல்லாம் காரணம்.

சரீரம் மாறிக் கொண்டே இருப்பது. அதை மையமாகக் கொண்டு சிந்திக்கிறவருக்கு இந்தச் சிக்கல் உண்டு. அதனை மையப்படுத்தி வாழ்வைச் சிந்தித்தால் சமநிலை சாத்தியமாகும். இந்தச் சமநிலை கைவரப்பெற்ற யோகியை ஸ்திதப் பிரக்ஞர் என்று வர்ணிக்கிறது கீதை.

எனவே, இன்பமோ, துன்பமோ- தன்னைப் பாதிக்காதபடி, உள்ளச் சமநிலையை இழக்காதபடி மனிதன் தன்னைச் சமைத்துக் கொள்ள வேண்டும். வெளியே வெயிலோ, புயலோ எது அடித்தாலும் ஏயர் கண்டிஷன் அறையில் இருப்பவன் ஒரே சீதோஷ்ண நிலையில் இருப்பது போல, யோகியின் மனம் இதனாலேயே சமநிலையில் இருக்கிறது.

ஒரு பெரியவர் தனது வீட்டில் பூனை ஒன்றை வளர்த்தார். அந்தப் பூனை வீட்டில் தொல்லை கொடுத்து வந்த பெரிய எலியைப் பிடித்துக் கொன்றது. அதைக் கண்ட பெரியவர் ஆனந்தக் கூத்தாடினார். ஆனால் மறுநாள் நடந்த கொடுமை வேறு.

அந்தப் பெரியவர் ஆசையாக வளர்த்த கிளியை அதே பூனை கௌவி விட்டது. தடியை எடுத்துக் கொண்டு பூனையைத் துரத்தினார். துடிக்கத் துடிக்கக் கிளியைக் கௌவிக் கொண்டு பூனை ஓடியது.

சோர்ந்து போனார் வீட்டுக்காரர். பூனையைத் தன் ஜென்ம விரோதியாக நினைத்து வீட்டுக்கு வந்தபோதெல்லாம் விரட்டி அடித்தார். வேண்டாத எலியைக் கொன்றபோது மகிழ்ச்சி. வேண்டிய கிளியைக் கொன்ற போது துக்கம். எனவே பசிக்குத் தனக்கு வாய்த்த இரை எதுவானாலும் அதைப் பிடிப்பது பூனையின் இயல்பு என்ற அறிவு அவ ருக்கு வந்து விட்டது.

சமநிலையில் நின்றபடி வாழ்வை நன்கு உணர்ந்து தெளிவுடன் செயற்படுவதே கீதையின் நோக்கம். மகான்கள் சுகவாழ்வு இன்பத்தால் க்வரப்படுவதும் இல்லை; துயரத்தால் மிரண்டு பின்வாங்குவதும் இல்லை.

கஷ்டம் என்பது மாறி மாறி வந்து கொண்டே இருப்பது. அதை மையமாகக் கொண்டு சிந்திக்கின்றவரை இந்தச் சிக்கல் உண்டு. ஆத்மா மாறாது. அதனை மையப்படுத்தி வாழ்வைச் சிந்தித்தால் மகான்கள் சுக வாழ்வு சாத்தியமாகும்.

**சுகி சிவம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் வியாபாரம்


"என்ர மகனை எங்க வச்சிருக்கிறாங்கள்? என்ர பிள்ளை உயிரோட இருக்கா, இல்லையா எண்டாவது ஒரு மறுமொழியச் சொல்லுங்கோ''

வெறும் விசும்பலாகவே இது வரையும் ஒலித்துக்கொண்டிருந்த குரல்கள் இப்போதெல்லாம் பகிரங்கமாகவே வெடித்துக் கிளம்பத் தொடங்கி விட்டன.

யாழ்ப்பாணத்துக்கு நல்லிணக்க ஆணைக்குழு வந்த போது மட்டுமல்லாது, அதன் பின்னர் யாழ். பஸ் தரிப்பு நிலையத்துக்கு முன்னால் கடந்ததிங்கட்கிழமை 'நாம்இலங்கையர்' அமைப்பின் ஏற்பாட்டில் நடை பெற்ற ஆர்ப்பாட்டத்தின் போதும், தாம் அடக்கி வைத்திருந்த கண்ணீரையெல்லாம் கொட்டித் தீர்த்துவிட்டனர் காணாமல் போனோரின் உறவுகள். காணாமல் போனோரை விடுதலை செய்யுங்கள் அல்லது காணாமல் போனோர் பற்றிய விவரங்களை யாவது வெளியிடுங்கள் என்ற கோரிக்கையை முன்வைத்து ஜே.வி.பி அமைப்பின் அங்கமான 'நாம் இலங்கையர்' என்ற அமைப்பு இந்த ஆர்ப்பாட்டத்தை ஒழுங்கு செய்திருந்தது. ஆனாலும் ஜனநாயக ரீதியிலான - நியாயபூர்வமான கோரிக்கையை முன் வைத்து - போராட்டம் ஒன்றை யாழ்ப்பாணத்தில் நடத்துவதே ஒரு போராட்டமான விடயம்தான் என்பது இந்த ஆர்ப்பாட்டத்தின் மூலம் ஜே.வி.பியினருக்குப் புரிந்திருக்கும்.

ஆர்ப்பாட்டத்துக்கு முதல்நாளே ஜே.வி.பியினர் ஓர் இரத்தக்களரியைச் சந்திக்கவேண்டி வந்துவிட்டது. ஆர்ப்பாட்ட ஏற்பாடுகளை முடுக்குவதற்காகப் பலதரப்பட்டவர்களையும் சந்தித்துவிட்டு, கந்தர்மடத்திலுள்ள முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து பிரிந்து சென்றவருமான பத்மினி சிதம்பரநாதன் வீட்டுக்கு ஜே.வி.பி உறுப்பினர்கள் சென்றிருந்தனர். இவர்களில் ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹந்துன்நெத்தி, யாழ். மாவட்ட அமைப்பாளர் லலித், லங்கா பத்திரிகையின் ஆசிரியர்பீட உறுப்பினர் ஆகியோரும் உள்ளடங்கியிருந்தனர். ஓடித்திரிந்த களைப்புக்கு சற்று நேரமும் இவர்கள் ஓய்ந்திருக்க முடியவில்லை. அதற்குள் வினை மோட்டார் சைக்கிள்களில் உறுமியபடி வந்துவிட்டது. கூப்பிட்டதும் முன்னே சென்ற லலித்துக்கு விழுந்தது முதல் அடி. நானொரு நாடாளுமன்ற உறுப்பினர் எனக் கூறிக்கொண்டே தட்டிக் கேட்கப்போன ஹந்துன் நெத்தியின் பிடரியில் கல்லால் ஓங்கி ஒரு குத்து. கதிரைகள், வெண்கலத்தாம்பாளங்கள் என்பனவெல்லாம் பறந்து விளையாட, சினிமாவில் வருவதைப்போன்ற சண்டைக்காட்சி ஒன்று அரங்கேறி முடிந்தது. அலுவல் முடிந்ததும் வந்தவர்கள் வெகு ஆறுதலாகத் தமது மோட்டார் சைக்கிள்களை எடுத்துக்கொண்டு சென்ற பின்னர்தான், உதவிக்குப் பிறர் அங்கு விரைந்தனர்.

ஆனாலும் இது ஒரு வகையில் ஜே.வி.பியினருக்கு லாபகரமானதாகவே அமைந்துவிட்டது. எல்லா ஊடகங்களும் இந்தச் சம்பவத்தின் மீது மிகப் பெரியளவில் கவனக்குவிப்பை ஏற்படுத்தியிருந்ததால், அடுத்தநாள் நடைபெற்ற ஆர்ப்பாட்ட நிகழ்வு மீதும் எல்லோரது பார்வையும் உற்றுநோக்கத் தொடங்கின. கிட்டத்தட்ட குறித்த ஆர்ப்பாட்டத்துக்கு - ஜே.வி.பிக்கு - ஓர் இலவசப் பிரசாரத்தையே தாக்குதலாளிகள் செய்துவிட்டுப் போயிருக்கிறார்கள். அடிகாரர்களின் உபயத்தில் தலையில் இரத்தக்கறை படிந்த பன்டேஜை கட்டியபடி - ஊமைவிழிகள் என்ற திரைப் படத்தில் தோல்வி நிலையென நினைத் தால் மனிதன் வாழ்வை நினைக்கலாமா என்று பாடியபடி வரும் ஜெய்சங்கரின் கெட்டப்பில் - ஆர்ப்பாட்டத்தின் போது ஹந்துன் நெத்தி வலம் வருவதற்கும் உதவியது.




துயரம் சொல்லல்: யாழ். நகரில் ஜே.வி.பியினர் நடத்திய ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட காணாமற்போனோரின் பெற்றோர், உறவினர்கள்

**அந்த அவசரகாலச்சட்டம் நீடித்திருக்க வேண்டும் என நாடாளுமன்றத்தில் கைகளை உயர்த்தியவர்கள் இப்போது எந்த முகத்துடன் காணாமல்போனோருக்காக ஆர்ப்பாட்டம் நடத்துகிறார்கள் என்ற கேள்வி எல்லோரிடத்துமே உண்டு. அவசரகாலச் சட்டத்துக்கு ஆதரவாகக் காவடி தூக்கியவர்கள் என்ற வகையில் இந்தக் காணாமல் போதல்களுக்கு ஜே.வி.பியும் ஒரு முக்கிய பங்காளிதான்.**

ஆர்ப்பாட்டத்தின் இறுதியில் பொலிஸார் கைகட்டிப் பார்த்திருக்க , முட்டை, தக்காளிப்பழம் என்பனவெல்லாம் மழையாகப் பொழிந்ததனூடாகவும், ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொள்ளவென தென்னிலங்கையில் இருந்து வந்த பல்கலை மாணவர்கள் பலமணிநேர விசாரணைக்குப் பிறகு பொலிஸாரால் திருப்பியனுப்பப்பட்டமையும் ஜே.வி.பி. மீது யார் தாக்குதல் நடத்தினார்கள் என்பதையும் எல்லோருக்குமே தெரியவைத்திருக்கும்.

காணாமல் போனோரை விடுவிக்க வேண்டும் அல்லது அவர்களது விவரங்களையாவது வெளியிடவேண்டும் என்று கோரி நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தின் இறுதியில் குறித்த கோரிக்கையை வலியுறுத்திக் கையொப்பங்களும் பெறப்பட்டன. இதன் போது கையொப்பம் இட்ட ஜே.பி.வி உறுப்பினர்களின் கரங்களிலும் இரத்தத்தின் நெடியும் கறையும் நிறையவே கலந்திருந்தன.

முதல்நாள் தாக்குதல் காரணமாக - அவர்களின் காயங்களிலிருந்து புறப்பட்டது நிண நாற்றமல்ல. அந்த நெடி சில மாதங்களுக்கு முன்னர் வரை தமிழ் மக்கள் மீது அவசரகாலச்சட்டம் ஏவி விடப்படுவதற்கு நாடாளுமன்றுக்கு ஆதரவாகக் கை உயர்த்தியதால் ஏற்பட்ட கறையே. அந்தக் கறை இன்னும் முழுதாகக் காயாமல் ஒவ்வொரு ஜே.வி.பியினரின் கைகளிலும் ஒட்டிக்கொண்டிருக்கிறது. தமிழ்மக்கள் பெருமளவில் எந்தவிதக் கேட்டுகேள்வியுமின்றிச் சுட்டுக்கொல்லப்படுவதற்கும், வகைதொகையின்றிக் கைது செய்யப்படுவதற்கும், காணாமல் போவதற்கும் அவசரகாலச் சட்டமே வழிதிறந்து கொடுத்தது.

அந்த அவசரகாலச்சட்டம் நீடித்திருக்க வேண்டும் என நாடாளுமன்றத்தில் கைகளை உயர்த்தியவர்கள் இப்போது எந்த முகத்துடன் காணாமல் போனோருக்காக ஆர்ப்பாட்டம் நடத்துகிறார்கள் என்ற கேள்வி எல்லோரிடத்துமே உண்டு. அவசரகாலச் சட்டத்துக்கு ஆதரவாகக் காவடி தூக்கியவர்கள் என்ற வகையில் இந்தக் காணாமல் போதல்களுக்கு ஜே.வி.பியும் ஒரு முக்கிய பங்காளிதான். அதனை எந்த முகமூடி அணிந்தாலும் மறைக்க முடியாது. பாதிக்கப்பட்ட தமிழ்மக்களும் மறக்கத் தயாராயில்லை. இல்லாவிட்டால் ஆர்ப்பாட்டத்தின் போது இன்னும் நிறையப்பேர் தனது அவலங்களைச் சொல்ல முன்வந்திருப்பர்.

ஜே.வி.பி. மீதான வெறுப்புணர்வின் காரணத்தாலேயே காணாமல்போனோரின் உறவினர் பலர் இதில் கலந்துகொள்ளாது தவிர்த்துவிட்டனர். கிணற்றில் விழுந்த ஒருவர் நீரில் மூழ்கும்வரை சிரித்துக் கொண்டு வேடிக்கை பார்த்துவிட்டு, முற்றாக மூழ்கிய பின்னர் குய்யோ! முறையோ! என்று கூச்சல் போடுகின்ற கதையாகவே ஜே.வி.பியின் இப்போதைய நடவடிக்கைகள் அமைந்திருக்கின்றன. உண்மையில் ஜே.வி.பி அமைப்புக்கு கடந்த காலங்களில் ஒரு தீவிரத் தன்மையுடன் கூடிய சிங்கள இனவாத முகமூடியை அணிதல் மிகவும் பிடித்தே இருந்தது. அதுவே ஜே.வி.பியின் வாக்கு வங்கியையும், இருப்பையும் என்றைக்கும் நிரந்தரத்துவமானதாக வைத்திருக்கும் என நம்பியது.

இதனாலேயே தமிழர்களுக்கு எதிரான எந்தவொரு சட்டமூலத்துக்கும், பிரேரணைக்கும் கண்ணை மூடிக்கொண்டு அது ஆதரவளித்து வந்தது. இதனால் ஜே.வி.பி என்றாலே அது இனவாதக் கட்சிதான், தமிழர்களுக்கு எதிரான அமைப்புத்தான் என்பன போன்ற அடையாளப்படுத்தல்கள் ஏற்பட்டுவிட்டன. எனினும் அதைப் பற்றியெல்லாம் ஜே.வி.பி. கவலைப் படவில்லை. ஏனெனில் அதன் வாக்கு வங்கி தனியே சிங்கள மக்களை மையப்படுத்தியதாகவே இருந் தது. இதைவிட அரசுக்கு சவால் விடுக்கக்கூடிய மூன்றாவது சக்தியாகவும் அது உருவெடுத்திருந்தது.

ஜே.வி.பியின் ஆதரவு இல்லாமல் ஆட்சியே அமைக்க முடியாது என்னும் அளவுக்கு இந்த வளர்ச்சி அசுர வேகத்தில் நடந்தது. சந்திரிகாவின் அரசுக் கட்டிலின் நான்காவது காலாகவும், மஹிந்த ராஜபக்ஷவின் முதல் அரியணை அமர்வுக்கான படிக்கல்லாகவும் ஜே.வி.பி மாறியது. ஆனால் காலம் மாறக் காட்சிகளும் மாறத்தொடங்கின. மஹிந்தரின் பிரித்தாளும் தந்திரத்தில் ஜே.வி.பியும் சின்னாபின்னமானது. அதன் கோட்டைகள் எல்லாமே அரசின் காலடியில் வீழ்ந்தன.மிகச்சொற்பமான வாக்குகளைப் பெறும் நலிந்த நிலைக்கு அது தள்ளப்பட்டது.ஆகவே தனது பழைய முகத்தை விடுத்து இன்னொரு முகம் ஜே.வி.பிக்குத் தேவைப்பட்டது.

இந்த நிலையில்தான் ஜே.வி.ப ஆதரவளித்த சரத் பொன்சேகாவுக்கு தமிழர் பகுதிகளில் அமோக ஆதரவு கிடைத்தது.இது ஜே.வி.பிக்கு அரசுக்கு எதிரான நடவடிக்கைகளை முன்னெடுப்பதனூடாகத் தமிழர்களின் வாக்குகளைப் பெறலாம் என்ற ஆசையைத் தூண்டி விட்டது.

இதனாலேயே அதிகாரத்தின் கரும்பைச் சுவைத்துக்கொண்டிருக்கும் போது, காணாமல்போன உறவினர் களின் உப்புக்கரிக்கும் கண்ணீரினைக் கணக்கில் எடுக்காதவர்கள் திடீரென இப்போது இரட்சகர்களாக வேடமிட்டு உள்ளே நுழைந்திருக்கின்றனர்.

## ஔண்யன்

ஜே. வி.பியினரின் வருகைக்கும், அவர்களின் அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களுக்கும் பின்னணி இதுதான். இதற்கு முன்னர் பட்டதாரிகளின் வேலையில்லாப் பிரச்சினையைக் கையில் எடுத்தவர்கள் இப்போது காணாமல் போனோரின் பிரச்சினையைக் கையில் தூக்கியிருக்கிறார்கள். பொதுவாக எந்தப் பொருள் அதிக லாபத்தைக் கொடுக்குமோ அதனையே கொள்வனவு செய்து விற்று லாபமீட்டுவது வியாபாபாரிகளின் இயல்பு. இப்போது யுத்தம் முடிந்த பின்னர் காணாமல் போனோரின் கண்ணீர் அதிக லாபத்தைக் கொடுக்கும் பொருளாக மாறிவிட்டது. அதனால்தான் அவர்களின் கண்ணீரை வைத்து வியாபரம் செய்வதற்கு எல்லோருமே முண்டியடிக்கின்றனர். ஜே.வி.பியும் அந்த வியாபாரக் கும்பலைச் சார்ந்ததுதான். ஆனால் மக்கள்தான் இன்னமும் தம் கண்ணீருக்கு முற்றுப் புள்ளி எப்போதெனத் தெரியாமல் அழுதுகொண்டேயிருக்கிறார்கள்.









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஊர்காவற்றுறையில் நீர்த்தாங்கிகள் வழங்கல்

ஊர்காவற்றுறை,நவ.17

ஊர்காவற்றுறைப் பிரதேசத்தில் 'சொண்ட்' நிறுவன அனுசரணையுடன் தெரிவு செய்யப்பட்ட 10 பொது இடங்களுக்கும், பாடசாலைகளுக்கும் தண்ணீர் தாங்கிகள் வழங்கும் நிகழ்வு ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பணிமனையில் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பணிமனையின் நிர்வாக உத்தியோகத்தர்கள் தெ.கிருபைநாதன் ஊர்காவற்றுறை ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் பொறுப்பாளர் காந்தன் 'சொண்ட்' நிறுவனத் திட்ட இணைப்பாளர் விமல் கிருஸ்ணா ஆகியோர் கலந்து கொண்டனர். (ம-325)

## மறைந்தும் மறையாத எம் தெய்வங்களுக்கு நெஞ்சம் நெகிழ்ந்த நினைவஞ்சலிகள்

**7ஆம் ஆண்டு**

தாயின் மடியில் 09 ✱ 10 ✱ 1971



தரனின் தாளில் 04 ✱ 12 ✱ 2003

அமரர் **தம்பிராஜா சுதர்சன்** (சுதா)
*(ஆசிரியர், யா/புங்குடுதீவு மகாவித்தியாலயம்)*
திதி: ஏகாதசி *(17.11.2010)*

**முதலாம் ஆண்டு**

தாயின் மடியில் 15 ✱ 02 ✱ 1975



தரனின் தாளில் 12 ✱ 11 ✱ 2009

அமரர் **தம்பிராஜா சயந்தன்**
*(வீதி அபிவிருத்தி அதிகாரசபை உத்தியோகத்தர்)*
திதி: ஏகாதசி *(02.11.2010)*

ஆண்டுகள் உருண்டோடி மறைந்தாலும்
ஆறாது எங்கள் துயரம்
உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
அன்புப் பெற்றோர்,
சகோதர சகோதரிகள்,
மைத்துனர், மருமக்கள்.

முதலாம் வட்டாரம்,
நெடுந்தீவு.

(106067)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்
**சுப்பிரமணியம் சுகுமார்** (சுகு)

தோற்றம்
11.09.1952

மறைவு
18.10.2010

அன்பின் சிகரமாய் பண்பின் பிறப்பிடமாய்
அன்பினால் எல்லோரையும் அரவணைத்தீர்கள்
எம்மைவிட்டுப் பிரிந்து நீங்கள் இறைவனடி சேர்ந்தாலும்
என்றென்றும் உங்கள் நினைவை நாம் மறவோம்
உங்கள் ஆத்மசாந்திக்காக இறைவனை வேண்டுகின்றோம்.

எமது குடும்பத் தலைவரின் பிரிவுச்செய்திகேட்டு எமது துயரத்தில் பங்குகொண்டதோடு மட்டுமல்லாமல் வேண்டிய உதவிகளை முன்னின்று செய்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் மற்றும் அனு தாபச் செய்திகளை நேரடியாகவும் தொலைபேசி மூலமாகவும் மின்னஞ்சல் வாயிலாகவும் தெரிவித்தவர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.


இன்று (17.11.2010) புதன்கிழமை நண்பகல் அன்னாரது இல்லத்தில் இடம்பெறும் அந்தியேட்டிக் கிரியையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரை யும் அன் புடன் அழைக்கின்றோம்.

**குடும்பத்தினர்.**

"சுகுணவாசம்",
நாமகள் ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.
தொ.பே. இல.: 021 4904194

(106082)

## ஐந்தாம் குருபூசை தினம்



**கலாநிதி அருட்கவி**
**சீ.விநாசித்தம்பி புலவர்** (M.A)
திதி: ஏகாதசி *(17.11.2010)*

**கருவிலே கவிபாடி புவிதேடினீர்**
**கடல் சூழ்ந்த கருநீலன் மனம் நாடினீர்**
**உருவிலே உமைபாகன் நிறம் ஆகினீர்**
**உயிருடன் ஒவ்வொருவர் உளம் வாழ்கிறீர்!**

அவரது குருபூசை தினத்தை முன்னிட்டு அளவெட்டி மேற்கு, நாகேஸ்வரம் ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தானத்தில் விசேட பூசைகளும் அன்னதானமும் நடைபெறும். அன்பர்கள் குருபூசை மற்றும் அன்னதானம் ஆகியவற்றில் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

**குடும்பத்தினர்.**
**அளவெட்டி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சூரியகாந்தி

சூரியகாந்திச்செடி பற்றிச் சில தகவல்கள்.

ஒவ்வொரு சூரியகாந்திப் பூவும் 15 முதல் 20 சென்ரிமீற்றர் விட்டம் கொண்டதாக இருக்கும்.

ஒவ்வொரு பூவிலும் 750 முதல் 1000 விதைகள் இருக்கும் இவற்றின் மொத்த எடை 50-60 கிராம் இருக்கும்.

சூரிய காந்திச் செடிக்கு சராசரியாக 4முதல் 4 ½ அடி உயரத்துக்கு வளர்ச்சி அடையும் தன்மை உள்ளது. சில அபூர்வ இனங்கள் 6 - 7 அடி வரை கூட வளர்வதுண்டு குட்டை ரக சூரியகாந்திச் செடிகளும் இருக்கின்றன. இவை 3அடி உயரம் வரை வளரும்.

# துளசி

நிலா

எல்லோர் வீட்டிலும் இருக்க வேண்டிய செடிகளில் முக்கியமானது துளசி தான். வளர்ப்பதைவிட அதனை கவனிப்பதுதான் அவசியம்.

துளசிச் செடியை தினமும் மென்று வந்தால் குடல், வாய், வயிறு தொடர்பான பிரச்சினைகள் வராது. சமிபாடு, புத்துணர்ச்சி போன்றவற்றை ஏற்படுத்தும் வாய்த் துர்நாற்றத்தைப் போக்கவும் அது சிறந்தது.

நீரிழிவு நோய்க்குக் கூட இது சிறந்த மருந்தாகும் நீரில் துளசி இலையை ஊறவைத்துப் பருகினால் பயன் தரும். வெய்யில் காலத்தில் எற்படும் வியர்வையால் உண்டாகும் துர்நாற்றத்தைப் போக்க துளசி இலையை முதல் நாள் நீரில் ஊற வைத்துக் குளித்தால் துர்நாற்றத்துக்கே இடமில்லை.

சொறி, தோலில் நீண்ட நாள்கள் இருக்கும் படை போன்றவற்றைப் போக்க துளசி இலை, தேசிப்புளி சேர்த்து அரைத்து விழுதை தடவலாம்.

சிறுநீர் கோளாறு உடையவர்கள் துளசி விதையை நன்கு அரைத்து உட்கொள்ளலாம்.

சர்க்கரை வியாதி உடையவர்களுக்கு அதனைக் கட்டுப்படுத்த துளசி இலையை மென்று உண்டால் பயன் தரும்.

இவ்வாறு மாத்திரைகளால் போக்க முடியாத நோய்களைக் கூடப் பணம் கொடுக்காமல் இயற்கையாக கிடைக்கும் துளசி இலை போக்கிவிடும்.

பலதரப்பட்ட பூக்கன்றுகளை நடும் ஓரிடத்தில் இந்த மருந்துச்செடியையும் நடலாமே. வைத்தியர் வீட்டிலேயே இருப்பார்.



# பேஷியல் செய்தால் ஆபத்து



அடிக்கடி பேஷியல் செய்பவரா? நீங்கள், இதனால் பெரும் அபாயங்கள் தான் ஏற்படும். நம் முகத்தில் இருக்கும் தசைகள் வெகு சீக்கிரத்தில் தளர்ச்சி அடைய ஆரம்பிக்கின்றன.

இறுக்கமாக இருக்க வேண்டிய தசைகளின் இறுக்கம் தளர்ந்து விடும். சுருக்கங்களும் சீக்கிரம் விழுந்துவிடும்.

பல இரசாயன கலவைகள் கொண்ட முகப்பூச்சுக்களை பூசுவதால் தோல் தன்னுடைய இயல்பான தன்மையை இழக்கும்.

ஒரு மனிதனின் தோலின் நிறம், இரத்தத்தையும் தோலிலுள்ள தனிப்பட்ட நிறத்தை உருவாக்கும் பரம்பரையையும் பொறுத்தது.

பிறப்பிலேயே நிர்ணயிக்கப்படுகின்ற அவரவர் நிறங்களை மாற்ற முடியாது. இதனால் கண்ட கண்ட மருத்துவ ரீதியான கலவைகளைப் பூசுவதால் என்ன பயன்? இதனால் தீமையேயொழிய நன்மை எமக்கு கிடைக்கப் போவதில்லை.

இக்கரை மாட்டுக்கு அக்கரை பச்சை என்பது போல. பின் விளைவுகள் பற்றி நாம்தான் முடிவு செய்து கொள்ள வேண்டும்.

க.நிலா



# உருளைக்கிழங்கு

உருளைக் கிழங்கை 200 ஆண்டுகளுக்கு முன்பு ஆங்கிலேயர்தான் அறிமுகப்படுத்தினார்களாம்.

வாழைப்பழத்தில் உள்ள பொட்டாசியத்தை விட உருளைக்கிழங்கில் தான் அதிக பொட்டாசியம் உள்ளது.

புற்றுநோய்க்கான எதிர்ப்பு சக்தி கொண்ட போட்டாகாரோட்டீனும் அதில் உள்ளது. அத்துடன் புரதச்சத்தும் வைசின், மெதியோனைன் போன்ற அமிலங்களும் இதில் அதிகம் உள்ளன. புண்கள் காயங்கள் போக்குவதற்கு இதன் தோல் பயன்படுத்தப்படுகிறது.

மன அழுத்தத்தில் இருந்து விடுபட வேகவைத்த உருளைக்கிழங்கு சிறந்தது. சர்க்கரை நோய் உள்ளவர்களுக்கு இதுதான் எதிரி.

உருளைக் கிழங்கைத் தோலோடு சமைப்பதுதான் சிறந்தது ஏனெனில் கிழங்கை விட தோலில்தான் அதிக சத்து உள்ளது.


வேகவைத்த உருளைக்கிழங்கைத் தான் அமெரிக்க பழங்குடிகள் உண்டு வந்தார்கள் என்பது வரலாறு. எண்ணெய் விட்டு வதக்கி சாப்பிட்டால் அதிக கலோரி சத்துக்கள் சேர்ந்து கிடைக்கும்.

கோடை காலங்களில் உருளைக்கிழங்கு சீக்கிரம் அழுகி விடும் எனவே பாதுகாப்பான குளிரான இடத்தில் வைத்துப் பாதுகாக்கலாம்.

வெங்காயத்துடன் சேர்த்து உருளைக்கிழங்கை வைக்கக் கூடாது.

க.கோபி






# பனிச்சிறுத்தை

அபூர்வமான பனிச்சிறுத்தை இமயமலையில் அட்லாந் இந்துகுஷ் பகுதியில் காணப்படுகிறது. 5.5 மீற்றர் வரை உயரமுள்ள அடர்ந்த காடுகளில் இந்த பனிச்சிறுத்தைகளைப் பார்க்கலாம்.

மலைகளில் சுத்தித் திரியும் ஆடுகளும், கம்பளி ஆடுகளும் இவற்றுக்கு உணவு ஆகும்.

கடந்த காலத்தில் பனிச் சிறுத்தைகள் அதன் அழகிய தோலில் கைப்பைகள் செய்வதற்காக வேட்டையாடப்பட்டன. தற்போது பனிச் சிறுத்தைகளை வேட்டையாடுவது சட்டவிரோதம் என அறிவிக்கப்பட்டுள்ளது.



# நன்றி

நன்றி என்பது அழகானதொரு வார்த்தை ஆகும். இது நமது குணங்களை மேம் படுத்தி பண்பை உருவாக்கும். நன்றி எமது பணிவில் இருந்துதான் உருவாகின்றது.

எமது நடத்தையின் மூலம் பிறர் மீது நாம் எவ்வாறு எமது மனப்பாங்கைப் பிரதிபலிக்கிறோம் என்பதை இது எடுத்துக்காட்டும்.

நன்றி என்பது கொடுக்கல் வாங்கல் அல்ல. அன்பு பொறுமை போன்றவற்றைத் திருப்பித் தர முடியாது. நன்றி எமக்கு வாழ்க்கைப் பாடத்தைச் சொல்லிக் கொடுக்கிறது எனலாம்.

எமது மனதில் இருந்து திருப்தியாக நன்றி என்று சொல்லும் போது எமக்குள்ளே ஒரு பெருந்தன்மை பிறக்கும்.

நாணயம்மிக்க மனிதர்களாக எம்மை இனங்காட்டி எமது குணநலன்களையும் வெளிப்படுத்தும் தன்மை நன்றிக்கு உண்டு. தான் என்னும் அகம்பாவம்தான் நன்றிக்கு குறுக்கே நிற்கின்றது.

நன்றியுணர்வும், பணிவும் எம்மிடத்தில் இருக்கும் போது எமது செயல்கள் எல்லாம் இயற்கையாகவே நல்லதொரு எடுத்துக் காட்டாக அமையும்.

க.சுமு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பயிற்சிப் பட்டறை

யாழ். மறைமாவட்ட கத்தோலிக்க பங்குத் தளமட்டத்திலான செய்தியாளர் பயிற்சிப் பட்டறை இன்று புதன்கிழமை காலை 9.30 மணிக்கு பாதுகாவலன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஆலயப் பங்குகளில் இருந்து செய்தித் துறையில் ஆர்வமுள்ள தலா இருவரைக் கலந்துகொள்ளுமாறு பாதுகாவலன் பத்திரிகை ஆசிரியர் அருட்திரு. சாள்ஸ் கொனின்ஸ் அடிகளார் அறிவித்துள்ளார். (201-135)

**கோழிக்குஞ்சு விநியோகம்**

முட்டைக் குஞ்சு, இறைச்சிக் குஞ்சு, சேவல் குஞ்சு என்பன ஒடருக்கு பெற்றுக்கொள்ளலாம்.

மாலினிபாம் - தொ.பே: 0778448659

**German Swiss மொழிகள்**

German, Swiss மொழி வகுப்புகள் தமிழ் மொழிபெயர்ப்புடன் நடைபெறுகின்றன.

German Institute

10, Palaly Road,Jaffna. T.P:0771604823

**இறைச்சிக் கோழி விற்பனை**

புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து குறைந்த விலையில் காலை 6 மணி தொடக்கம் இரவு 8 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

நல்லூர் பாம் சென்ரர், 19,முருகேசர் லேன், நல்லூர்.

**பணிப்பெண் தேவை**

கொக்குவில் பகுதியில் வசிக்கும் சிறிய குடும்பத்திற்கு வீட்டில் தங்கி நின்று பணி புரிய பெண் பணியாள் தேவை. பொறுப்புக்கள் அற்றவர் விரும்பத்தக்கது. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு:- 0750395021

## நுணாவில் அ.த.கவில் பெயர் வளைவு திறப்பு

தென்மராட்சி, நவ.17

கைதடி-நுணாவில் அ.த.க. பாடசாலையில் நிர்மாணிக்கப்பட்ட நுழை வாயில், பெயர் வளைவு ஆகியவை இன்று புதன்கிழமை காலை 8.30 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.

இளைப்பாறிய ஆசிரியர் எம்.கனகசபை நினைவாக அன்னாரது குடும்பத்தினரால் இவை நிர்மாணிக்கப்பட்டதாக பாடசாலை அதிபர் நா.அருட்சோதி தெரிவித்தார். (ம-207)

**பணிப்பெண் தேவை**

சகல வசதிகளும் உள்ள வீட்டில் தங்கி இருந்து பணி புரிவதற்கு ஏற்ற பெண் தேவை. (அங்கத்தவர் எண்ணிக்கை இரண்டு அல்லது மூன்றாக இருக்கலாம்). மேலதிக விவரங்களுக்கு தொ.இ. உடன் தொடர்பு கொள்ளவும். 077 9851802 (105987)

**தவறிவிட்டது**

கைதடி - நுணாவில், சாவகச்சேரி எனும் முகவரியுடைய நித்தியானந்தன் தேவராணி என்பவரின் தே.அ.அ. (695550057 V) மற்றும் தங்கச் சங்கிலி என்பன அடங்கிய கைப்பை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பின்வரும் தொ.பே. இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். 077 8177083, 077 6621033

**கோழிக்குஞ்சு விநியோகம்**

ஒறிஜினல் No.1 புறொயிலர் குஞ்சுகள் 22.11.2010 காலை விநியோகிக்கப்படும். முன் பதிவு செய்யவும்.

நல்லூர் பாம் சென்ரர்,
19, முருகேசர் லேன்,
நல்லூர்.

## கௌரவிப்பு விழா

தென்மராட்சி, நவ.17

சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலையில் இவ்வருட ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்கள் கௌரவிப்பு நிகழ்வு நாளை காலை 9 மணிக்கு நடைபெறும்.

பாடசாலை அதிபர் திருமதி சி.கந்தசாமி தலைமையில் பாடசாலை மண்டபத்தில் இந்நிகழ்வு இடம்பெறவுள்ளது. (ம-207)

## மரம்நட வெட்டிய குழிக்குள் வெடிக்காத நிலையில் ஷெல்

தென்மராட்சி, நவ.17

மரக்கன்று நடுவதற்கு குழி வெட்டப்பட்டபோது வெடிக்காத ஷெல் கண்டெடுக்கப்பட்டது. நேற்று முன்தினம் திங்கட்கிழமை காலை சாவகச்சேரி நகர சபை வளாகத்தில் மரக்கன்றுகள் நட்டும் நிகழ்வுக்கு குழிகள் வெட்டப்பட்டபோது புதையுண்ட நிலையில் ஷெல் கண்டுபிடிக்கப்பட்டது. (ம-207)

## சிறுவர் தின நிகழ்வு

யாழ்ப்பாணம், நவ.17

குருநகர் தொடர்மாடி முன்பள்ளியில் சிறுவர் தின நிகழ்வு நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வு ஜனாதிபதியின் இரண்டாவது பதவியேற்பினை முன்னிட்டு யாழ். பிரதேச செயலக யாழ்நகர் கிழக்கு சமுர்த்தி வங்கியினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. (204-16)

## மகரஜோதி மண்டல விழா

யாழ்ப்பாணம், நவ.17

யாழ். கோண்டாவில் சபரீச ஐயப்பன் ஆலய வருடாந்த மகரஜோதி மண்டல பெரு விழா இன்று புதன் கிழமை காலை 7 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் கலந்துகொள்ளும் அடியார்கள் மாலையைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (204)

## சைக்கிளை ஒளி வசதியுடன் செலுத்துமாறு அறிவுறுத்து

யாழ்ப்பாணம், நவ.17

இரவு நேரங்களில் சைக்கிளில் பயணிப்போர் சைக்கிளுக்குரிய ஒளி வசதியை ஏற்படுத்த வேண்டும் என்று பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

இவ்வாறு ஒளி வசதி இன்றி நகரில் சைக்கிளைச் செலுத்திச் சென்ற பலரை பொலிஸார் மறித்து எச்சரித்து வருகின்றனர்.

சைக்கிளின் முன்பக்கத்தில் ஒளியை ஏற்படுத்தக்கூடிய உபகரணம் பொருத்தப்பட்டிருக்க வேண்டும் என்று பொலிஸார் கட்டாய அறிவித்தலை விடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-26)

## விழிப்புணர்வுக் கருத்தரங்கு

வடமராட்சி, நவ.17

வடமராட்சி வலய திறந்த பாடசாலை பிரிவில் சமூக விழிப்புணர்வுக் கருத்தரங்கு எதிர்வரும் 21ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

வடமராட்சி வலய முதனிலைப் போதனாசிரியர் கோ.குணசிங்கம் தலைமையில் நடைபெறும் இக் கருத்தரங்கில் வளவாளர்கள் கருத்துரை வழங்குவர். (ம-236)

**வீடும் காணியும் விற்பனைக்கு**

யாழ்ப்பாணம், கோண்டாவில் கிழக்கு, பொற்பதி வீதியில் இரண்டரைப் பரப்புக் காணியில் மூன்று அறைகளைக் கொண்ட கல்வீடும், அதற்கு அருகிலுள்ள இரண்டரை பரப்பு வீடு கட்டக் கூடிய இடப்பரப்பும், விற்பனைக்கு உண்டு. இவ்வீடும் காணியும் நாலு பக்கமும் கற்சுவர் மதிலும் சகல வசதிகளையும் கொண்டதாகும். இவற்றை வாங்க விருப்பம் உடையோர் விளம்பர இல.4091, உதயன் பத்திரிகைக் காரியாலயம், யாழ்ப்பாணம் என்ற விசாலத்திற்கு கடிதம் மூலம் தொடர்பு கொள்ளவும். விவரம் வேண்டுவோர் தொலைபேசி இலக்கம் 077 2811621 dbalasing@hotmail.com உடன் தொடர்புகொள்ளலாம். (106084)

**1ஆவது பிறந்ததின வாழ்த்தும் அழைப்பும்**




சிறீகாந்தன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர், வீதி அபிவிருத்தித் திணைக்களம், மன்னார்)- வனிதா தம்பதியரின் செல்வப் புதல்வன் செல்வன் சி.யனோஜ் தனது முதலாவது பிறந்த தினத்தை 115,சிவப்பிரகாசம் வீதி, வண்ணார் பண்ணையில் உள்ள தனது அத்தை வீட்டில் (ஸ்ரீரங்கநாதன்-கோமளராணி) வெகு சிறப்பாகக் கொண்டாடுகிறார். இவரை அவரது குடும்பத்தாரும் உறவினர்களும் வாழ்த்துவதோடு நாளை (18.11.2010) வியாழக்கிழமை பி.ப.3.30 மணியளவில் நடைபெற இருக்கும் பிறந்த தின நிகழ்வில் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்).

115, சிவப்பிரகாசம் வீதி, வண்ணார்பண்ணை.

வாழ்த்துவோர்: சிறீகாந்தன்-வனிதா.

(105994)

**பாராட்டி வாழ்த்துகிறோம்**



**கனகசபாபதி பாலசபேஷ்**

(வணிகக் கல்வி ஆசிரியர்)

16.11.2010இல் B.M.I.C.H இல் நடைபெற்ற 7ஆவது பட்டமளிப்பு விழாவில் (H.N.Dip-in-ACC) பட்டம் பெற்றமையை இட்டு அவரை வாழ்த்துகிறோம். அவர் மேலும் உயர் கல்விப் பட்டங்கள் பல பெற வேண்டும் எனவும் இறை அருளை வேண்டுகிறோம். அவருடைய நல்ல எதிர்காலத்துக்கு எமது நல்லாசிகள்

ஆசி கூறி வாழ்த்துபவர்கள்

- அப்பா (ஓய்வு நிலை ந.ப.நோ.கூ.சங்.காசாளர்)
- அம்மா
- மாமா (ஓய்வுநிலை - Govt.Audit Dept.)
- அத்தை (ஓய்வுநிலை S.L.P.S)
- பெரிய அண்ணா+அண்ணி+பிள்ளைகள் (சுவிஸ்)
- சின்ன அண்ணா (SP.Trd.Eng)
  சின்ன அண்ணி (B.A)
  +
  பிள்ளைகள்
- அபிஷாயினி-(அன்பு மருமகள்)
- அன்பு அம்மம்மா
- பெரியமாமா+அத்தை+பிள்ளைகள் (கனடா)
- சின்ன மாமா (யா/பல்கலைக்கழகம்)
  +
  சின்ன அத்தை+மச்சாள்மார், மச்சான்மார்
- பெரிய அன்ரி+சித்தப்பா+தம்பி+தங்கை (ஜேர்மனி)
- சின்ன அன்ரி+பிள்ளைகள்
- தம்பி தார்மீகன் (கனடா)
- ஆசை அன்ரி (கனடா)
- ஏழாலை சித்திமார்+அண்ணா+அக்கா+ குமார் அண்ணா குடும்பம்+பிள்ளைகள்.
- சந்தை மாமா.

(105966)

**STUDY IN U.K.**




★ கல்லூரிக் கட்டணம் அதிகூடிய தொகை 2000 பவுண்ஸ் மட்டுமே.
★ சேவைக்கட்டணம் முற்றிலும் இலவசம்
★ மிகக் குறைந்த செலவில் Sponsor வசதிகள்
★ பிரபலமான சட்டத்தரணிகளின் வழிகாட்டல் உதவியுடன்
★ குடும்பமாகக் கல்வி பயிலக் கூடிய வாய்ப்புகள்
★ லண்டனில் தரம் வாய்ந்த கல்லூரிகள்/பல்கலைக்கழகங்களில் அனுமதிகள்.
★ Visaவுக்கான 100% உத்தரவாதம்.
★ மிகக் குறுகிய காலத்தில் பயணம் செய்யலாம்.
★ Interview இன்றி 3 நாள்களுக்குள் அனுமதி.

தொடர்பு: 077 0871616

அலுவலக முகவரி:
245, பலாலி வீதி,
கந்தர்மடம்,
(Baby Photo அருகில்)

அலுவலக நேரங்கள்:
திங்கள் - சனி வரை
காலை 9 - பிற்பகல் 3.30

**BLAKE HALL COLLEGE**

Blake Hall College was established as a result if the to help students achiveve personal career dreams through affordable graduate studies in the UK.

**SPOT ADMISSION**

**No Need IELTS / Intake Jan 2011**

தேவையான ஆவணங்கள் : O/L, A/L Certificates, Passport

UNDERGRADUATE COURSE
- BA Hons Business Management
- BA Hons Business Marketing
- BA Hons Business Accounting

TOP - UP COURSES
- BA Hons Business
- BSc Hons Business

இறுதி சந்தர்ப்பம்
UK இல் கல்வி தொடர
திகதி : 20th Nov 2010
நேரம் : 9 am - 12 pm
முன் பதிவுகளுக்கு

JAFFNA, BRANCH 82/12 A, CHETTY STREET NALLUR.
Phone:- 0774454646/0777849853

EUROPEAN TECHNOLOGY &BUSINESS COLLEGE
No. 22A,Frankfort Place,Bambalapitiya, Colombo -04,Srilanka.
Tel : 011 2508443 / Mob : 0777 849 853,
Web : www.etbclanka.com / E-mail : etbc@etbclanka.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கு ஆசிரியர் இடமாற்றங்கள் மறு அறிவித்தல் வரை இடைநிறுத்தம்

திருகோணமலை,நவ.17

கிழக்கு மாகாணப் பாடசாலை ஆசிரியர்களுக்கான சகல இடமாற்றங்களும் மறு அறிவித்தல் வரை கிழக்கு மாகாண ஆளுநரின் பணிப்புரைக்கமைய இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளன என, கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் எச்.கே.யூ.கே. வீரவர்தன தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாணத்திலுள்ள சில கல்வி வலயங்களில் அடிக்கடி இடம்பெற்றுவரும் ஆசிரியர் இடமாற்றங்களால் கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டு வருகின்றன என ஆளுநரிடம் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இம்முறைப்பாடுகளை அடுத்தே ஆளுநர் இடைநிறுத்தத்துக்கான பணிப்புரையை விடுத்துள்ளார் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கிழக்கில் உள்ள சில கல்வி வலயங்களில் தேவைக்கு மேலதிகமாக ஆசிரியர்கள் கடமையாற்றுகின்றனர். அதனால் பாடசாலைகளில் ஆசிரியர் சமமின்மை நிலவுகிறது. இதனால் பல்வேறு பிரச்சினைகள் நிலவுகின்றன என்றும் ஆளுநரிடம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதேவேளை, நகர்ப்புறங்களில் உள்ள சில பாடசாலைகளில் தேவைக்கு மேலதிகமாக ஆசிரியர்கள் உள்ளனர். இதனால் பலர் வேலை எதுவுமின்றி இருக்கின்றனர். அதே வேளை, கிராமப்புறங்களில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகிறது. இப்பற்றாக்குறையால் கிராமப்புற ஆசிரியர்கள் வேலைப்பளுவால் அவதிப்படுகிறார்கள் என்று மாகாணக்கல்வித் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் மூலம் தெரியவந்துள்ளது.

இதையடுத்து தேவைக்கு மேலதிக மாகவுள்ள ஆசிரியர்களை பற்றாக்குறை நிலவும் வலயங்களுக்கு இடமாற்ற விசேட செயற்றிட்டமொன்றை மாகாணக்கல்வித் திணைக்களம் மேற்கொண்டுள்ளது.

ஆசிரியர் சமமின்மையை உடனடியாக நீக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என்றும், இதன் பின்னரே ஆசிரியர் இடமாற்றங்கள் மேற்கொள்ளப்படுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தாம்போதியின் பால நிர்மாணம் மந்த கதியில்; மக்கள் விசனம்

கல்முனை,நவ.17

கல்முனை நகரையும், நாவிதன்வெளி பிரதேச செயலகப் பிரிவிலுள்ள கல்லோயா குடியேற்றக் கிராமங்களையும் இணைக்கும் கிட்டங்கி தாம்போதியின் பால நிர்மாணப் பணிகள் மிகவும் மந்தகதியில் இடம்பெற்று வருகின்றன என விவசாயிகள், பொதுமக்கள், வியாபாரிகள், வாகனச் சாரதிகள் ஆகியோர் விசனம் தெரிவிக்கின்றனர்.

மஹிந்த சிந்தனை வேலைத் திட்டத்தின் கீழ் 18 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்படும் இப்பாலத்தின் நிர்மாணப் பணிகள் யாவும் கடந்த ஒக்ரோபர் 15ஆம் திகதியளவில் பூர்த்தியடைந்துவிடுமென வீதி அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரிகள் தெரிவித்திருந்தனர். எனினும் இதுவரை 25 சதவீதமான நிர்மாணப்பணிகள் கூட நிறைவுபெறவில்லை என்றும் இவர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள்.

ஆயிரத்துக்கு மேற்பட்டோர் நாளாந்தம் பயணிக்கும் இவ்வீதியைத் தோண்டி தற்காலிக வீதி அமைக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் ஏற்படும் மழை வெள்ளம் காரணமாக இவ்வீதி முற்றாகச் சேதமடைந்துவிடும் என்றும் பிரதேச விவசாயிகளும், பொதுமக்களும் அச்சம் தெரிவிக்கின்றனர்.

எனவே, எதிர்வரும் மழை காலத்துக்கு முன்னர் இப்பால நிர்மாணப்பணிகள் துரிதமா கப் பூர்த்தியடைவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டுமென விவசாயிகளும் பொதுமக்களும் கோரிக்கை விடுக்கின்றனர். (ளி)

# மின்மாற்றி விழும் அபாயம்

திருகோணமல,நவ.17

திருகோணமலை லவ்லேன் முச்சந்தியில் உள்ள மின்மாற்றி விழக்கூடிய அபாய நிலை யில் உள்ளது.

ஏற்கனவே வாகனம் ஒன்றினால் மோதப்பட்டு இந்த மின்மாற்றியில் வெடிப்பு ஏற்பட்டுள்ளது. இதனை உடனடியாக சீர்படுத்தாவிட்டால் மின் மாற்றி சரிந்து பாரிய விளைவுகளை ஏற்படுத்தக்கூடும் என மக்கள் அச்சம் தெரிவிக்கின்றனர். இம்முச்சந்தியில் மக்கள் நடமாட்டம் அதிகமாகும். அத்துடன் வர்த்தக நிலையங்களும் உள்ளன. (ளி)

# எமது நாட்டின் பிரச்சினைக்கு சர்வதேச தலையீடே காரணம்

## கிழக்கு ஆளுநர் தெரிவிப்பு

மட்டக்களப்பு, நவ.17

பயங்கரவாதம் தோற்கடிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் இலங்கையை ஆசியாவிலேயே முன்மாதிரியான நாடாக உருவாக்குவதற்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ போராடி வருகின்றார். எனினும், அந்நிய நாடுகளின் தலையீட்டாலும், அரசியல் கட்சிகளின் செயற்பாடுகளாலும் நாட்டில் பல்வேறு பிரச்சினைகள் எழுந்துள்ளன என கிழக்கு மாகாண ஆளுநர் ரியர் அட்மிரல் மொஹான் ஜயவிக்கிரம தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு, கன்னன்குடா மகா வித்தியாலயத்தில் இடம்பெற்ற பொதுக்கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து அங்கு பேசுகையில், அனைத்து வளங்களையும் கொண்ட அழகான நாடு இலங்கை. இங்கு யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. இந்நிலையில் இந்நாட்டை ஆசியாவிலேயே ஆச்சரியம் மிக்க நாடாக உருவாக்க ஜனாதிபதி நடவடிக்கை எடுத்து வருகின்றார்.

நாம் அனைவரும் ஒன்றாக வாழவேண்டும். மொழி ஒன்றே எமக்குப் பிரச்சினையாக உள்ளது. அதனைக் கற்றுக்கொண்டால் எந்தப் பிரச்சினையும் இல்லை. அந்நிய நாட்டுத் தலையீடும், எமது அரசியல் கட்சிகளுமே எம் நாட்டின் பிரச்சினைகளுக்குக் காரணமாக உள்ளன. அவை அனைத்தும் வெகு விரைவில் வெற்றி கொள்ளப்படும்.

30 வருடகால யுத்தத்தால் அனைத்தையும் இழந்த இப்பகுதி, அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றது.

இந்தக் கல்வி வலயத் திறப்பு விழாவும் இப்பகுதி மக்களின் நீண்ட காலப் பிரச்சினைக்குத்




தீர்வாக அமையும். உப கல்வி வலயம் தற்காலிகமே தவிர நிரந்தரமானது அல்ல. விரைவில் அது கல்வி வலயமாகத் தரமுயர்த்தப்படும் என்றார். (ளி)

# தகவல் தொழில்நுட்ப மத்திய நிலையங்கள்

கண்டி, நவ.17

மத்திய மாகாணத்தில் தெரிவு செய்யப்பட்ட 47 இடங்களில் தகவல் தொழில் நுட்ப மத்திய நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன.

இதற்காக மாகாணசபை 50 லட்சம் ரூபா நிதியை ஒதுக்கியுள்ளது.

முதலில் யட்டிநுவர, உடுதும்பரை, லக்கல, பள்ளேகல, அக்கரணை, நாவலப்பிட்டி, குண்டசாலை மற்றும் குன்னேபான ஆகிய இடங்களில் இந்த மத்திய நிலையங்கள் அமைக்கப்படும் - என மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க தெரிவித்தார். (ளி)

# காதலனுடன் மலையுச்சிக்குச் சென்ற மாணவி பின்னர் 400 அடி பள்ளத்திலிருந்து சடலமாக மீட்பு

## காதலர்கள் பயணித்த ஓட்டோவின் சாரதி கைது

கொழும்பு, நவ.17

காதலனுடன் ஹுன்னஸ்கிரிய நக்கிள்ஸ் மலைத் தொடரில் உள்ள சிறு உலக முடிவைப் பார்வையிடச் சென்ற பேராதனைப் பல்கலைக்கழக மாணவி ஒருவர், 400 அடி பள்ளத்தாக்கில் பாறைகளுக்கு இடையிலி




ருந்து சடலமாக மீட்கப்பட்டார் என உடு தும்பர பொலிஸாரும், நக்கிள்ஸ் வனப் பாதுகாப்பு அதிகாரிகளும் தெரிவித்தனர்.

தெல்தெனிய - வெல்லேதொட்ட, உடவள பிரதேசவாசியான 19 வயது யுவதியே இவ்வாறு மர்மமரணத்தைத் தழுவிக் கொண்டுள்ளார்.

சம்பவம் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றுள்ளது. இது குறித்து உயிரிழந்த மாணவியின் காதலன் பொலிஸாருக்கு அளித்த வாக்குமூலத்தில்,

''நாங்கள் மலை உச்சியை அடைந்த பின் எனது காதலி இயற்கை அழைப்புக்காக ஒதுங்கினார். அவர் நீண்ட நேரமாகத் திரும்பி வராததால் நாலாபுறமும் தேடிப்பார்த்தேன். அது பலனளிக்காது போனதால் பொலிஸில் முறையிட்டேன்'' எனத் தெரிவித்துள்ளார்.

யுவதியின் தாயார் பொலிஸாருக்கு அளித்த வாக்கு மூலத்தில்;

''சம்பவதினம் பிரத்தியேக வகுப்பொன்று உள்ளதெனக் கூறி எனது மகள் அதிகாலையிலேயே வீட்டைவிட்டுப் புறப்பட்டார். அவருக்கு பகல் சாப்பாட்டைக் கட்டிக் கொடுத்தேன்.

அதனை வாங்கிக் கொண்ட மகள் எனது பாதங்களில் விழுந்து வணங்கியபின் சற்றுநேரம் என் முகத்தை உற்றுநோக்கிவிட்டு பின்னர் மௌனமாக வீட்டைவிட்டு வெளியேறினார்'' எனத் தெரிவித்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் காதலர்கள் பயணம் செய்த ஓட்டோவின் சாரதி சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளார். பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர்.

# நுவரெலியாவில் 121,260 மரக்கன்றுகள் நடுகைசெய்யும் திட்டம் நேற்றுமுன்தினம் ஆரம்பம்

நுவரெலியா,நவ.17

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் இரண்டாவது பதவியேற்பை முன்னிட்டு நுவரெலியா மாவட்டத்தில் 121,260 மரக்கன்றுகளை நடும் திட்டம் நேற்றுமுன்தினம் ஆரம்பமானது.

மாவட்ட அரச அதிபர் டி.பி.ஜி.குமாரசிறி தலைமையில் நேற்றுமுன்தினம் காலை ஆரம்பிக்கப்பட்ட இந்நிகழ்வில் முதற்கட்டமாக நுவரெலியாவிலுள்ள ஜனாதிபதி மாளிகையைச் சுற்றி 65 மரக்கன்றுகளும், நகரைச்சுற்றி 24 மரக்கன்றுகளும் நடப்பட்டன.

இதன் அடுத்தகட்டம், ஜனாதிபதி பதவியேற்கும் தினமான 18 ஆம் திகதி முன்னெடுக்கப்படும். இதன்போது அரச காரியாலயங்கள், பாடசாலைகள் மற்றும் சிவனொளி பாதமலைப் பிரதேசம் ஆகிய பகுதிகளில் மரக்கன்றுகள் நடப்படும் என அரசஅதிபர் தெரிவித்தார்.

இதேவேளை, நீர்மின்துறை பிரதியமைச்சர் பிரேமலால் ஜயசேகர நேற்றுமுன்தினம் மு.ப.10 மணிக்கு மஸ்கெலியா மின்சார சபைக்கு உரித்தான காணியில் 500 யூகலிப்ட்ஸ் மரக்கன்றுகளை நட்டு வைத்தார்.

இதன்போது பிரதியமைச்சர் கூறியவை வருமாறு:-

எதிர்காலத்தில் நாட்டுக்குத் தேவையான மின்கம்பங்களைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் இந்த மரக்கன்றுகள் நடப்படுகின்றன. இப்போது வெளிநாடுகளிலிருந்தே கம்பங்கள் தருவிக்கப்படுகின்றன. இதற்கு பெருமளவு பணம் செலவிடப்படுகின்றது - என்றார். (ளி)

# கொத்மலையில் வீட்டுக்குத் தீ

கொழும்பு,நவ.17

கொத்மலை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பிரதேசத்தில் வீடொன்றுக்கு இனந்தெரியாதவர்களால் தீ வைக்கப்பட்ட சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதன் காரணமாக வீட்டுக்கு பலத்த சேதம் ஏற்பட்டுள்ளதுடன் பெறுமதியான பொருள்களும் எரிந்து நாசமாகியுள்ளன எனக் கொத்மலை பொலிஸார் தெரிவித்தனர்.

விசாரணைகளை மேற்கொண்டுவரும் பொலிஸார் சந்தேகத்தின்பேரில் இருவரைத் தேடி வருகின்றனர்.

பொலிஸாரால் தேடப்பட்டு வரும் இந்த இருவரும் பிரதேசத்திலிருந்து தலைமறைவாகிவிட்டனர் என பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ளி)

# மீள் பயிர்ச் செய்கை

கண்டி,நவ.17

மத்திய மாகாண விவசாயத் திணைக்களம் மற்றும் கண்டி மாவட்ட கமநல சேவைத் திணைக்களம் ஆகியவற்றின் ஏற்பாட்டில், கண்டி நகரை அண்மித்த பகுதிகளிலுள்ள 85 ஏக்கர் வயல்களில் மீள்பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது - என விவசாயத் திணைக்கள உதவி ஆணையாளர் பி. முத்துபண்டார தெரிவித்தார்.

'நாம் பயிரிடுவோம் நாட்டை கட்டி யெழுப்புவோம்' திட்டத்தின் கீழ் நகர விளைநிலங்களும் மீள்பயிர்ச்செய்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன - என அவர் மேலும் தெரிவித்தார்.

# கிராம எழுச்சித் திட்டத்தின் கீழ் அக்குறணையில் வீதி அமைப்பு

கொழும்பு, நவ.17

அக்குறணை பிரதேச சபைக்கு உட்பட்ட தெல்கஸ்தென்ன - பாணகமுவ பிரதேசத்தில் கிராம எழுச்சித்திட்டத்தின்கீழ் புதிய பாதையொன்றை அமைக்கும் பணிகள் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பிக்கப்பட்டன.

அக்குறணை பிரதேச சபை உறுப்பினர் எம்.ஐ.எம். இக்ராம் திட்டத்தை ஆரம்பித்து வைத்தார்.

இது தொடர்பில் அவர் கூறியவை வருமாறு:-

பிரதேச சபைப் பிரிவிற்கு உட்பட்ட மிகவும் பின்தங்கிய கிராமமான பாணகமுவ பிரதேச மக்கள், முறையான வீதி வசதியற்ற காரணத்தால் பலத்த சிரமங்களுக்கு முகம் கொடுத்து வந்தனர்.

கிராம எழுச்சித் திட்டத்தின் கீழ் 10 லட்சம் ரூபாவுக்கு மேல் ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தைச் செயற்படுத்துவதன் மூலம் நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் நன்மையடையும் - இவ்வாறு இக்ராம் தெரிவித்தார். (ளி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விச்சுடர்
## O/L மாவட்ட வலம் - 2010
க.பொ.த சாதாரண தர மாதிரி வினாத்தாள்

## English Language - Time - one hour

**Test: 01**
Complete the following advertisement. Use a suitable word from the box. The first one is done for you.

blocks, lease, hairstylists, prior, restaurant, jug, appointment, space, food, telephone, cordial

Beautiful porcelain (1) jug free with every large (2)................ bottle at SUPER STORE

PROPERTY SALES
Minuwangoda Limited Number of (3) ............ Hurry (4)............. 0456347511
For (5) ...................... reservation.

TRIMMERS
Unisex (6).............. Telephone 0652223457 for (7)..................

Special Sea (8) ............ Open daily from 07.00 a.m. to 10.00 p.m. Superstone (9) ............

Shop / office (10)............. Rent or (11)............ 1600 sq. ft. available Telephone - 0716534160,075 6141423

**Test: 02**
Find the required information from the invitation and write them in the space provided. The first one is done for you.

1) Date : 10th of November
2) Time : ..............................
3) Event : ..............................
4) Invitee : ..............................
5) Host : ..............................
6) Venue : ..............................

The Principal and the staff
of
**BT/ HIndu College, Batticaloa**
will be pleased to see
**Mr. M. Kanapathippillai**
Zoal Director of Education, Batticaloa
as the Chief Guest
at their Annual Prize Giving
on 10th of November 2010 at 3.00 p.m.
in their school Main Hall
Please be in your seats by 2.00 p.m.

**Test: 03**
Write five sentences about the picture.



..............................
..............................
..............................
..............................
..............................

**Test: 04**
Read the following advertisement and answer the questions given below.

**POST OF SECRETARY**
Applications are invited for the post of secretary. Applicants should have a sound educational background, a good knowledge of English and computer literacy such as Word, Excel, Power Point, e - mail and internet.

Experie nce in handling correspondence independently and should be able to work without supervision.
Apply within 10 days to reach us:
H.R. Manager,
Ginitota Plywood Manufactures Pvt. Ltd,
No. 282, Galle Road.

1) Who is advertising? ..............................
2) What is the name of the company? ..............................
3) What do they manufacture? ..............................
4) What types of computer knowledge should the applicant have? ..............................
5) What are the modern communication methods mentioned? ..............................

**Test: 05**
Complete the dialogue using the given utterances. Write the correct letter in the blanks. The first one is done for you.

Thanoj: Hello, Good morning.
Dhilluksh: 1) Good morning.
Thanoj: Where are you going in a hurry?
Dhilluksh: 2)..............................
Thanoj: 3)..............................
Dhilluksh: My father is in the hospital.
Thanoj: 4)..............................
Dhilluksh: 5)..............................
Thanoj: I see. Look after him carefully.
Dhilluksh: 6)..............................
Thanoj: Bye

1. What's wrong with him?
2. Ok, Thank you. Good bye.
3. to the hospital.
4. Why?
5. He's suffering from Dengue fever.

நன்றிக்கும் பாராட்டுக்குமுரிய ஆசிரியர்
திரு.கே.சந்திரகுமாரன்,
உதவிக் கல்விப் பணிப்பாளர், மட்டக்களப்பு.
தொ.பே: 065-2226586
திரு.வி.பி.பிரெண்ஸ்லி SLTS - I
தொ.பே: 065-2225701

G.C.E.(O/L)
வலம்-5
வெளியீடு-3
மட்டக்களப்பு

**Test: 06**
Write a paragraph on one of the following. Use about 50 words.
1) My favourite teacher
2) The game I like best

**Test: 07**
Read the following text written by Nimal and answer the questions.

We went to Welimada during our holidays. On our way we saw steps like paddy fields in hills, gem mines and tea estates. It was very cold and misty in Welimada. We stopped at Belihul Oya and saw monkeys.

In Welimada we saw a lot of birds. They were jungle fowls, sparrows, pigeons and sun birds. My mother helped me to identify the birds. The Jungle fowls and pigeons are endemic birds of Sri Lanka. We saw beautiful flowers, butterflies and tall trees. People grow vegetable like carrots, beans, cabbage and raddish in their gardens. I enjoyed the trip very much.

1) Where did Nimal go during his holidays? ..............................
2) What did they see on the way? ..............................
3) Where did he see some monkeys? ..............................
4) Who helped Nimal to identify birds? ..............................
5) Name two birds which are endemic to Sri Lanks? ..............................

**Test: 08**
You are the Secretary of the Health Club in your school. You have decided to invite the Public health Inspector to speak about Dengue fever. Write a notice informing Grade 11 students to participate. Use about 40 - 50 words.
Include the following:
- The day, date, time, Venue
- Purpose of inviting him
- Topic of the speech

## English Language - II Time - 2 hours

**Test: 09**
Read the following story. There is an incorrect word. It is Underlined. Write correct word in the space provided. The first one is done for you.

Rajah and Mohan is paddy farmers. ( are )
They has been living in a remote ( )
village away at a busy city close ( )
to the capital. Rajah own 51% of ( )
the entire paddy land, a rest belongs ( )
to mohan and her family members. ( )
They are trust each other in everything. ( )
Ones looks after the financial side, the ( )
other do not touch any money. At the ( )
beginning they had have very small field ( )
but now they are blessed on 2000 acres. ( )

**Test: 10**
Read the text given below and find out single words for the meanings given. write them in the spaces provided.

Sinharaja is a forest with a high degree of bio-diversity. It has a great many species of animals, birds and insects. Every scrap of land is covered with vegetation of some sort. The trees have slender trunks which break out in a eluster of branches near the top. Thier trunks are covered with climbing plants and rope like creepers. Reache is studying mosquitoes, spiders, butterflies, ants and reptiles are frequent visitors to this rich storehouse of specimens. Today, the Sinhajara is faced with many problems. Rare birds, butterflies and reptiles are lost to Sinharaja because of unscrupulous collectors of wild life specimens. Most protected species of butterflies and reptiles are smuggled out of the country. Many endemic plants to are lost in the some manner.

(0) Group of animals within a family. ........species...........
1) Plants found in a particular environment. ..............................
2) Plants that grow, winding itself round other plants. ..............................
3) Not honest or fair. ..............................
4) Taking goods secretly and illegally out of a country. ..............................
5) Regularly found in a particular country or area. ..............................

**Test: 11**
Use the word given at the end of each line to form a word that fits in the space in the same line. One has been done for you.

All computers, no matter how larger or (o) ....Powerful.... they are, work in (1) ...............the same way. But their functions (2) ......................... according to the nature of the field of activities. Being able to obtain (3) ............................ is (4) ............................ an aid to education. Computers are Playing an (5) .......................... role in teaching and learning. An (6) .................... Computer programme can teach students and test their (7) ................. and progress by adjusting its speed. Computers are very (8) .................... in controlling the (9) .......................... and flying of air crafts. Similary they control the (10) ........................ of certain models of motor vehicles also.

power, basic, difference, inform, obvious, importunce, educate, know, help, navigate, perform

**Test: 12**
Read the poem and answer the questions.

**THE MOTORWAY WITCH**

Here comes the witch
She's not on her broom
But riding a motorbike
Going Zoom.... Zoom.......!

She's wearing a helmet
Instead of a hat

Plaase, no overtaking
For I should explain
With her speed-crazy cat
She prefers the fast lane.


She banished her broom
For that was her wish

(21ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தியாகத் திருநாளாம் ஹஜ் பெருநாள்

**இன்று (17.11.2010) புதன்கிழமை முஸ்லிம்களின் ஹஜ் பெருநாளாகும். அதனையொட்டி இக்கட்டுரை பிரசுரமாகின்றது.**



நபி இப்றாஹீம் அலைஹிஸ் ஸலாம் அவர்களும், அவர்களது குடும்பமும் இறை நேசத்தை, அன்பைப் பெறுவதற்காக செய்த தியாகத்தை நினைவு கூர்ந்து உலக முஸ்லிம்கள் ஒன்றுபட்டு கொண்டாடும் நினைவு கூரும் நன்னாளே ஹஜ் பெருநாளாகும்.

றமழான் நோன்பிற்குப் பின் கொண்டாடும் ஈதுல் பித்ர் ஈகைத் திருநாளுக்கு அடுத்ததாக இரண்டாவதாக முஸ்லிம்கள் கொண்டாடும் நன்னாள் இதுவாகும். உலக முஸ்லிம்கள் புனித மக்கா மாநகரிலே ஒன்று கூடி இறைவழிபாட்டில் ஈடுபட்டு இறையன்பைப் பெறுவதையும் உலகின் நாலா பாகங்களிலும் வாழும் முஸ்லிம்கள் ஆங்காங்கே தியாகத் திருநாளை கொண்டாடுவதையும் இன்றைய தினம் சிறப்பான அம்சமாகம பார்க்க முடியும்.

மனிதனைப் படைத்த ஏக இறைவன் மானிட இனத்தின் அனைத்துத் துறைக்கும் நேரிய வழிகாட்டலை வழங்கியுள்ளதை அவதானிக்க முடியும்.

இன்பமும், துன்பமும் மானிட வாழ்க்கையில் பிரிக்கமுடியாத இருகூறுகளாகும். இதன் மத்தியிலே உலகின் நல்லவனாக மனிதன் வாழ்ந்து இறையன்பை நேசத்தை பெறவேண்டிய தேவை உள்ளது.

படைத்த இறைவனுக்காக எதனையும் தியாகம் செய்வதற்காக மனிதன் தன்னை எந்நேரமும் தயார்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதற்குச் சிறந்த வழிகாட்டலாக நபி இப்றாகிம் (அலை) அவர்களது வாழ்க்கை அமைந்துள்ளது.

இஸ்லாமிய வருடக் கணிப்பில் இறுதி மாதமாக அமையப் பெற்றுள்ள துல்ஹஜ் மாதம் சிறப்பான மாதங்களில் ஒன்றாகத் திகழ்கின்றது. இந்த மாதத்தில் செய்கின்ற நல்ல செயல்கள் இறைவனிடத்தில் பலமடங்கு கூலிகளை பெற்றுத்தருகின்றது. பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன.

துல்ஹஜ் மாதம் நினைவு கூரப்படுவதற்கு நபி இப்றாகிம் (அலை) அவர்கள் மனைவியையும், குழந்தை இஸ்மாயிலையும் அல்லாஹ்வின் கட்டளையை நிலைநிறுத்துவதற்காக பாலைவனத்தில் மனித சஞ்சாரமற்ற பகுதியில் தட்டத்தனியாக விட்டு அகன்றதன் மூலம் அவர்களும், அவர்களது குடும்பமும் செய்த தியாகம் உலக வரலாற்றில் உண்மைப்படுத்தப்பட்டு வாழையடி வாழையாக நினைவு கூரப்படுகின்றது.

இஸ்லாம் மனி தன் மீது விதித் துள்ள ஒவ்வொரு கடமையும் மனிதனை புனிதனாக்குகிறது. தொழுகையானது மானக் கேடான விடயங்களில் இருந்து முஸ்லிமைத் தடுக்கின்றது. பாதுகாக்கின்றது. நோன்பு இறையச்சமுள்ள வனாக 'தக்வா' உள்ளவனாக மனிதனைப் பயிற்றுவிக்கின்றது. புனித ஹஜ் கடமையை நிறைவேற்றும் ஒரு முஸ்லிமைப் பாவத்தை விட்டு பரிசுத்தப்படுத்தி அன்று பிறந்த பாலகனைப் போன்று மாற்றியமைக்கின்றது.

ஹஜ் கடமை மனித வர்க்கத்தை சமப்படுத்துகிறது. ஹஜ் பயணத்தில் எந்தவிதமான ஏற்றத்தாழ்வுகளும் கிடையாது. பணக்காரன், ஏழை, படித்தவன், படிக்காதவன், அரசன், ஆண்டி, அரபி, அஜபி, வெள்ளையன், கருப்பன் என்ற எத்தகைய பாகுபாடும் கிடையாது. எல்லோரும் அல்லாஹ்வின் அடிமைகள் என்ற அடிமைத்தனத்தை நிரூபிக்கக் கூடியது தான் புனித ஹஜ் பயணமாகும்.

புனித ஹஜ் கடமையை நினைவு கூர்ந்து முஸ்லிம்கள் தியாகத் திருநாளாம் ஹஜ் பெருநாளை இன்றைய தினம் கொண்டாடுகின்றார்கள்.

ஒற்றுமை, சமத்துவம், சகோதரத்துவம், விட்டுக்கொடுப்பு, தியானம், தியாகம் போன்ற இன்னோரன்ன மனித விழுமியங்களுக்குத் தியாகத் திருநாள் வழிகாட்டுகின்றது.

மௌலவி
எம்.எஸ்.ஏ.எம்.முபாறக் (B.A)
அதிபர்,ஒஸ்மானியாக் கல்லூரி

மானிட விழுமியத்தையும், மனிதாபிமானத்தையும் பயிற்றுவிக்கும் புனித மார்க்கம் இஸ்லாத்தின் பிரகாசம் உலக அமைதிக்கும், இனங்களுக்குமிடையே பரஸ்பர நல்லுறவிற்கும் வழிகாட்ட ஏக இறைவன் அல்லாஹ்வை இந்நன்னாளில் பிரார்த்திப்போம்.

---

And there on the pillion
Is sitting her cat.

It wouldn't..... Zoom..... Zoom......
But only swish..... swish!

By : Max Fatcher

1) On which dose the witch go?
..............................................................................................
2) What is she wearing instead of a hat?
..............................................................................................
3) Who is on the pillion?
..............................................................................................
4) What does it mean by "She banished her broom."?
..............................................................................................
5) Explain the following.
   a) Zoom......... Zoom.........!
   ..............................................................................................
   b) swish........ swish!
   ..............................................................................................

**Test: 13**

Read the following text. Then select suitable words from the list given below to complete it. There are two extra words.

Have you ever stood at the seaside watching the waves come in? The winds blowing over the surface (a) .................... the sea are often responsible for (b) ............... Many waves travel long distance across the (c) .......... for example, a strong wind blowing (d) ..................... Antarctica can send a wave right (e) ................ the Pacific Ocean until it breaks (f) ..................... the shores of America and get the (g) ..................... itself does not move very far.

(h) ........................ a skipping rope is held at (i) ...................... end and given a shake, a wave (j) .................... along the rope. The wave runs (k)............but the rope does not. The same sort of thing (l) .................. with waves in the sea. However the wonderful happenings in the Ocean are breath taking.

across , if, Oceans, on, run, water, in, around, forward, of, one, runs, waves, happens.

**Test: 14**

Your religion teacher took you to the home of your former principal under field trip - "Honouring Senior Citizens." Write a letter to your uncle in England about this field trip. Include the following. Use 100-125 words.
- How you went there/who went.
- The way you honoured him/her.
- The way you were treated by him/her.
- What special things you learnt from this trip.

**Test: 15**

Read this text and answer the questions given bellow.

A boat was taking a large number of children from the shore of the island to a ship,when suddenly one of the children pointed to the white waves thrown off the front of the boat as it cut through the water. All the children, who had never been in a boat before, rushed forward together in spite of the warning shouts of the schoolmaster with them. Their weight pressed the front of the boat under the water, a wave came, and in a second the boat sank and they were all left struggling in the water.

A second boat was sent at once from the ship to the place of the accident. Those members of the ship's crew who were on the shore swam out to save as many children as they could. One of the crew, who was fishing from some rocks near the camp, stopped only to put his wrist - watch on a rock and swam out fully clothed to help.

One by one all the children were collected up and put into the boat, some still alive, others apparently dead. As soon as the last body had been lifted in, the boat went to the camp of tha ship owner on the shore where the children who were still unconscious were given first aid by the crew of the ship.

Until late that night the battle went on for the live of the children. One by one they recovered and began to breathe again without help. At last only two and the schoolmaster had not recovered and for them all hope was over.

As soon as the news of the accident reached the village on the other side of the island the children's parents and friends had hurried to the camp of the ship's owner to ask for their own children and to help. All through the hours of darkness the camp was full of stranger and all the valuable goods in the tents were completely open and unguarded. But not a single artcle was missing in the morning. All the visitors to the camp were completely honest.

Unfortunatly this good record was spoill by one thing: the watch the seaman had left behind on the rocks when he went to save the children was stolen while he was in the water.

Next day the ship's owner met the village priest and said. 'It was terrible about the children.' The priest replied, 'It was worse about the watch'.

1) Why did the children rush forward together?
..............................................................................................
2) What made the boat sink?
..............................................................................................
3) How many lives were lost as a result of the accident?
..............................................................................................
4) Why was the camp full of strangers all night?
..............................................................................................
5) Write down the sentence in the text which means 'that to do something wrong is worse than to die"
..............................................................................................

**Test: 16**

Write on one of the following. Use about 200 words.

1) You have passed an English text conducted by the Oxford University, UK and obtained the highest marks. You can select one of the following.
   Free education in UK after your O/L Examination, migration to UK with your family, permission to establish a business in London.
   What would you choose? Explain:
   - Your personal view about migration.
   - Your choice.
   - Say why you decided so.

2) Write an article to the Children's Corner of one of the weekend newspapers in Sri Lanka on "Return of Peace a sign of Prosperity."
   - Why peace is important for development.
   - the importance of peace in a multi racial country like Sri Lanka.
   - President's iniciative in the development in war affected areas.

3) Write a speech on "The Importance of IT and English Education in Our Country."
   - Your views about 'English as a Life Skill' - Presidential Initiative that is being implimented in our schools.
   - The part your English teacher played to improve your English.
   - What will your English knowledge do to you in the future.

4) Aliens and flying sourcers are a widely spoken topic all over the world today. Imagine that you happened to be captured by aliens while you were going into the forest to collect some valuable timber plants to be planted in the school compound during the rainy season. Start writing your experience in the following manner.

   Last Saturday evening I went into the forest alone. I was carefully digging out small plants and packing them in small bags. Suddenly I saw a flash of light coming towords me ............

(End)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துகின்றோம்



இன்று (17.11.2010) புதன்கிழமை அகவொளி அனுசரணையுடன் அயர்லாந்து தேசிய பல்கலைக் கழகத்தால் நடத்தப்படும் உள ஆற்றுப் படுத்தல் டிப்ளோமா கற்கை நெறியில் (Dip.in Counselling) தனது இரண்டாவது பட்டத்தினைப் பெற்றுக்கொள்ளும் எமது ஆசிரியரும் யாழ்.எய்ட் நிறுவனத்தின் திட்ட அலுவலருமாகிய

**திருமதி றஜீபன் தர்மினி** அவர்களை மேன்மேலும் பல பட்டங்களைப் பெறவும், பல புதிய பட்டதாரிகளை உருவாக்கவும் துணையாக வேண்டுமென வாழ்த்தும்...

யாழ்.பல்கலைக்கழக இறுதியாண்டு மாணவர்கள் (வெளிவாரி)

(106101)


## ஜயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 699 திகதி 15-11-2010

வெற்றி எண்கள்

**04 06 25 33 N**

ஜக்பொட் பரிசு ரூ. 13,086,640/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | - | 13,086,640/= | - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 02 | 400,000/= | 800,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 13 | 2,000/= | 26,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 435 | 1,000/= | 435,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 684 | 1,000/= | 684,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 17312 | 60/= | 1,038,720/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 8158 | 40/= | 326,320/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 202973 | 20/= | 4,059,460/= |
| | | மொத்தம் ரூ. | 7,369,500/= |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 08 | 50,000/= | 400,000/= |

ரூபா 50,000 வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| கம்பஹா | 600556494-5-35 |
| கண்டி | 600543183-2-32 |
| வவுனியா | 600554883-6-26 |
| கம்பஹா | 600549774-4-44 |
| கொழும்பு | 600551385-1-21 |
| கண்டி | 600545749-2-42 |
| பதுளை | 600545310-7-17 |
| மாத்தளை | 600543540-4-34 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 7,769,500/=

இந்த வியாழக்கிழமை சுப்பர் ஜக்பொட

ரூ. 13,636,030/=

செம்மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2010 நவம்பர் 18 ஆம் திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை

356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு - 02

தொ.பே: 2333546/7

## கொவிசெத

உத்தியோகப்பூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 781

சீட்டிழுப்பு திகதி 15.11.2010

எழுத்து: **D**

வெற்றி இலக்கங்கள்: **15 21 33 52**

| | பொருத்தங்கள் | பரிசுத்தொகை | வெல்லப்பட்டோர் தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்துடன் 4 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 26,876,978.40 | - |
| 1ம் பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 1,000,000/= | 01 |
| 2ம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 20,000/= | 14 |
| 3ம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 2,000/= | 337 |
| 4ம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 1,000/= | 667 |
| 5ம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 100/= | 16509 |
| 6ம் பரிசு | ஆங்கில எழுத்துடன் ஒரு இலக்கம் சரியாயின் | ரூ. 40/= | 9390 |
| 7ம் பரிசு | 1 இலக்கம் சரியாயின் | ரூ. 20/= | 234286 |
| 8ம் பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் சரியாயின் | ரூ. 20/= | 36870 |

இம்முறை வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 10,070,620.00

அடுத்த வார சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூபா. 27,441,156.80

வெற்றிப் பெறும் சீட்டுகள் 6 மாதங்களுக்குள் மட்டுமே செல்லுப்படியாகும். ஐந்து இலட்சமோ இதற்குக்கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரிச்சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது. பரிசைப் பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

தேசிய லொத்தர் சபை

234/ 2, காலி வீதி, கொழும்பு 03.

தொலைபேசி: 2470662, 2470663 அவசர தேவைக்கு: 2473360

இணையதளம்: www.nlb.lk


## சமய சமூக நல விழாக்கள்

யாழ்ப்பாணம்,நவ.17

சமய சமூக நல விழா கச்சாய் வீதியில் உள்ள நாவலடிப் பிள்ளையார் கோயில் முன்றிலில் இன்று புதன்கிழமை யாழ். பல்கலைக்கழகத்தின் உதவிப்பதிவாளர் யோ.ஜெயக்குமார் தலைமையில் நடைபெறும்.

சமய விழா காலை 8 மணிக்கு ஆரம்பமாகும். இந் நிகழ்வில் விழா நாயகர்களான சமயத்தொண்டர் வே.கெ.தனபாலன், திருமதி கு.கமலாதேவி ஆகியோருக்குப் பொன்னாடை போர்த்துதலும் பொற்கிழி வழங்கலும் நடைபெறும்.

அதனைத் தொடர்ந்து வித்தகம் குரு சுவாமி, க. பரராஜசேகரக் குருக்கள் ஆகியோரின் ஆசியுரையும், சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலையின் இளைப்பாறிய அதிபர் வ.கைலேஸ்வரனின் சொற்பொழிவும் இடம்பெறும்.

அதனைத் தொடர்ந்து பிற்பகல் 1.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ள சமூகநல விழாவிற்குத் தென்மராட்சிப் பிரதேச செயலர் திருமதி அஞ்சலிதேவி சாந்தசீலன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் அ. கயிலாயப் பிள்ளை, சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி அதிபர் க. அருந்தவபாலன், சாவகச்சேரி ஆதாரவைத்தியசாலை வைத்தியர் எஸ். அம்பிகைபாகன், சாவகச்சேரி இலங்கை வங்கி முகாமையாளர் எஸ். சந்திர குமாரன், சென் லிகோரியார் றோமன் கத்தோலிக்க தேவாலயப் பங்குத்தந்தை அருட்பணி. எம்.எல்.தயாகரன் ஆகியோர் கலந்துகொள்வர்.

இறுதி நிகழ்வாக வறுமைக்கோட்டின் கீழ் உள்ள கல்விகற்கும் சிறுவர்களுக்கு வங்கி சேமிப்புப் புத்தகமும், கற்றல் பொதிகளும் வழங்கப்படும்.(ம-ற)

## மோ. சைக்கிள் மோதி மாணவன் காயம்

தென்மராட்சி, நவ.17

பாடசாலை மாணவர் மோட்டார் சைக்கிளினால் மோதுப்பட்டு காயமடைந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கு அருகில் இடம்பெற்றுள்ளது. சங்கத்தானையைச் சேர்ந்த எம். நிதர்சன் (வயது-7) என்பவர் சாவகச்சேரி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்

(204-207)


## Grade Way & Achivement

இளைஞர்களுக்கு ஒரு அரிய சந்தர்ப்பம் சாவகச்சேரியில் அமைந்துள்ள Innovage (Multinational) கம்பனிக்கும் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள கிளைகளுக்கும் முகாமைத்துவத்துக்கான ஆள்சேர்ப்புக்கள் இடம்பெறுகின்றன. நீங்களும் O/L, A/L தகுதி பெற்றவர்களாயின் சர்வதேச ரீதியான பயிற்சியுடன் உயர்வான சம்பளமும் வழங்கப்படும்.

தொ.பே.இல: 0770771377


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் 16.11.2010 நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா (HNDA) பட்டத்தைப் பெறும்

**குணரத்தினம் சஜ்பன்**

அவர்களை மேலும் பல பட்டங்களைப் பெற்று நல்வாழ்வு வாழ மனமார்ந்த பாராட்டுக்களைத் தெரிவித்து வாழ்த்துகின்றோம்.

அரச வீதி, உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய். T.P: 021 2229819 (106096)

குடும்பத்தினர்.

## பாராட்டி வாழ்த்துகிறோம்



நேற்று 16.11.2010 இல் கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற உயர்தொழில்நுட்ப நிறுவனத்தின் 2009ஆம் ஆண்டுக்கான 7ஆவது பட்டமளிப்பு விழாவில் உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா (HNDA) பட்டத்தைப் பெற்ற எங்கள் அன்பு மகள்

**நடராஜா உஷாபானு**


அவர்களை வாழ்த்துவதோடு இன்னும் பலபட்டங்கள் பெற்று சகல சௌபாக்கியமும் பெற இறைவனை வேண்டுகின்றோம்.

புகையிரப் பாதை அருகாமை, மல்லாகம்.

வாழ்த்துவோர்: அப்பா, அம்மா, சகோதர சகோதரிகள், மாமாமார், மாமிமார், மச்சான்மார், மச்சாள்மார், சித்திமார், சித்தப்பாமார்.

(106098)

## மனமுவந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்



"சைவப்புலவர்" "நுண்கலைமாணி" "தேசிய விரப்பொதுமகன்" ஆகியவிருதுகளைப் பெற்ற செல்வன்

**துரைசிங்கம் குமரநாதன்**

அவர்களுக்கு 14.11.2010 அன்று சாவகச்சேரி பிரதேச சபை கச்சாய் பொது நூலகத்தில் திருவள்ளுவர் திருவுருவத்தினை இலவசமாக வடிவமைத்துக் கொடுத்தமைக்காக சாவகச்சேரி பிரதேச சபையால் கலைஞானி என்ற பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. இவர் மேன்மேலும் பல பட்டங்களைப் பெற்று வளமோடு வாழ வாழ்த்துகின்றோம்.

பாலாவி வடக்கு, கொடிகாமம். (106102)

குடும்பத்தினர்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



நேற்று 16.11.2010 பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் (BMICH) நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா (HNDA) பட்டத்தினைப் பெற்ற எமது நிறுவன உத்தியோகத்தர்

**திரு.கணேசபிள்ளை முகுந்தன்**

அவர்களை மேலும் பல பட்டங்களும், பதவிகளும் பெற்று சீரும் சிறப்புடன் பல்லாண்டுகாலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்: இயக்குநர்களும், பணியாளர்களும். R.V.G.ஸ்தாபனம் & R.V.G.மெடிக்கல் ஸ்தாபனம்

இல.58, நல்லூர் குறுக்குத்தெரு, நல்லூர், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மும்பைத் தாக்குதல் குறித்த எச்சரிக்கையை முன்கூட்டியே பாகிஸ்தான் திசை திருப்பி விட்டது

## அமெரிக்க பத்திரிகையாளர் ஆய்வில் தகவல்

வாஷிங்டன், நவ. 17

மும்பையில் லஷ்கர்-இ-தொய்பா பயங்கரமான தாக்குதல் நடத்தக் கூடும் என்று உளவுத் தகவல்கள் முன்கூட்டியே எச்சரிக்கை விடுத்தும், அவற்றை அமெரிக்காவும், ஐரோப்பாவும் பொருட்படுத்தாத அளவிற்கு பாகிஸ்தான் அந்நாடுகளை சமாதானப்படுத்தி வைத்திருந்தது என்ற அதிர்ச்சிகரமான தகவல் இப்போது தெரியவந்துள்ளது.

அமெரிக்க பத்திரிகையாளர் செபஸ்டியன் ரோட்டெல்லா என்பவர், மும்பைத் தாக்குதல் பற்றி விரிவான அளவில் புலனாய்வு செய்து வருகிறார். இது குறித்த முதல் கட்டுரை ஒன்றை அமெரிக்காவிலிருந்து வெளிவரும் 'வாஷிங்டன் போஸ்ட்' இதழில் வெளியிட்டுள்ளார்.

இப்போது அதன் இரண்டாவது பகுதியை சமீபத்தில் அதே இதழில் வெளியிட்டுள்ளார்.

அதில் அவர் குறிப்பிட்டிருப்பவை வருமாறு:-

லஷ்கர்-இ-தொய்பா அமைப்பு உலகளவில்தன்னுடையவலையை விரித்து வருகிறது. அதற்கு தலிபானுடனும், அல்- குவைதாவுடனும் தொடர்பிருக்கிறது. அதனால் இந்தியர்கள், அமெரிக்கர்கள், ஐரோப்பியர்கள், யூதர்கள் ஆகியோரைக் குறி வைத்து, மும்பையில் பயங்கரத் தாக்குதல் ஒன்றை நடத்தக் கூடும் என உளவுத்துறை தகவல்கள் வந்த வண்ணம் இருந்தன.

ஆனால், பாகிஸ்தானின் ஐ.எஸ்.ஐ., இராணுவம், தலிபான் மற்றும் அல்- குவைதாவுடன் லஷ்கருக்கு தொடர்பே கிடையாது. அதற்கு இந்தியா மீது மட்டும்தான் பகை. அதனால் அதைப் பற்றிக் கவலைப்பட வேண்டியதே இல்லை என்று அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளிடம் சமாதானம் கூறி சமாளித்துவிட்டது.

இதை நம்பிய அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய நாடுகள், லஷ்கரை தீவிரமாகக் கண்காணிப்பதை சற்று நிறுத்தி வைத்தன. அதேநேரம்தான், டேவிட் ஹெட்லி போன்ற மண்ணின் மைந்தர்களைத் தன் வலைக்குள் லஷ்கர் இழுத்துப் போட ஆரம்பித்திருந்தது.

உலகளவில் தன் பயங்கரவாத வலையை லஷ்கர் விரிப்பதற்கு, பாகிஸ்தானின் இராணுவமும் துணை போனது. 2006இல், அமெரிக்கப் புலனாய்வுத் துறை, லஷ்கரை இந்தியாவுக்கு மட்டுமான அச்சுறுத்தலாகத் தான் கணித்திருந்தது.

ஆனால் அந்நேரம், ஹெட்லியின் கூட்டாளி சாஜித் மிர், தன் பார்வையை உலகளவில் திருப்பினார். மிர், லஷ்கர் தலைவர்; பாகிஸ்தான் இராணுவத்துக்கு நெருங்கியவர்.

அமெரிக்காவின் வேர்ஜினியா, ஐரோப்பா, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளில் குண்டு வெடிப்பு களை நிகழ்த்தியவர். மும்பைத் தாக்குதலின் மூளை இவர்தான். ஆஸி. சம்பவத்தில் ஈடுபட்ட மிர் ரின் கூட்டாளி வில்லே பிரிகிட் என்பவரை பிரான்ஸ் பொலிஸார் கைதுசெய்து சிறையில் அடைத்துள்ளனர்.

பிரான்ஸின் பயங்கரவாதத்துக்கு எதிரான உயர்மட்ட மாஜிஸ்திரேட் ழான் லூயிஸ் ப்ருகைர் என்பவர், மிர் மற்றும் வில்லேயின் பயங்கரவாதம் குறித்து மூன்றாண்டுகள் ஆய்வு செய்தவர்.

இவர் 2006இல், மிர் ஒரு தேடப்படும் குற்றவாளி என 'இன்டர்போல்' மூலம் அறிவித்தல் விட்டார். இதற்கு பாகிஸ்தான் பதிலளிக்கவில்லை. ஹெட்லியுடன் மிர் மும்பையைச் சுற்றிப் பார்த்துள்ளார். மிர்ரின் மேற்பார்வையில்தான் மும்பைத் தாக்குதலே நடந்துள்ளது.

மொத்தம் 300 அழைப்புகளில் அவர்களின் உரையாடல்கள் இந்திய அதிகாரிகளால் பதிவு செய்யப்பட்டுள்ளன என்று அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு ரோட்டெல்லா தன் கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

# குண்டுவெடிப்பில் தப்பினார் தலிபான் எதிர்ப்புத் தலைவர்

பெஷாவர், நவ.17

பாகிஸ்தானில் தலிபான் எதிர்ப்புத் தலைவர் அப்துல் மாலிக்கின் மகன் நூர் மாலிக் திங்கட்கிழமை தனது காரில் ஏற முயன்றபோது அவரைக் குறிவைத்து வெடிகுண்டு தாக்குதல் நடத்தப்பட்டது.

இதில் அவர் உயிர்தப்பினார். அவரது மெய்க்காவலர் உட்பட 3 பேர் காயமடைந்தனர். இமாம் உட்பட 2 பேர் பலியானார்கள்.

பாகிஸ்தானின் மேற்கு பகுதியிலுள்ள எல்லைப்புற மாகாணமான கைபர் பகுதுன்குவா மாகாணத்தின் தலைநகர் பெஷாவருக்கு அருகே அதிசாய் என்ற இடத்தில் இந்தத் தாக்குதல் சம்பவம் நடைபெற்றது.

இந்தத் தாக்குதலுக்கு தீவிரவாத அமைப்புகள் எதுவும் பொறுப்பேற்கவில்லை. பழங்குடியினர் அதிகம் வாழும் இந்த மாகாணத்தை தலிபான் தீவிரவாதிகள் தங்கள் புகலிடமாக்க முயன்றனர். இதை உள்ளூர் பழங்குடியினத்தவர் எதிர்த்தனர். அதில் நூர் மாலிக்கின் தந்தை அப்துல் மாலிக் முக்கியமானவர்.

கடந்த ஆண்டு தற்கொலைப் படைத் தாக்குதலில் அவர் கொல்லப்பட்டார். அவரது தலிபான் எதிர்ப்புக் கொள்கையை நூர் மாலிக் பின்பற்றி வந்தார். இந்நிலையில், அவரை குறி வைத்து வெடிகுண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தான் எல்லையை ஒட்டி அமைந்துள்ள இம்மாகாணத்தில் தலிபான்கள் தாங்கள் பின்பற்றும் கொள்கைகளை பிறரிடம் புகுத்த முயன்றனர். இதை அனுமதிக்காத பழங்குடியின தலைவர்கள் நூற்றுக்கும் மேற்பட்டவர்களை தலிபான்கள் கொன்றிருக்கின்றனர் என்பது நினைவுகூரத்தக்கது.

## புதிய பொறுப்பு...



வரவும் பிரிவும்: பிரான்ஸ் அமைச்சரவை மாற்றியமைக்கப்பட்டது. புதிய இராணுவ அமைச்சர் ஆலன்ஜூப்போ (வலது) பொறுப்பேற்றார். முன்னாள் அமைச்சர் மோரி ஹெர்வான் சக அதி காரிகளிடமிருந்து பிரியாவிடை பெறுகிறார்.

# உலகில் செல்வாக்கான பெண் பிரி. முன்னாள் பிரதமர் தட்சர்

லண்டன், நவ. 17

உலகின் மிக செல்வாக்கான பெண்மணியாக பிரிட்டிஷ் முன்னாள் பிரதமர் மார்க்கரெட் தட்சர் திகழ்கிறார் என அண்மையில் நடத்தப்பட்ட ஆய்வொன்றில் தெரியவந்துள்ளது.

உலகின் செல்வாக்கான பெண் குறித்து இணையத்தளம் ஒன்று, சர்வதேச அளவில் 2 ஆயிரத்து 48 பேரிடம் கருத்துக் கணிப்பு நடத்தியது.

இதில், உலகின் செல்வாக்கான பெண்மணியாக பிரிட்டிஷ் முன்னாள் பிரதமர் மார்க்கரெட் தட்சர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

புளோரன்ஸ் நைட்டிங்கேல், அன்னை தெரேசா, ஓப்ரா வின்ஸ்பிரே ஆகியோரை பின்னுக்குத் தள்ளி முதலிடம் பிடித்த தட்சருக்கு, 32 சதவீதம் பேர் வாக்களித்துள்ளனர்.

தட்சர், 1979ஆம் ஆண்டு முதல் 1990ஆம் ஆண்டு வரை பிரிட்டிஷ் பிரதமராக இருந்தார். 1975ஆம் ஆண்டு முதல் 1990 ஆம் ஆண்டு வரை கன்சர்வேட்டிவ் கட்சியின் தலைவியாகவும் பதவி வகித்துள்ளார்.

இந்த ஆய்வில், பிரிட்டனைச் சேர்ந்த சூப்பர் மாடல், 'கேட் மோஸ்' ஒரு சதவீத வாக்குகளை மட்டுமே பெற்று கடைசி இடத்தைப் பிடித்துள்ளார்.

இந்த ஆய்வில் பங்கேற்ற 62 சதவீதம் பேர், ஒரு பெண் மிகவும் செல்வாக்காகத் திகழ்வதற்காக அர்ப்பணிப்பு உணர்வுடன் இருக்க வேண்டும் என்றும் இது தவிர, கடின உழைப்பு, அறிவுக் கூர்மை, சுதந்திரமாகச் செயல்படும் தன்மை ஆகியவை உள்ளிட்ட பண்புகளையும் கொண்டிருக்க வேண்டும் என்றும் கூறியுள்ளனர்.

# தீவிரவாதத் தாக்குதலுக்கு இலக்காகும் நாடுகளில் சோமாலியாவுக்கு முதலிடம்

லண்டன், நவ. 17

தீவிரவாதிகளால் மிகவும் மோசமாக தாக்குதலுக்குள்ளாகும் நாடுகளில் முதலிடத்தை சோமாலியாவும், இரண்டாமிடத்தை பாகிஸ்தானும் பிடித்துள்ளன. மூன்றாமிடத்தில் ஈராக் உள்ளது. இந்தியா 15ஆவது இடத்தில் உள்ளது.

பிரிட்டனைச் சேர்ந்த 'மேப்பிள்கிராப்ட்' என்ற ஆய்வு நிறுவனம், 2009 - 10ஆம் ஆண்டுகளில் உலகின் 196 நாடுகளில் நடந்த பயங்கரவாதத் தாக்குதல்களின் அடிப்படையில், ஒரு பட்டியலைத் தயாரித்து வெளியிட்டுள்ளது.

அதன்படி, தீவிரவாதிகளால் மிக மோசமாக தாக்குதலுக்குள்ளாகும் முதல் 16 நாடுகளில், முதலிடத்தை சோமாலியா பிடித்துள்ளது. அங்கு கடந்த ஓராண்டில் 556 பயங்கரவாதச் சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன; ஆயிரத்து 437 பேர் கொல்லப்பட்டுள்ளனர்; மூவாயிரத்துக்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

இரண்டாம் இடத்திலுள்ள பாகிஸ்தானில், கடந்த 2007இல் இருந்து தீவிரவாதிகளால் இரண்டாயிரம் பேர் கொல்லப்பட்டுள்ளனர். மூன்றாமிடத்தில் ஈராக் உள்ளது. நான்காம் இடத்தில் ஆப்கானிஸ்தானும், பலஸ்தீனிய எல்லைகள் ஐந்திலும், கொலம்பியா ஆறிலும், தாய்லாந்து, பிலிப்பைன்ஸ், ஏமன், ரஷ்யா ஆகிய நாடுகள் அடுத்தடுத்த இடத்திலும் உள்ளன.

இந்தப் பட்டியலில் ரஷ்யாவும், கிரீசும் முன்னேறியுள்ளன.

கிரீஸ் கடந்தாண்டு பட்டியலில் 57ஆம் இடத்தில் இருந்தது; இந்தாண்டு பட்டியலில் 24ம் இடத்துக்கு வந்துள்ளது. இதன் மூலம் அங்கு தீவிரவாதிகளின் ஆதிக்கம் பெருகி வருகிறது என ஆய்வு நிறுவனம் கூறியுள்ளது.

இந்தியாவில் கடந்தாண்டை விட இந்தாண்டு பயங்கரவாதத் தாக்குதல்கள் குறிப்பிடத்தக்க அளவில் இல்லை. அதனால், கடந்தாண்டில் ஆறாமிடத்திலிருந்த இந்தியா, இந்தாண்டு 15 ஆவது இடத்துக்குச் சென்று விட்டது.

அமெரிக்கா 33ஆவது இடத்திலும், பிரான்ஸ் 44, பிரிட்டன் 46, கனடா 67 ஜெர்மனி 70ஆம் இடங்களிலும் இடம்பிடித்துள்ளன

இப்பட்டியலில் முதலிடத்தை நெருங்கிப் போவது என்பது மோசமான பயங்கரவாதத் தாக்குதலுக்குள்ளாவதைக் குறிக்கும். பின்தங்கிப் போவது என்பது பயங்கரவாதத் தாக்குதல் குறைவாக நடப்பதைக் குறிக்கும்.

## அரசியல் எழுச்சி...



உற்சாகம்: வீட்டுக்காவலிலிருந்து விடுதலையான மியான்மர் எதிர்க் கட்சித் தலைவி (ஜனநாயக தேசிய லீக் கட்சி) ஆங்சான் சூகி யோங்கோனிலுள்ள தனது கட்சி அலுவலகத்திற்குள் உற்சாகத்துடன் நுழைகிறார்.

# பொது இடத்தில் புகைபிடிக்க போலந்து அரசு தடை விதிப்பு

வார்ஷா, நவ. 17

போலந்தில் பொது இடத்தில் புகைப்பிடிக்க அரசு தடை விதித்துள்ளது. மேலும் இதனை மீறுபவர்களுக்கு 500 ஜிலோடியஸ் (195 டொலர்) அபராதம் விதிக்கப்படும் என்று எச்சரித்துள்ளது.

ஏற்கனவே ஐரோப்பாவிலுள்ள பல்வேறு நாடுகள் பொது இடத்தில் புகைப்பிடிக்க தடை விதித்துள்ளன. இந்நிலையில் போலந்தும் [illegible] விதித்துள்ளது.

# விஷ சிலந்திகள் மத்தியில் 3 வாரங்கள் தங்கிச் சாதனை

மெல்போர்ன், நவ. 17

குழந்தைகள் நல அறக்கட்டளைக்கு நிதி திரட்ட 100இற்கும் மேற்பட்ட கொடிய விஷ சிலந்திகளுடன் 3 வாரங்கள் தங்கி அவுஸ்திரேலிய முதியவர் ஒருவர் சாதனைப் படைத்துள்ளார்.

அவுஸ்திரேலியாவின் மெல்போர்ன் நகரைச் சேர்ந்த நிக்லீசூயங் (வயது - 67) எனும் முதியவர், தனது கடையில் கொடிய விஷத் தன்மை கொண்ட சிலந்திகளின் மத்தியில் சுமார் 3 வாரங்கள் தங்கியிருந்தார். இதன் மூலம் அவருக்கு 50 ஆயி ரம் டொலர்கள் பணம் கிடைத்தது. இதனை குழந்தைகள் நல அறக் கட்டளைக்கு நிதியாக வழங்கினார். "அடிப்படையில் பாம்புகளுடன் இருக்கலாம் என நினைத்தேன், அனுமதி பிரச்சினையால் அதனை விட்டுவிட்டேன் அதற்குப் பதிலாக சிலந்திகளுடன் தங்கினேன். இதன் மூலம் ஜந்துகளிடமுள்ள அச்ச உணர்வினை போக்கியுள்ளேன்" என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹென்றிஸ், பற்றிக்ஸ் இணைச் சம்பியன்

வலி.வடக்கு,நவ.17

மானிப்பாய் இந்துக் கல்லூரி நூற்றாண்டு விழாவையொட்டி அழைக்கப்பட்ட பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற உதைபந்தாட்ட இறுதிப் போட்டி சமநிலையில் முடிவடைந்தமையால் இரு அணிகளுக்கும் இணைச் சம்பியன் வழங்கப்பட்டது.

மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரியும் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியும் மோதிக் கொண்டன.

போட்டி ஆரம்பித்து முடிவடையும் வரை இரு அணிகளும் கடுமையாக மோதிக் கொண்டமை ரசிகர்களையும் ஆதரவாளர்களையும் மிகவும் உற்சாகப்படுத்தியது.

முதல் பாதி ஆட்டத்தில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி ஒரு கோலைப் பெற்று முன்னணியில் நின்றது.

இரண்டாம் பாதி ஆட்டம் இரு அணிகளுக்கும் பெரும் சவாலாக அமைந்தது. போட்டி ஆரம்பமாகியது முதல், இரு அணிகளும் கோல்கள் பெற பெரும் பிரயத்தனத்தை மேற்கொண்ட போதும் எதிரணி அதனை முறியடித்து விளையாடியது.

போட்டி முடிவடைய ஒரு சில நிமிடங்கள் இருக்கும் போது புனித ஹென்றியரசர் கல்லூரி ஒரு கோலைப் பெற்றுப் போட்டியை சம நிலைப்படுத்திக் கொண்டது.

இந்த வேளையில் பலத்த ஆட்சேபனை எழுந்த போதிலும் மத்தியஸ்தர் கோலை வழங்கி தீர்ப்பளித்தார்.

மீண்டும் போட்டி ஆரம்பித்து ஒரு நிமிடத்தில் போட்டி முடிவடைந்தது.வெற்றி தோல்வியை தீர்மானிப்பதற்கு சம நிலை தவிர்ப்பு உதைகள் வழங்க முற்பட்ட நேரத்தில் இரு அணிகளின் ஆதரவாளர்களும் மைதானத்தில் புகுந்தமையால் தொடர்ந்து போட்டியை நடத்த முடியாத நிலையில் இரு கல்லூரிகளுக்கும் போட்டி ஏற்பாட்டாளர்கள் இணைச் சம்பியனை வழங்கினார்கள். (த-86)

## இறுதிப் போட்டியில் குழப்பம்

வலி:வடக்கு,நவ.17

மானிப்பாய் இந்துக் கல்லூரியின் நூற்றாண்டு விழாவையொட்டி மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டி பெரும் குழப்பமான நிலையில் முடிவடைந்துள்ளது.

நேற்று முன்தினம் மின்னொளியில் நடைபெற்ற இப்போட்டியை ஆதரவாளர்களின் குழப்பங்கள், தாக்குதல்களால் தொடர்ந்து நடத்த முடியாத நிலை ஏற்பட்டது.

இரு அணிகளும் தலா ஒரு கோலைப் பெற்று சம நிலையில் போட்டி முடிவடைந்ததைத் தொடர்ந்து சம நிலை தவிர்ப்பு உதைகள் வழங்கும் நேரத்தில் குழப்பம் உண்டாகியது.

ஒரு சாரர் மத்தியஸ்தரின் பக்கம் தமது கோபத்தை வெளியிட முற்பட்ட வேளை மறுபக்கம் சென்.பற்றிக்ஸ் கல்லூரியின் வீரர்கள் இருவர் தாக்கப்பட்டதாகவும் குறிப்பிட்ட கல்லூரியின் சார்பில் தெரிவிக்கப் பட்டது. (த-86)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், நவ.17

யாழ். மத்திய கல்லூரி மாணவ முதல்வர் சபை நடத்தும் முன்னாள் மாணவ முதல்வர் அமரர் பொன் விபுலானந்தன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான பாடசாலைகளுக்கு இடையே லீக் முறையில் நடைபெறும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி இன்று புதன் கிழமை யாழ். மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்டத்திடலில் இடம் பெறவுள்ள பெண்களுக்கான ஆட்டத்தில் பங்குகொள்ளும் அணிகளின் விவரங்கள் வருமாறு:-

பி.ப 2.30 மணி

- யாழ். இந்து மகளிர் கல்லூரி "பி" அணி எதிர் யாழ். திருக்குடும்ப கன்னியர் மட அணி.
- யாழ். இந்து மகளிர் கல்லூரி "ஏ" அணி எதிர் வேம்படி மகளிர் கல்லூரி" ஏ " அணி. (த-23)

## 10 விக்கெட்டுகள் கைப்பற்றி நிசோதன் புதிய சாதனை



யாழ்ப்பாணம்,நவ.17

13 வயதுப் பிரிவினருக்கான கிரிக்கெட் போட்டி ஆட்டத்தில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி நிசோதன் புதிய சாதனையை ஏற்படுத்தியுள்ளார். ஒரு இன்னிங்சில் பத்து விக்கெட்டுக்களையும் கைப்பற்றி இவர் இந்தச் சாதனையை ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

1993 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி வீரன் லட்சுமிகாந் யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரிக்கு எதிராக இடம்பெற்ற போட்டியில் 9 விக்கெட்டுக்களைக் கைப்பற்றி ஒரு சாதனையை ஏற்படுத்தியிருந்தார்.

இதே சாதனையை 97 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி வீரன் மதன் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரிக்கு எதிரான போட்டியில் 9 விக்கெட்டுக்களை கைப்பற்றி சமப்படுத்தியிருந்தார்.

இச்சாதனை கடந்த வாரம் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கு எதிராக நடைபெற்ற போட்டியில் முறியடிக்கப்பட்டது. யாழ்.இந்து வீரன் நிசோதன் 09 ஓவர்கள் பந்து வீசி 02 ஓட்டமற்ற ஓவர்களுடன் 18 ஓட்டங்களுக்கு 10 விக்கெட்டுக்களை கைப்பற்றி இந்தச் சாதனையைப் படைத்துள்ளார். (த-23-86)

## இந்து இளைஞர் வெற்றி

யாழ்ப்பாணம்,நவ.17

அச்சுவேலி ஸ்ரார் விளையாட்டுக்கழகத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற சிநேகபூர்வ கரப்பந்தாட்டப் போட்டியில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணி வெற்றி பெற்றது.

கடந்த வாரம் அச்சுவேலி ஸ்ரார் விளையாட்க்கழக மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து கோப்பாய் ஐக்கிய விளையாட்டுக்கழக அணி மோதியது.

இதில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணி 25:18, 25:21, 25:20 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி கொண்டது. (த-23)




## உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம்,நவ.17

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனம் நடத்தும் யூனியர் லீக் உதைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டம் ஒன்று இன்று புதன்கிழமை பி.ப. 3 மணிக்கு நெல்லியடி மத்திய மகாவி த்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதில் யாழ்.உதைப்பந்தாட்ட லீக் அணியை எதிர்த்து பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் அணி மோதவுள்ளது. (த-23)

## மின்னல் வேக கூடைப்பந்தாட்டம்

யாழ்ப்பாணம்,நவ.17

சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகம் வருடாவருடம் நடத்தி வரும் பொன்.விபுலானந்தன் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்கான மின்னல் வேகக் கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி எதிர் வரும் 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகின்றது.

இதில் பங்குகொள்ள விரும்பும் கழகங்கள் நாளை மறுதினம் மாலை 4 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரியில் இடம்பெறவிருக்கும் போட்டிக்கான நிரல் தயாரிக்கும் கூட்டத்தில் பங்கு கொள்ளுமாறு போட்டி ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (த-23)

# 5 விக்கெட்டுக்களால் வென்றது யாழ்.இந்து

யாழ்ப்பாணம்,நவ.17

அகில இலங்கைப் பாடசாலை துடுப்பாட்ட சங்கம் நடத்திவரும் 13 வயதுப் பிரிவினருக்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் யாழ்.இந்துக் கல்லூரி 5 விக்கெட்டுக்களால் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியை வென்றது.

நேற்று முன்தினம் யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்ற ஆட்டத்தில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணியை எதிர்த்து யாழ்.இந்துக் கல்லூரி அணி மோதியது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இந்துக் கல்லூரி அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

முதலில் துடுப்பொடுத்தாடிய வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 53 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் நிரேஷன் 13 ஓட்டங்களையும், கிருபாலன் 10 ஓட்டங்களையும், கொலின் 07 ஓட்டங்களையும், விதுஷன் 04 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர்.

பந்து வீச்சில் யாழ். இந்துக் கல்லூரி அணி நிசோதன் 9 ஓவர்கள் பந்து வீசி 18 ஓட்டங்களைக் கொடுத்து 10 விக்கெட்டுக்களை வீழ்த்தி சாதனை படைத்தார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ்.இந்துக் கல்லூரி அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 29 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் உதயன் 09 ஓட்டங்களையும் திருவேல் 04 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி வீரர்களான ஜிந்துஷன் 9 ஓவர்கள் பந்து வீசி 08 ஓட்டங்களைக் கொடுத்து 06 விக்கெட்டுக்களையும் நிரோஷன் 10 ஓவர்கள் பந்து வீசி 16 ஓட்டங்களைக் கொடுத்து 04 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

இரண்டாவதுஇன்னிங்சில்துடுப்பொடுத்தாடிய வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 39 ஓட்டங்களை பெற்றது.

இதில் ரஜீவன் 13 ஓட்டங்களையும், விதுஷன் 09 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர்.

பந்து வீச்சில் யாழ்.இந்துக் கல்லூரி வீரர்களான துவாரகன், 7 ஓவர்கள் பந்து வீசி 06 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும் விதுர்ஷனன் 8 ஓவர்கள் பந்து வீசி 23 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும் சிவலக்சன் 1.3 ஓவர்கள் பந்து வீசி ஓர் ஓட்டத்தைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் நிசோதன் 4 ஓவர்கள் பந்து வீசி 2 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

தனது இரண்டாவது இன்னிங்ஸிற்காக துடுப்பொடுத்தாடிய யாழ்.இந்துக்கல்லூரி அணி 5 விக்கெட்டுக்களை இழந்து 65 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் உதயன் 19 ஓட்டங்களையும் கஜனன் ஆட்டமிழக்காமல் 13 ஓட்டங்களையும் நிசோதன் 10 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர்.

பந்து வீச்சில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி வீரர்களான ஜிந்துஷன் 10 ஓவர்கள் பந்து வீசி 16 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும், நிரோஷன் 7 ஓவர்கள் பந்து வீசி 20 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டையும், மிதுஷன் 4 ஓவர்கள் பந்து வீசி 13 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

யாழ்.இந்துக் கல்லூரி அணி 5 விக்கெட்டுக்களால் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணியை வெற்றி கொண்டது. (த-23)

## பண்டத்தரிப்பு, யாழ். இந்து மகளிர் கூடைப்பந்தாட்ட அணிகள் வெற்றி

யாழ்ப்பாணம், நவ.17

யாழ். மத்தியகல்லூரி மாணவர் முதல்வர் சபை நடத்தும் முன்னாள் மணவர் முதல்வர் அமரர் பொன். விபுலானந்தன் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்திற்கான கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் லீக்முறையில் நேற்று இடம் பெற்ற ஆட்டத்தில் யாழ். இந்து மகளிர் கல்லூரி 'பி' அணி பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி அணி ஆகியவை வெற்றிபெற்றன.

முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் இந்து மகளிர் கல்லூரி 'பி' அணியை எதிர்த்து வேம்படி மகளிர் கல்லூரி 'ஏ' அணி மோதியது.

இதில் யாழ். இந்து மகளிர் கல்லூரி அணி எதிர்த்து விளையாடிய வேம்படி மகளிர் கல்லூரி அணியை 5:0 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றது.

தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியை எதிர்த்து யாழ். இந்து மகளிர் கல்லூரி 'பி' அணி மோதியது.

இதில் பண்டத்தரிப்பு இந்து மகளிர் கல்லூரி அணி எதிர்த்து விளையாடிய யாழ். இந்து மகளிர் கல்லூரி அணியை 12:02 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி கொண்டது. (த-23)

### சரியான போட்டி.....



மோதல்: காங்கேசன்துறை பொலிஸ் அத்தியட்சகர் பிரிவுக்கு உட்பட்ட பொலிஸ் நிலையங்களின் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற ஆண்களுக்கான கரப்பந்தாட்ட இறுதிப் போட்டியில் இளவாலை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயமும், வல்வெட்டித்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியும் மோதிக் கொள்வதை படங்களில் காணலாம். (த-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலியில் நேற்றும் தொடர்ந்தது கெய்லின் அபாரத் தாக்குதல்

## தடுமாற்றத்துடன் ஆரம்பித்தது இலங்கை

காலி, நவ. 17

காலியில் நேற்றும் தனது அதிரடியைத் தொடர்ந்த கெய்ல், முச்சதமடித்து அசத்தினார். இவரின் அதிரடியால் மேற்கிந்தியத் தீவுகள் அணி 580 ஓட்டங்களைக் குவித்தது.

இலங்கைக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள மேற்கிந்தியத் தீவுகள் அணி, இலங்கைக்கு எதிரான 3 போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரில் ஆடிவருகிறது. முதலாவது போட்டி நேற்றுமுன்தினம் காலியில் ஆரம்பமானது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி, நேற்றுமுன்தினம் ஆட்ட நேர முடிவின்போது 2 விக்கெட்டுகள் இழப்புக்கு 362 ஓட்டங்களைக் குவித்திருந்தது.

கெய்ல் (219), சந்திரபோல் (20) ஆகியோர் களத்தில் இருந்தனர். பின்னர் நேற்றுத் தனது ஆட்டத்தைத் தொடர்ந்த மேற்கிந்தியத் தீவுகள் அணி, கெய்லின் துடுப்புகளிலிருந்து இடைவிடாது பொழிந்து கொண்டிருந்த ஓட்ட மழையால் பாரிய இலக்கை எட்டியது.

மறுமுனையில் நின்ற சந்திரபோல் மொத்தமாக 32 ஓட்டங்களைச் சேர்த்த நிலையில் ஆட்டமிழந்து சென்றார்.

மறுமுனையில் சிறப்பாக ஆடிக்கொண்டிருந்த கெய்ல் 393 பந்துகளை எதிர்கொண்டு 32 பவுண்டரிகள், 8 சிக்ஸர்கள் அடங்கலாக முச்சதமடித்தார்.

பின்னர் வந்த நாஸ் அரைச்சதமடித்து (64) ஆட்டமிழந்தார். அவரைத் தொடர்ந்து பிராவோ 5 ஓட்டங்களுடன் ஏமாற்றிச் சென்றார்.

அதிரடியாக ஆடி 400 ஓட்டங்களைத் தொடுவார் என எதிர்பார்க்கப்பட்ட கெய்ல் 333 ஓட்டங்களைப் பெற்றவேளை ஆட்டமிழந்தார்.

பின்னர், 9 விக்கெட்டுகள் இழப்புக்கு 580 ஓட்டங்களைப் பெற்ற வேளை, மேற்கிந்தியத் தீவுகள் தமது இனிங்ஸை முடிவுக்குக் கொண்டுவந்தது. பந்துவீச்சில் மெண்டிஸ் 6 விக்கெட்டுகளையும், ரண்டீவ் 3 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

பின்னர், தனது இனிங்ஸைத் தொடர்ந்த இலங்கை அணி, டில்ஷானை (0) உடனேயே இழந்தது. நேற்று ஆட்ட நேர முடியும்போது ஒரு விக்கெட் இழப்புக்கு 54 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. பரணவிதாரன (10) சங்கக்கார (33) ஆகியோர் களத்தில் உள்ளனர். இன்று ஆட்டத்தின் மூன்றாம் நாள் ஆகும்.





# கொச்சி அணி நீக்கப்படுமா?

புதுடில்லி, நவ. 17

கொச்சி அணி நீக்கப்படுமா என்பது குறித்து முடிவு இன்று தெரியவரும்.

ஐ.பி.எல். கிரிக்கெட்டில் புதிதாக சேர்க்கப்பட்ட கொச்சி அணியில் பல்வேறு பங்குதாரர்கள் உள்ளனர். கொச்சி அணியை நிர்வகிப்பதில் உரிமையாளர்களுக்குள் ஆரம்பத்திலிருந்தே பிரச்சினை இருந்து வருகிறது.

அவர்களுக்குள் சரியான ஒருங்கிணைப்பு இல்லாதமையால் இந்த விடயத்தில் தலையிட்ட இந்தியக் கிரிக்கெட் சபை, உரிமையாளர்களின் பிரச்சினையை சட்டப்படி விரைவில் தீர்க்க வேண்டும் எனவும், இல்லாவிட்டால் ஒப்பந்தம் ரத்துச் செய்யப்படும் எனவும் கூறி இரண்டு தடவைகள் கால அவகாசம் கொடுத்து நோட்டீஸ் அனுப்பியது.

எனினும், உரிமையாளர்கள் விவகாரத்தில் இன்னும் தீர்வு காணப்படவில்லை. இதையடுத்து ஐ.பி.எல். அமைப்பிலிருந்து கொச்சி அணி நீக்கப்படலாம் என்று தெரியவருகிறது.

இது குறித்து இன்று நடக்கவுள்ள ஐ.பி.எல். ஆட்சிமன்றக் குழு கூட்டத்தில் முடிவு எடுக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# ஐ.பி.எல். பிரச்சினையைத் தீர்க்க மத்தியஸ்தரை நியமிக்க முடிவு

மும்பை, நவ. 17

ஐ.பி.எல். பிரச்சினையை மத்தியஸ்தர் மூலம் தீர்த்துக்கொள்ளலாம் என ராஜஸ்தான் அணி முடிவுசெய்துள்ளது.

இந்திய கிரிக்கெட் சபையால் ஐ.பி.எல். அமைப்பிலிருந்து நீக்கப்பட்டதை எதிர்த்து ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி மும்பை உயர்நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்தது.

இந்த மனு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு வந்தபோது, கிரிக்கெட் சபையுடனான பிரச்சினையை மத்தியஸ்தர் மூலம் தீர்த்துக்கொள்ள முடியும் என ராஜஸ்தான் ரோயல்ஸ் அணியின் சட்டத்தரணி நீதிமன்றில் கூறினார்.

முன்னாள் நீதிபதி பி.என்.கிருஷ்ணாவை மத்தியஸ்தராகக் கொண்டு பிரச்சினையை தீர்த்துக்கொள்ளலாம் என அவர் மேலும் தெரிவித்தார்.

பின்னர் வழக்கின் விசாரணை நாளைய தினத்துக்குத் தள்ளிவைக்கப்பட்டது. இதேமுறையைப் பின்பற்ற கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியும் விருப்பம் தெரிவித்துள்ளது.

# டெஸ்ட் போட்டியைப் பொறுத்தவரையில் எனது 50ஆவது சதம் முக்கியமானதல்ல



ஹைதராபாத், நவ. 17

''எனது 50 ஆவது சதத்தைப் பற்றியே பேசிக்கொண்டிருப்பதைவிட, டெஸ்டில் பேசக்கூடிய எவ்வளவோ முக்கிய மான விடயங்கள் உள்ளன.'' இவ்வாறு சச்சின் கூறியுள்ளார்.

கிரிக்கெட் ரசிகர்கள் அனைவரும் இந்திய வீரர் சச்சின் டெண்டுல்கரின் 50ஆவது டெஸ்ட் சதத்தை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர். இந்நிலையில், நேற்றுமுன்தினம் செய்தியாளர்களிடம் பேசியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியவை வருமாறு:-

எனது 50ஆவது டெஸ்ட் சதத்தை விட டெஸ்ட் கிரிக்கெட்டில் எவ்வளவோ முக்கியமான விடயங்கள் உள்ளன. இது மட்டுமே பெரிய விடயம் கிடையாது. எனது நாட்டுக்காகச் சிறப்பாக விளையாட வேண்டும் என்பதில்தான் நான் எப்போதும் கவனம் செலுத்தி வருகிறேன். தற்போது நியூஸி லாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரை வெல்வதில் எனது கவ னம் இருக்கிறது. செய்தித்தாள்களில் என்னைப் பற்றி வரும் செய்திகளை நான் படிப்பதில்லை. எனது ஹோட்டல் அறையின் வெளிப்பகுதியில் பார்த்தால், செய்திதாள்கள் அப்படியே இருப்பதைப் பார்க்கலாம்.

நான் எனது ஆட்டத்தில் மட்டுமே கவனம் செலுத்துகிறேன். கிரிக்கெட்டில் விளையாடிவரும் 21 ஆண்டுகளும் எனக்கு சிறப்பு வாய்ந்தவையே. இந்த மகிழ்ச்சிகரமான பயணத்தை ரசித்து அனுபவித்து வருகிறேன். நீண்ட நேரம் களத்தில் நின்றால் உன்னால் சதம் அடிக்க முடியும் என்று ஹர்பஜன்சிங்கிடம் எப்போதும் கூறி வந்திருக்கிறேன். அஹமதாபாத் டெஸ்டில் சதம் அடித்தபோதும இதைத்தான் அவரிடம் கூறினேன். பந்தை நீண்ட தூரம் விரட்டி ஆடுவதற்குரிய திறன் அவரிடம் இருக்கிறது.

- இவ்வாறு டெண்டுல்கர் கூறினார்.

# இந்திய - நியூசிலாந்து டெஸ்ட் சமன்

ஹைதராபாத், நவ. 17

இந்தியா - நியூஸிலாந்து அணிகளுக்கிடையில் ஹைதராபாத்தில் நடைபெற்றுவந்த இரண்டாவது டெஸ்ட் போட்டி சமனிலையில் முடிந்துள்ளது. இந்தியா - நியூஸிலாந்து கிரிக்கெட் அணிகளுக்கிடையிலான 2ஆவது டெஸ்ட் போட்டி ஹைதராபாத்தில் கடந்த வெள்ளியன்று தொடங்கியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணி, தனது முதல் இன்னிங்ஸிற்காக சகல விக்கெட்டுகளையும் இழந்து 350 ஓட்டங்களைச் சேர்த்தது. பின்னர் தனது இனிங்ஸைத் தொடங்கிய இந்திய அணி, 472 ஓட்டங்களைப் பெற்றது. கடைசி நாளான நேற்றுத் தனது இன்னிங்ஸைத் தொடர்ந்த நியூஸிலாந்து அணிக்கு, மைக்கலம் இரட்டைச் சதம் (225) அடித்துக் கொடுக்க, தமது இரண்டாவது இன்னிங்ஸிற்காக 8 விக்கெட்டுகள் இழப்புக்கு மொத்தமாக 448 ஓட்டங்களைப் பெற்றவேளை ஆட்டத்தை இடைநிறுத்தியது.

பின்னர், 327 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கு நோக்கிக் களமிறங்கிய இந்திய அணி, சிறப்பான ஆரம்பத்தைப் பெற்றது. ஷேவாக் 54 பந்துகளை எதிர்கொண்டு 54 ஓட்டங்களைச் சேர்த்தார். கம்பீர் 14 ஓட்டங்களைச் சேர்த்தார்.

ஆட்டம் முடிவதற்கு சில மணி நேரம் இருக்கும் போதே ஆட்டம் இடைநிறுத்தப்பட்டது. இதனால் ஆட்டம் சமனிலையில் முடிந்தது. அப்போது இந்திய அணி, எந்தவொரு விக்கெட்டும் இழக்காமல் 68 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

ஆட்ட நாயகனாக மக்கலம் தெரிவுசெய்யப்பட்டார்.

இந்தப் போட்டியும் சமனிலையில் முடிவுற்றமையால் 3 போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடர், 0-0 என்ற கணக்கில் சமனிலையில் நீடிக்கிறது. ஏற்கனவே நடந்த முதலாவது போட்டியும் சமனிலையில் முடிந்தமை குறிப்பிடத்தக்கது.






# முதல் டெஸ்டில் எவருக்கும் வெற்றி இல்லை

துபாய், நவ. 17

தென்னாபிரிக்கா - பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி சமனிலையில் முடிந்துள்ளது.

பாகிஸ்தான்-தென்னாபிரிக்கா அணிகள் மோதிய முதலாவது டெஸ்ட் துபாயில், நடந்துவந்தது. இதில், முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி, முதல் இனிங்ஸிற்காக 380 ஓட்டங்களைப் பெற்றது. பின்னர் தனது முதல் இன்னிங்ஸை ஆரம்பித்த பாகிஸ்தான் அணி, 248 ஓட்டங்களைப் பெற்றது.

தொடர்ந்து தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த தென்னாபிரிக்க அணி, அம்லா கலிஸ் ஆகியோரின் சதங்களின் உதவியுடன் மொத்தமாக 318 ஓட்டங்களைக் குவித்த நிலையில், ஆட்டத்தை இடைநிறுத்தியது.

பின்னர், 451 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கு நோக்கித் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி, நேற்றுமுன்தினம் ஆட்ட நேர முடிவின்போது இரண்டு விக்கெட்டுகள் இழப்புக்கு 100 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. பின்னர் கடைசி நாளான நேற்றுத் தனது இன்னிங்ஸைத் தொடர்ந்த பாகிஸ்தான் அணிக்கு, அஷார் அலி (63), யூனிஸ்கான் (131-ஆட்டமிழக்காமல்), மிஷ்பா உல் ஹக் (76 - ஆட்டமிழக்காமல்) ஆகியோர் கைகொடுக்க, ஆட்ட நேரம் முடியும் போது 3 விக்கெட்டுகள் மாத்திரம் இழப்புக்கு 343 ஓட்டங்களைப் பெற்றது. நேற்றுக் கடைசி நாள் என்பதால் ஆட்டம் சமனிலையை எட்டியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருட்கவியின் குருபூசை தினம்

அளவெட்டி, நவ. 17

அளவெட்டி, நாகேஸ்வரம் ஸ்ரீநாகவரத நாராயணர் தேவஸ்தான ஸ்தாபகரும், முன்னாள் இந்து சமயப் பேரவையின் தலைவருமான அதருட்கவி சீ.விநாசித்தம்பிப் புலவரின் குருபூசை இன்று புதன்கிழமை அனுஷ்டிக்கப்படுகிறது.

குருபூசை தினத்தை முன்னிட்டு இன்று காலை 8 மணிக்கு விசேட பூசை நடைபெறும் என்றும் மதியம் அடியார்களுக்கு அன்னதானமும் வழங்கப்படும் என்றும் ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (ஒ-160)


## விற்பனை நிலையத் திறப்பு விழா

இல.661/1, கே.கே.எஸ். வீதியில் இயங்கி வந்த கஜித் கட்டடப் பொருள்கள் விற்பனையகம் இடம் மாற்றப்பட்டு 51 - A ஓடை ஒழுங்கை, வண்ணார்பண்ணையில் (தட்டாதெரு சந்தியில் இருந்து 500 M இல்) 19.11.2010 அன்று காலை 7.30 - 8.30 மணி வரையிலான சுபவேளையில் திறந்து வைக்கப்படவுள்ளது. இத் திறப்பு விழா நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு வாடிக்கையாளர்கள், நண்பர்கள், ஆதரவா ளர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றேன்.

கஜித் கட்டடப் பொருள்கள் விற்பனையகம்,
ஓடை ஒழுங்கை, வண்ணார் பண்ணை. (106109)

தர்சன்,
உரிமையாளர்.






ஆசியாவிலேயே முதன்மை நிலை வகிக்கும்

An ISO 9001:2000 Certified Company

Spoken English பயிற்சி மையம்

veta®

Experts in English Training

Foundation, First மற்றும் Next Step க்கான புதிய பிரிவுகள் ஆரம்பம்

| யாழ்ப்பாணம் | நெல்லியடி |
|---|---|
| Sat, Sun 10.00 a.m. | Tue, Thu 9.00 a.m. |
| Tue, Thu 9.00 a.m. | Sat, Sun 2.30 a.m. |
| Mon, Wed 10.30 a.m. | |

நவீன நுட்பங்களுடன் அடிப்படையில் இருந்து இலகுவான முறையில் ஆங்கிலம் பேச பயிலலாம்.

DMI COMPUTER EDUCATION

No.113, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். Tel.: 021-222 4403

M.M.V. வீதி, (மத்திய மகாவித்தியாலயம் முன்பாக) நெல்லியடி. Tel.: 021 - 226 2470


## கண்ணீர் அஞ்சலி



12.11.2010 அன்று இறைபதமடைந்த எமது பாடசாலை கல்விசாரா உத்தியோகத்தர் அ.புஸ்பராஜ் அவர்களின் தந்தை

### அமரர் செல்லத்துரை அருளானந்தம்

அவர்களின் இழப்பினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு அமரரின் ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(106113) ஆசிரியர் நல்லுறவு மன்றம்,
யா/ மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை.

## கரைச்சிப் பிரதேச சபை – கிளிநொச்சி
## இறைச்சிக்கடைக்கான கேள்வி அறிவித்தல்

08.10.2010 இல் வெளியான உதயன் பத்திரிகை அறிவித்தல் தொடர்பாக கிளிநொச்சி மாவட்ட நீதிமன்ற வழக்கு 22/10 இன் பிரகாரம் 528 ஆம் இலக்க மாட்டிறைச்சிக்கடை (சபையின் கோவை பதிவேட்டின் படி இல.1) தவிர்ந்த ஏனையவற்றுக்கு பொருந்தாது என்பதனை வெளிப்படுத்துவதுடன் 06.10.2010 நண்பகல் 12 மணிக்கு முன்னர் கரைச்சிப் பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் கிடைத்துள்ள கேள்விப் பத்திரங்கள் யாவும் 19.11.2010 பிற்பகல் 2 மணிக்கு, 02.10.2010 உதயன் பத்திரிகையில் வெளியான அறிவித்தலின் 3 ஆம் நிபந்தனையில் விவரிக்கப்பட்டவாறு திறக்கப்படும் என்பதனை அறியத்தருகின்றேன்.

(சி-572894)

பே.ா. அருட்சோதி,
செயலாளர், கரைச்சிப் பிரதேச சபை, கிளிநொச்சி

## 17ஆம் ஆண்டு நினைவு அஞ்சலிகள்

### சின்னத்தம்பி சந்திரசேகரம்

(ஓய்வு பெற்ற P.W.D ஓவசியர்)
(R.M.C, R.D.A)



மண்ணுலகில்
24.07.1929
விண்ணுலகில்
25.11.1993

கொடுக்கும் மதிப்பாலே
கொடியவரையும் திருந்தவைக்கும்
பண்பாளன், தன்லாப
அடிப்படையில் நீதி சொல்லும்
ஆன்மீகம் அற்றவனாம்
அடக்கமுளான் நெஞ்சமெல்லாம்
அன்பு கொண்ட சந்திரசேகரனாம்
அண்ணல் அவன் காசினி விட்டைங்கரனார்
புரமேகிவிட்டானே

"அன்பகம்"
இணுவில் மேற்கு, இணுவில். (10610)

குடும்பத்தினர்.

# ஹஜ் பெருநாள்! ரணில் வாழ்த்து

கொழும்பு, நவ.17

பல லட்சக்கணக்கான மக்கள் வேற்றுமைகளுக்கு அப்பால் மக்கா நகரில் ஒன்றுகூடித் தமக்காகவும், ஏனையவர்களுக்காகவும், உலக அமைதிக்காகவும், பிரார்த்தனைகளில் ஈடுபட்டு வருகின்றனர். உலகில் மனிதத்துவம் மலர நாம் ஒன்றிணைவோம்.

மேற்கண்டவாறு ஹஜ்ஜுப் பெருநாளைக் கொண்டாடும் அனைத்து முஸ்லிம் மக்களுக்கும் ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க வாழ்த்துச் செய்தி அனுப்பியுள்ளார்.

வாழ்த்துச் செய்தியில் அவர் மேலும் கூறியுள்ளவை வருமாறு:-

உலோபித்தனம், அளவு கடந்த ஆசை என்பன அழிக்கப்பட்டு உள்ளம் பூராகவும் பரிசுத்தப்பட வேண்டும் என்ற படிப்பினையையே இப் பெருநாள் எமக்கு உணர்த்தி நிற்கிறது. இவ்வாறான உள்ளங்களிலேயே கருணை, அன்பு, பாசம் என்பவற்றை எதிர்பார்க்க முடியும். சுயநலமும், பேரார்வமும் மலிந்து காணப்படும் இன்றைய கால கட்டத்தில் ஹஜ் எங்களுக்குச் சிறந்த ஒரு படிப்பினையை உணர்த்தி நிற்கிறது.

எனவே, உலகில் மனிதத்துவம் மலர இப்புனித நாளில் நாம் அனைவரும் ஒன்றிணைந்து பிரார்த்திப்போம் - என்றார். (ஒ-சி)


## கார் விற்பனைக்கு

TOYATA
CARINA

14SRI......பவர் ஸ்ரேறிங் சகல வசதிகளுடனும்கூடிய கார் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0777698409, நல்லூர்.

## காணி விற்பனை

யாழ்ப்பாணம், கொழும்புத்துறை வீதியில் கிணறு உள்ள 6 பரப்புக் காணி ஒன்று விற்பனைக்கு.

தொடர்பு:-0771298201.

## காணி வாடகைக்கு

கிளிநொச்சியில் நீர்ப்பாசனத் திணைக்களத்துக்கு அருகாமையில் வெற்றுக்காணி வாடகைக்கு உண்டு. நிறுவனங்கள் தொடர்பு கொள்ளவும்.
தொ.பே.: 0776599791

## தவறி விட்டது

இல.2A, நாவன்மார் வீதி, நல்லூர் என்னும் முகவரியைச் சேர்ந்த திருமதி R.ஆவேஸ்வரன் என்பவரது புத்தகங்கள் மற்றும் கல்விசார் ஆவணங்கள் அடங்கிய அலுவலகப்பை வீட்டில் இருந்து பல்கலைக்கழகம் செல்லும் வழியில் (பருத்தித்துறை வீதி, நல்லூர்) பின்வீதி, சிவன் அம்மன் வீதியூடாக) நேற்று (16.11.2010) செவ்வாய்க்கிழமை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தந்துதவுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

தொ.பே.: 0777740614

## வீடு வாடகைக்குத் தேவை

நான்கு பேர் கொண்ட குடும்பத்திற்கு நாவலர் வீதி, ஆடியபாதம் வீதி, பருத்தித்துறை வீதி, கே. கே. எஸ். வீதி ஆகியவற்றுக்கு இடைப்பட்ட பிரதேசத்தில் வீடொன்று வாடகைக்குத் தேவை.

தொடர்பு: 0775783629

## மணமகள் தேவை

யாழ். இந்துகௌரவ குடும்பத்தைச் சேர்ந்த லண்டன் பிரஜாவுரிமை பெற்ற 1979 ஆம் ஆண்டு பிறந்த 104 கிரகபாவமுடைய செவ்வாய்க்குற்றமற்ற மணமகனுக்கு படித்த, அழகிய, குடும்பப் பாங்கான மணமகள் தேவை.

தொடர்பு: 0750404320

## காணி விற்பனைக்கு

துன்னாலை வடக்கு, கரவெட்டியில் வீதியோரமாக அமைந்த 10½ பரப்புக் காணி 50 இற்கும் மேற்பட்ட பனைமரங்களுடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0770467023

## சமைத்த உணவுகள் தேவை

வீட்டிலே சமைத்த இடியப்பம்,
தோசை, இட்லி, பிட்டு, சம்பல், சட்னி
போன்றவை யாழில் இயங்கப்போகும்
உணவகத்திற்கு ஓடர் முறையில் தேவை.

மேலதிக தொடர்புகளுக்கு
Northern Breeze Hotels
Tel : 0775585913


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## அடிப்படை உடல் பரிசோதனை.




கிரமமான உடல் பரிசோதனைகள் பாரிய நோய்களை முற்கூட்டியே இனங்காட்டி உங்களை பாதுகாக்கும்.

*இலவச வைத்திய ஆலோசனை வழங்கப்படும்

A full package includes
Scan, ECG, Blood and Urine Tests & Reports

Lava Diagnosis & Lava Hospitals

Member of Reg No:PV74170
Lava Holdings Pvt Ltd

கணனி மயப்படுத்தப்பட்ட ஆய்வுகூடம் மற்றும் அறிக்கைகள்.

Tel: 0212224333 | # 75, Temple Road, Jaffna | www.Lavahospitals.com


## கண்ணீர் அஞ்சலி



எமது அன்புக்குப் பாத்திரமான
சின்னம்மா

### திருமதி பொன்னுத்துரை அருளம்மா

அவர்கள் கடந்த 15.11.2010 திங்கட்கிழமை இறைபதம் அடைந்து விட்டார். அன்னாரது மறைவு எமக்குப் பெருவேதனையை அளிக்கின்றது.

அன்பின் திருவுருவாய் பாசத்தின்
இருப்பிடமாய் இன்முகத்துடன்
பழகியஅருளம்மா அக்காவே!
உங்களின் மறைவு எம்மால் தாங்க முடியவில்லையே
எந்நேரமும் சிரித்த முகத்துடன் காண வருவீர்களே
நீங்கள் மறைந்தாலும் உங்கள் அன்பு முகம்
எங்கள் நெஞ்சை விட்டு அகலவே அகலாது
உங்கள் ஆத்மா அமைதியுற்றுச் சாந்திபெறப் பிரார்த்திக்கின்றோம்.

நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

சத்தியசீலன் குடும்பம்,
சண்முகாநந்தன் குடும்பம்,
விஜயலக்சுமி குடும்பம்,
மகேசன் குடும்பம் (ராஜா கிறீம் ஹவுஸ்).
(10618)

## மரண அறிவித்தல்கள்

### பொன்னுத்துரை அருளம்மா



தலையாளியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை அருளம்மா நேற்றுமுன்தினம் (15-11-2010) திங்கட்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - அன்னம்மா தம்பதியினரின் மகளும், காலஞ் சென்ற சிவகுரு-சின்னாச்சி தம்பதியினரின் மருமகளும், காலஞ்சென்ற பொன்னுத்துரையின் அன்பு மனைவியும்,

மோகன் (ஹொலண்ட்), அனுஷியா (பிரான்ஸ்), மதியழகன் (மதி-பிரான்ஸ்), சாவித்திரி (உஷா-பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்றவர்களான நவரத்தினம், பொன்மணி, கந்தசாமி மற்றும் இராசம்மா (சின்னக்கிளி) தவவதி (கமலம்) ஆகியோரின் சகோதரியும் வக்ஷலா (ஹொலண்ட்), ஞானசீலன் (பிரான்ஸ்), நந்தினி (பிரான்ஸ்), திருச்செல்வம் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியும், டிசாந்தி, பவித்திரன், கோபிகா, விதுர்சன் (அனைவரும் ஹொலண்ட்), பிரான்சைச் சேர்ந்தவர்களான பிரவின், பிரதீஸ், பிரஜித், கவிசன், சஹானா, ஆருஜன், அஸ்வின், அஜந்த் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.11.2010) புதன்கிழமை காலை 9 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்துக்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தலையாளி லேன்,
யாழ்ப்பாணம். (சி/572884)

தகவல்:
பிள்ளைகள்

### இளையதம்பி கணேசு (M.R)

(தவம் லொறி உரிமையாளர்)

அச்சுவேலி தெற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட இளையதம்பி கணேசு 14.11.2010 ஞாயிற்றுக்கிழமை இந்தியாவில் காலமானர்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையதம்பி- சேதுப்பிள்ளை தம்பதியரின் அன்புமகனும், காலஞ்சென்றவர்களான சண்முகம்- கண்மணி தம்பதியரின் அன்பு மருமகனும், தவமலரின் பாசமிகு கணவரும் செல்லமணி, விநாயகமூர்த்தி ஆகியோரின் அன்புச் சகோதரனும், செகசோதிமலர், கிருஷ்ணமூர்த்தி, தேவமலர் காலஞ்சென்ற முருகமூர்த்தி ஆகியோரின் மைத்துனரும், ஸ்ரீகுகன், ஜீவாகரன்(கனடா), கங்காதரன் (லண்டன்), பிரபாகரன் (லண்டன்), உமா(சுவிஸ்), றமா (பிரான்ஸ்), ஆகியோரின் பாசமிகுதந்தையும், பத்மதேவி, புனிதா, பாபறா(Babara), பாமினி, நீதிராஜா ஆகியோரின் அன்பு மாமனும், கணானன், கோகுலன், அபிநயா, தர்ஷிகா, நிறோஜன், மதுசா, மானசி, கைசன், ஹைறா, ஹைநாத், ஹயானி, லசானா, அபிர்னா, பூஜிதா, பூர்விகா, அர்சிகா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.11.2010) புதன்கிழமை அவரது அச்சுவேலி தெற்கு இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் பி.ப. ஒரு மணிக்கு தகனக்கிரியைக்காக அச்சுவேலி தெற்கு முழக்கன் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'மலரகம்,'
அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி.

தகவல்:
க.தவமலர் (மனைவி),
பிள்ளைகள்.

## 'பிரித்' ஓதுவதால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திஸ்ஸ அத்தநாயக்க.

சிறிகொத்தாவில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

மதம், கலாசாரத்தைப் பேணிப் பாதுகாக்கும் நாட்டில் சூதாட்டத்திற்கு வழிகோலும் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டதாலேயே நாடாளுமன்றம் வெள்ளத்தில் மூழ்கியது.

1992 ஆம் ஆண்டும் நாடாளுமன்றம் வெள்ளத்தில் மூழ்கியது. அதையடுத்து ஆட்சிமாற் றம் ஏற்பட்டது. இப்போதும் அதுபோன்ற நிலை ஏற்படலாம் - இவ்வாறு திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார். (ஒ-சி)


### பாராட்டி வாழ்த்துகின்றோம்



நேற்று (16.11.2010) பண்டார நாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் எமது நண்பனும் ஊழியருமாகிய

**நல்லையா பரீகரன்**

அவர்கள் உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா (HNDA) என்னும் பட்டத்தைப் பெற்றுக்கொண்டதையிட்டுப் பாராட்டி வழ்த்துவதுடன் மேலும் பல பட்டங்களை பெற வாழ்த்து கின்றோம்.

முகாமையாளரும்,
ஊழியர்களும்.
ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்

(சி/572892)



### பாராட்டி வாழ்த்துகின்றோம்



16.11.2010 அன்று பண்டாரநாயக்கா சர்வ தேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற (HNDA) பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெற்ற எமது (A.D.O)

**பாலேந்திரன் ஞானச்செல்வம்**

அவர்களை மனமார பாராட்டி வாழ்த்துகின்றோம்.

Union Assurance-
PP Branch

வாழ்த்துவோர்:
T. டேவிட்
K. வசிகரன், ரகு

(106116)



### பாராட்டி வாழ்த்துகின்றோம்



நேற்றையதினம் (16.11.2010)செவ்வாய்க்கிழமை கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற 7ஆவது பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெற்ற எங்கள் சகோதரி

**சற்குணராசா கினுஜா** அவர்கள் உயர்தேசிய டிப்ளோமா (HNDM) எனும் பட்டத்தைப் பெற்றுக்கொண்டார். இவர் மேலும் பட்டங்களும் பதவிகளும் பெற்று சகல சௌபாக்கியமும் பெற எங்கள் ஆலய இறைவன் நல்லூர் தெற்கு ஸ்ரீ கற்பகவிநாயகரை வேண்டி வாழ்க வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
ஜனோஜா (சகோதரி), தீபன், ஹரி, வரன் (தம்பிமார்கள்),
வனிதா, மதுசாந்தி (சிநேகிதிகள்).

கச்சேரி,
பாரதி வீதி.


## எதிர் காலத்தில் இந்துக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வடபகுதியில் ஒவ்வொரு தனி மனிதனுக்கும் தொல்பொருள்களைப் பேணிப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு உண்டு. சேதமடைந்த தொல்பொருள்களை மீள் நிர்மாணம் செய்வதே எமது கடமை. அதனைப் பேணிப்பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அனைத்து தமிழ் மக்களுக்கும் உண்டு.

யாழ்ப்பாணத் தொல்பொருள் பற்றிய ஆய்வில் யாழ். பல்கலைக்கழக தொல்லியல் துறைப் பட்டதாரிகளையே ஈடுபடுத்தவுள்ளோம். அவர்களுக்கு மேலும் வேலைவாய்ப்பை வழங்கி ஊக்குவிக்க உள்ளோம். இதற்கு தமிழ் மக்கள் தமது பிரதேசத்தில் உள்ள தொல்போருள் பற்றிய தகவல்களை எமக்கு வழங்கவேண்டும். (த-319)

## யாழ். நாக விகாரை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைக்கப்படும். தொடர்ந்து பூஜைகள் இடம்பெறும். 7 மணிக்கு ஊர்வலம் நடைபெற்று 9 மணிக்கு பிரித் ஓதப்படும்.

மறுநாள் காலை விஷேட பூஜைகள் நடைபெறும். காலை 9 மணிக்கும் முற்பகல் 11.30 மணிக்கும் அன்னதானம் வழங்கப்படுவதுடன் அன்றையதினம் இரவு 7 மணிக்கு விசேட பூஜை இடம்பெறும் என்று பலாலி ஊடகப் பிரிவு அறி வித்துள்ளது. (ஒ-ஐ)


### வீடு வாடகைக்குத் தேவை

சிறிய குடும்பமொன்றுக்கு அளவான வீடு வாடகைக்குத் தேவை. யாழ். நகரை அண்டிய பகுதிகள் விரும்பத்தக்கது.

தொடர்பு: 0777341951



### பாராட்டி வாழ்த்துகின்றோம்



நேற்று (16.11.2010) செவ்வாய்க்கிழமை கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா (HNDA) பட்டம் பெற்ற எமது நண்பனான

**ந.ரமணப் பிரகாஷ்**

அவர்களை மனமுவந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்.

மனோகரார் சந்தி,
யாழ்ப்பாணம்

(106120)

வாழ்த்துவோர்
நண்பர்கள்.



### பாராட்டி வாழ்த்துகின்றோம்



**ஸ்ரீதரன் ஷோபிகா**

கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று (16.11.2010) செவ்வாய்க்கிழமை நடந்த பட்டமளிப்பு விழாவில் உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா (HNDA) என்னும் பட்டம் பெற்றதையிட்டு வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
பெரியப்பா, பெரியம்மா,
அண்ணாமார், கலாஅண்ணி.

உடுவில்.



### மக்கள்வங்கி யாழ். பல்கலைக்கழகக்கிளை பிரியாவிடை நிகழ்வும் சேவைநலன் பாராட்டும்



எமது மக்கள்வங்கி, யாழ். பல்கலைக்கழக கிளையின் முகாமையாளராக அளப்பரிய சேவையாற்றி, தற்போது பதவிஉயர்வு பெற்று மக்கள்வங்கி, யாழ்.பிராந்திய தலைமைக்காரியாலயத்தில் உதவிப் பிராந்திய முகாமையாளராக பணியாற்றி வருகின்ற

**திரு. நா.நாகேஸ்வரன்**

அவர்களின் சேவையைப்பாராட்டி இன்று (17.11.2010) புதன்கிழமை பி.ப. 3.30 மணியளவில் கொக்குவில் வளர்மதி முன்னேற்றக்கழக மண்டபத்தில் அவரைக் கௌரவிப்பதுடன், அவர் மேன் மேலும் பல பதவிஉயர்வுகள் பெற்று மகிழ்வுடனும் சிறப்புடனும் வாழ வாழ்த்துகின்றோம்.

மக்கள் வங்கி,
யாழ்.பல்கலைக்கழகக் கிளை
சமுகத்தினர்.



மாபெரும் விலைக்கழிவு... 3 வருட உத்தரவாதம்...எங்கும் இல்லாத அதிரடி விலையில். SALE

கணனிகளை இலகு தவணைக் கொடுப்பனவு முறையில் பெறுவதற்கான அனைத்து வசதியும் செய்து கொடுக்கபடும்.

MEGA SALE

PCST PC SOLUTIONS TECHNOLOGIES (PVT)LTD

IBM DELL AVIRA KASPERSKY acer bitdefender symantec NOD32 EPSON GIGABYTE EPSON SAMSUNG hp D-Link A4 TECH FOXCONN

**PCST 1** — 3 Year's Warranty
Intel Atom 1.7Ghz
Intel D410PTL Mother Board
320GB Harddisk
Kingston 1GB Ram
DVD Writer, Casing
550W Power supply
15' LCD Acer/AOC Monitor,
Keyboard
Mouse, Speaker
ONLY Rs36,500/=

**PCST 2** — 3 Year's Warranty
Intel Core 2 Duo 2.93Ghz
Foxcorn Mother Board
500GB Harddisk
Kingston 2GB Ram
DVD Writer,Casing
550W Power Supply
19' LCD Acer/ LG Monitor,
Keyboard
Mouse, Speaker
ONLY Rs53,500/=




**PCST 3** — 3 Year's Warranty
Intel Dual Core 2.8Ghz
Foxcorn Mother Board
320GB Harddisk
Kingston 1GB Ram
DVD Writer,Casing
550W Power Supply
15' LCD Acer/AOC Monitor
Keyboard
Mouse,Speaker
ONLY Rs41,800/=

**PCST 4** — 3 Year's Warranty
Intel i3 2.93Ghz
Intel Mother Board
500GB Harddisk
Kingston 2GB DDR3 Ram
DVD Writer, Casing
550W Power Supply
19' LCD Acer/LG Monitor,
Keyboard
Mouse, Speaker
ONLY Rs58,200/=

Service & Repairing On Call Service Contact Us 0212229644

Computer Problems? Have Virus? Or Computer Just Running Slow?Spyware Trouble?

IMATION PENDRIVE மிகக் குறைந்த விலையில் 5 வருட உத்தரவாதத்துடன்.

Available Multi HighSpeed Dongle

M.M.V Road,Nelliady.
T.P: 021 226 4999

305, Kasth... Road Jaffna T.P: 021 222 1101, 021 222 9644
E.Mail pcst@pcstjaffna.com, Web. www.pcstjaffna.com

No:5, Kanakapuram Road,
Kilinochchi.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடேசன், புலித்தேவன், ரமேஷ் சரணடைய.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெற்றது? ப:- வெள்ளமுள்ளி வாய்க்கால் மற்றும் கரையாமுள்ளி வாய்க்கால் ஆகிய பகுதிகளில்.

கே:- ரமேஷ், நடேசன், புலித்தேவன் ஆகியோர் இறந்தமை உங்களுக்கு அறிவிக் கப்பட்டிருந்தது. அவர்கள் மூவரும் உயிரிழந்த இடமும் உங்களுக்குத் தெரியும். அதனை விளக்க முடியுமா? ப:- 17ஆம் திகதி மாலை நேரம் 58ஆவது படைப்பிரிவு 350 அல்லது 250 மீற்றர் பரப்பளவில் தமிழீழ விடுதலைப் புலிகளை முற்றுகையிட்டது.

கே:- எவ்வாறு அவர்கள் இறந்தார்கள்? ப:- யுத்தத்தின் போதே அவர்கள் இறந்தார்கள்.

### சரண் அடைய முயற்சிக்கவில்லை

கே:- அவர்கள் எந்தச் சந்தர்ப்பத்திலும் சரணடைய முயற்சித்தார்களா? ப:- இல்லை.

கே:- அவ்வாறு அவர்கள் சரணடைய முயற்சித்திருந்தால் நீங்கள் என்ன செய்திருப்பீர்கள்? ப:- சந்தோஷமாக அவர்களை வரவேற்றிருப்பேன்.

கே:- (சண்டே லீடர் பத்திரிகையை எடுத்துக்காட்டி) 2009 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 13ஆம் திகதி இந்த சண்டே லீடர் பத்திரிகை வெளிவந்துள்ளது. "Gota ordered to shot' என்று அந்தப் பத்திரிகையின் ஆசிரியர் பிரெட்ரிகா ஜான்ஸ் தலைப்பிட்டுள்ளார். இப்பத்திரிகை வெளிவந்தவுடன் அதனை வாசித்தீர்களா?ப:- ஆம்.

கே:- அப்போது உங்களுக்கு ஏதாவது ஞாபகம் வந்ததா? ப:- அந்தப் பத்திரிகை வெளியாவதற்குச் சில தினங்களுக்கு முன்னர் பிரெட்ரிகா ஜான்ஸ் எனக்குத் தொலைபேசி மூலம் அழைப்பை மேற்கொண்டார்.

கே:- அப்போது நீங்கள் எங்கே இருந்தீர்கள்? ப:- இராணுவத் தலைமை யகத்திலுள்ள எனது காரியாலயத்தில் இருந்தேன்.

கே:- பிரெட்ரிகா ஜான்ஸ் உங்களுக்கு எப்போது தொலைபேசி மூலம் அழைப்பை மேற்கொண்டார். ப:-சரியான திகதி எனக்கு ஞாபகமில்லை.

கே:- அது ஒரு சனிக்கிழமையா? ப:- அது ஞாயிற்றுக்கிழமை வெளிவரும் பத்திரிகை. சனிக்கிழமைகளில் நான் அலுவலகத்தில் இருக்கமாட்டேன். ஆகையால் அவர் சனிக்கிழமைக்கு முன்னர் அழைப்பு மேற்கொண்டிருக்கலாம்.

கே:- பிரெட்ரிகா ஜான்ஸ் உங்களுக்கு அழைப்பு மேற்கொள்ள முன்னர் அது குறித்து உங்களுக்குத் தெரியவந்ததா? ப:- எனது அலுவலகத் தொலைபேசி இயக்குநரிடம் பிரெட்ரிகா ஜான்ஸ் அழைப்பு மேற்கொண்டு, நான் அலுவலகத்தில் உள்ளேனா என வினவியதை அவர் என்னிடம் கூறினார்.

கே:- அதன் பின்னர் உங்களிடம் தொடர்பு கொண்டாரா? ப:- ஆம்.

கே:- பிரெட்ரிகா ஜான்ஸ் உங்களிடம் என்ன தெரிவித்தார்? ப:- 'சண்டே லீடர்'பத்திரிகை ஆசிரியர் எனத் தன்னை அறிமுகப்படுத்தினார். பின்னர் சரத் பொன்சேகாவுடனான செவ்வியின்போது இறுதி யுத்தத்தின் போது மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவுக்கு பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, சரணடைய வரும் போராளிகளை சுட்டுக் கொலை செய்யும்படி உத்தரவிட்டுள்ளார் என சரத்பொன்சேகா தெரிவித்தார். இதற்கு உங்களது கருத்து என்னவென என்னிடம் பிரெட்ரிகா ஜான்ஸ் வினவினார்.

கே:- நீங்கள் அப்போது என்ன நினைத்தீர்கள்? ப:- 30 வருட காலமாக முடிவுக்கு வராத யுத்தம் நிறைவு பெற்றது. களத்திலிருந்து யுத்தத்தை முன்னெடுத்த இராணுவ வீரர், கட்டளைத் தளபதி என்ற வகையில் நான் அந்தக் கூற்றுக் குறித்து கவலையடைந்தேன்.

கே:- பிரெட்ரிகா ஜான்ஸ் உங்களிடம் கேட்ட கேள்விக்கு விடையளித்தீர்களா? ப:- ஆம்.

கே:- என்ன கூறினீர்கள்? ப:- இது தொடர்பாக எனக்குக் கருத்துத் தெரிவிக்க முடியாது. இராணுவ ஊடகப் பணிப்பாளர் உள்ளார். அவரிடம் கேளுங்கள் என்றேன்.

கே:- நீங்கள் 'நோ கொமண்ட்' என்ற வசனத்தைப் பயன்படுத்தினீர்களா?ப:-ஆம்.

கே:- நீங்கள் அந்த விடயத்தை மறுத்தீர்களா?ப:- இல்லை. நான் அதற்கு கருத்துத் தெரிவிக்கவில்லை.

கே:- அப்படி ஒரு சம்பவம் இடம்பெற்றதா?ப:- இல்லை.

கே:- அதற்குப் பின்னர் உங்களை மீண்டும் தொடர்பு கொண்டாரா?ப:- இல்லை.

### சரண் அடைய வருவோரை சுட்டுக்கொல்லுமாறு உத்தரவு வரவில்லை

கே:- இறுதி யுத்தம் இடம்பெற்றுக்கொண்டிருந்தவேளை சரத் பொன்சேகா இலங்கையில் இருக்கவில்லை என நீங்கள் நேற்றுமுன்தினம் தெரிவித்தீர்கள். அதன் பின்னர் அவரை நீங்கள் சந்தித்தீர்களா? ப:- ஆம். யுத்த வெற்றி வைபவங்களின்போது பல தடவை சந்தித்தேன்.

கே:- பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவினால் உங்கஞ்க்கு இவ்வாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டதா என்று சரத் பொன்சேகா எந்தச் சந்தர்ப்பத்திலும் உங்களிடம் கேட்டாரா?

(இதன்போது இந்தக் கேள்வியைக் கேட்கவேண்டாம் என நீதிபதிகள் கூறினர். இல்லை இது முக்கியமான கேள்வி என பிரதி சொலிசிட்டர் ஜெனரல் தெரிவித்த போதிலும் அந்தக் கேள்வியைக் கேட்பதற்கு நீதிபதிகள் அனுமதியளிக்கவில்லை.)

கே:- சரணடைய வருபவர்களைச் சுடுமாறு பாதுகாப்புச் செயலாளரினால் உங்களுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ள விடயம் உண்மையா? ப:- முற்றிலும் பொய்.

கே:- அவ்வாறான உத்தரவு உங்களுக்குக் கிடைத்ததா? ப:- இல்லை.

கே:- அவ்வாறு உத்தரவு ஒன்று கிடைக்கப் பெற்றது என்று உங்களது படைப் பிரிவோடு இணைந்து வந்திருந்த ஊடகவியலாளர்களுக்குத் தெரிவித்தீர்களா? ப:- இல்லை.

கே:- களத்திலிருந்த இராணுவத்தினருக்கு அவ்வாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்று உங்களுக்குத் தெரியவந்ததா? ப:- இல்லை. அண்மையில் கொழும்பிலுள்ள பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நல்லிணக்க ஆணைக் குழுவுக்கு முன்பாக சாட்சியமளிக்கையில் இவ்வாறான கேள்விகூட என்னிடம் கேட்கப் படவில்லை.

### இராணுவத்துக்கு ஏற்படுத்தப்பட்ட அபகீர்த்தி

கே:- 2009 ஆம் ஆண்டு டிசம்பர் 13ஆம் திகதி 'சண்டே லீடர்'பத்திரிகையில் வெளிவந்த இச் செய்தியைப் பார்த்தவுடன் உங்களுக்கு என்ன உணர்வு ஏற்பட்டது?ப:- இது ஒரு குற்றச்சாட்டு. 58 ஆவது படைப்பிரிவுக்கு ஏற்படுத்தப்பட்ட பெரும் அவமானம். இலங்கை இராணுவத்தினருக்கு ஏற்படுத்தப்பட்ட அபகீர்த்தி. அத்துடன் தனிப்பட்ட ரீதியில் எனது குடும்பத்துக்கு ஏற்பட்ட அவமானம் எனக் கருதுகிறேன்.

கே:- யுத்த களத்தில் தொலைபேசி பாவித்தீர்களா? எந்த வகையான தொலைபேசி? ப:- ஆம். சி.டி.எம்.ஏ. தொலைபேசி.

கே:- கையடக்கத் தொலைபேசி பாவித்தீர்களா? ப:- மன்னாரிலும், பூநகரியிலும் பாவித்தேன்.

கே:- களத்தில் இருந்தபோது உயர் அதிகாரிகளிடம் இருந்து உங்களுக்குத் தொலைபேசி மூலம் கட்டளை பிறப்பிக்கப்பட்டால் அல்லது தொடர்பு கொண்டு பேசினால் ஊடகவியலாளர்களுக்கு முன்பாக நீங்கள் கதைப்பீர்களா? ப:- இல்லை. தொலைபேசியை எடுத்துக்கொண்டு வேறொரு இடத்துக்குச் சென்றே கதைப்பேன்.

கே:- உங்களுக்குப் பிள்ளைகள் உள்ளார்களா? ப:- ஆம். இரண்டு பெண் பிள்ளைகள் உள்ளார்கள்.

கே:- 'சண்டே லீடர்' பத்திரிகையில் வெளியான செய்தியை ஐக்கிய நாடுகள் உள்ளிட்ட நாடுகள் அறிந்திருக்குமா? ப:- ஆம். அறிந்திருக்கக்கூடும்.(இதனையடுத்து பிரதிவாதியின் சட்டத்தரணி நளின் லத்துவஹெட்டி, 3ஆவது சாட்சியான மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவைச் சிறிதுநேரம் குறுக்கு விசாரணை செய்தார்)

கே:- 'சண்டே லீடர்' பத்திரிகையில் வெளிவந்த விடயம் உங்களுக்குத் தெரியும். செவ்வியின் போது உண்மையாக சரத் பொன்சேகாவினால் இவை கூறப்பட்டவை என உங்களுக்குத் தெரியுமா? ப:- சரத் பொன்சேகா, பிரெட்ரிகா ஜான்ஸுக்குத் தெரிவித்தவை எனத் தெரியும்.

கே:- இராணுவ அதிகாரிகளுக்கு எவ்வாறு நியமனங்கள் வழங்கப்படும். ப:- மூன்று வகையான குழுக்கள் உள்ளன. அந்தக் குழுக்களினால் நியமனங்கள் வழங் கப்படும்.

கே:- யுத்தத்துக்கு சீனா நிதி மற்றும் வேறு உதவிகள் வழங்கியதா?

(இதன்போது குறுக்கிட்ட பிரதி சொலிசிட்டர் ஜெனரல், இந்தக் கேள்வியை நான் எதிர்க்கிறேன். ஏனெனில், இது தேசியப் பாதுகாப்புக்கும் இலங்கைக்கும் பங்கம் ஏற்படுத்தும் என்றார். இதற்கு நீதிபதி தீபாலி விஜேசுந்தர, அவை பத்திரிகைகளிலும் வெளிவந்துள்ளன என்று கூறி பிரதி சொலிசிட்டரை அமரும்படி சைகை காட்டினார்.)

கே:- அவ்வாறு சீனாவிடம் இருந்து உதவிகள் பெறப்பட்டனவா? ப:- சீனாவிடம் இருந்து மட்டுமல்ல, பல நாடுகளில் இருந்து உதவிகள் வழங்கப்பட்டன.


யாழ். நகரில்
முதல் முறையாக நம்பமுடியாத கட்டணக் கழிவில்



சர்வதேச கற்கை நெறிகள்
நீங்கள் காலவிரயமின்றிப் பட்டதாரியாக வேண்டுமா? சர்வதேச அங்கீகாரம் கொண்ட பட்டப்படிப்பையும், அதற்கு நிகரான தொழிலையும் எதிர்பார்க்கிறீர்களா?
காலத்தை வீணடிக்காது நன்கு உழைத்துச் சமூகத்திலே முன்னேற வேண்டுமா?
கவலையை விடுங்கள் இன்றே எம்மிடம் விரையுங்கள்....
நீங்கள் குறுகிய காலத்தில் பின்வரும் கற்கை நெறிகளைப் பெற்றுக்கொள்ள ஓர் அரிய சந்தர்ப்பம் உங்களை நாடி வந்திருக்கின்றது.
100% விசா உத்தரவாதம்
Pre. MBA (Master of Business Administration)
To whom : Degree holders, non business degree holders HNDA, HNDM
(Advanced Technical Institute)
Final Degree (Top Up) MBA in UK
Course Duration: 9 Months
After G.C.E. A/L or O/L → 6 Months / 3 Months Foundation Diploma @ BCHS → 2½Years Diploma & Degree @ London (UK), USA, Canada, Australia, Newzealand
இவ்வாறான பயிற்சி நெறிகளுக்கு 100% நல்ல வேலைவாய்ப்பு வெளிநாடுகளில் உண்டு
Foundation Diploma in Hospitality Management
Foundation Diploma in Nursing (Health & Social Care)
6 Months — Diploma & Degree @ UK, Canada, USA, Newzealand & Australia
Foundation Diploma in Management
Foundation Diploma in Human Rights & Principles of laws
3 Months — Diploma & Degree @ UK, Canada, USA, Newzealand & Australia
இவ் அடிப்படை நெறிகளைக் கற்பதினால் வெளிநாடுகளில் கற்கை நெறிகளை இலகுவாகக் கற்க முடியும்
IELTS (International English Language Testing System)
We guarantee minimum band 6.0 Upwards
பிரபல விரிவுரையாளர்கள் மூலம் புதிய நவீன முறைக்கமையவும் Audio, Video Visuals ஊடாகக் கற்பிக்கப்படுகிறது.
Student Visa மூலம் வெளிநாடு செல்பவர்களுக்கானது
Spoken English - 6 Months
Diploma in English - 6 Months
Advanced Diploma in English - 4 Months
விசேடமாகத் தயாரிக்கப்பட்ட பயிற்சிகள், இலகு விளக்கங்களுடன் மாணவர்கள் எளிதாகக் கற்கக்கூடிய வகையில் அமைந்துள்ளது.
உங்களின் பட்டப்படிப்புச் சம்பந்தமான கற்கைநெறி வழிகாட்டுதல்களுக்கு இத்துறையிலே மிக அனுபவம் வாய்ந்த எமது சட்டத் தரணிகள் உங்களுக்கு உதவக் காத்திருக்கின்றார்கள்.
Courses' Commence on: 20.11.2010, 24.11.2010, 27.11.2010 — காலை :10.00மணி, மாலை :03.00மணி
மேலதிக விபரங்களுக்கு :
BRITISH COLLEGE OF HIGHER STUDIES (BCHS)
Tel : 021 222 4550, Hot lines : 077 7222422, 071 4299935 E-mail : info@bchs.lk
No.15, Sirambiyadi Lane, Off Stanley Road, Jaffna.



NALIN INFORMATION TECHNOLOGIES PVT LTD

| | | | |
|---|---|---|---|
| | Intel Pentium — 39500/- | Intel Core 2 Duo — 52000/- | Intel Core i3 — 53500/- |
| PROCESSOR | 2.80 GHz | 2.93 GHz | CORE i3 |
| MOTHERBOARD | ASUS G31 | ASUS P5G41T | FOXCO/ 455MXV |
| RAM | KING/ 2GB/DDR2 | KING/ 2GB/DDR3 | KING/ 2GB/DDR3 |
| HARD DISK | SAM/ 320GB | SAM/ 500GB | SAM/ 500GB |
| DVD WRITER | SAMSUNG | SAMSUNG | SAMSUNG |
| MONITOR | 16" AOC | 19" ACER | 19" ACER |
| KEYBOARD | MULTI LANGUAGE | MULTI LANGUAGE | MULTI LANGUAGE |
| MOUSE | SQUTE | SQUTE | SQUTE |
| CASING | POWERLOGIC | POWERLOGIC | POWERLOGIC |

| | |
|---|---|
| | Intel Core i5 — 66500/- |
| PROCESSOR | 2.93 GHz |
| MOTHERBOARD | INTEL DH55HC |
| RAM | KING/ 2GB/DDR3 |
| HARD DISK | SAM/ 500GB |
| DVD WRITER | SAMSUNG |
| MONITOR | 19" ACER |
| KEYBOARD | MULTI LANGUAGE |
| MOUSE | SQUTE |
| CASING | POWERLOGIC |

அனைத்து கணனிகளுக்கும் 3வருட உத்தரவாதம் வழங்கப்படுவதுடன் COMPUTER TABLE 10% விலைக்கழிவில் வழங்கப்படும்.
LCD, LED MONITOR (16", 19", 23",) HSDPA MODEM (4 MODELS) மிகவும் மலிவான விலையில் எம்மிடம்
NALIN information Technologies Pvt Ltd
195/4, PARAMESWARA JUNCTION, TP: 021 2221166, 0777667974



Quick Learning Course
Spoken English with Grammar
Duration 1 Month Rs.2000.00
உரையாடட் பயிற்சிகள், பேச்சுப் பயிற்சிகள், உச்சரிப்புப் பயிற்சிகள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைய Audio & Video visuals மூலமாக நடாத்தப்படுகிறது
A/L பரீட்சை எழுதிய மாணவர்கள் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும்
திங்கள் முதல் வெள்ளிவரை வகுப்புகள் நடைபெறும் & Full time special
30-11-2010
Batch 6 : 8.00 AM- 11.00 AM
Batch 7 : 11.00 AM - 2.00 PM
Batch 8 : 2.00 PM - 5.00 PM
BCHS
BRITISH COLLEGE OF HIGHER STUDIES
No.15 2/1, Sirambiyadi Lane, Off Stanley Road, Jaffna. ஆரியகுளத்துச் சந்திக்கருகில் கொசி Hotel மேல்
Tel :021 2224550 HotLines: 0777222422/ 0777585913/0714299935



Personal Class (கணினி)
* MS office, Internet and E-mail,DTP, Web Design, Graphic Design, ஆகிய கற்கை நெறிகள் உங்கள் வீடுகளில் வந்து கற் பிக்கப்படும்.
* பயிற்சியின் பின் சான்றிதழ்கள் வழங்கப்படும்.
* குறிப்பு:- கணினி இல்லாதவர்களுக்கு எனது Laptop மூலமாகப் பயிற்சியளிக்கப்படும்.
* ஆசிரியர்:- KRC
* T.P- 0779672038 நல்லூர்.



உடன் விற்பனைக்கு
Pulsar 150 cc
Digital model
UR.9xxx
Mitsubishi Lancer Car
11-xxxx
தொடர்புக்கு :
186, யாழ். வீதி,
மானிப்பாய்,
0772247627,
0776179118


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட் [illegible] வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 17.11.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org